www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1 - 15 ஏப்ரல் '89
4-10
விலை ரூ: 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




சட்டமன்ற ரௌடித்தனங்கள்:

## அவமானமாகக் கருதவில்லை; அவசியமெனச் செய்கிறார்கள்!

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




☆ போலீசு அதிகாரிகளின் ஒழுக்கக்கேடு என்ற தலைப்பில் கொலை வெறியனும் காம வெறியனுமான தேவாரத்தை எடுப்பாகவும் துணிச்சலாகவும் அம்பலப்படுத்திக் காட்டிய உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

கோ.கிருஷ்ணமூர்த்தி, விநாயகபுரம்.

☆ இதழ் எண் 6ன் அட்டைப்படத்துக்கு பொருத்தமாக, கருணாநிதி ஒரு பச்சோந்தி என்பதை நிரூபித்துக் காட்டும் வகையில் கட்டுரை அமையவில்லை. நச்சுக்கழிவுகள் மூலம் ஏழை நாடுகளைச் சுடுகாடாக்க முயற்சிக்கும் ஏகாதிபத்தியங்களின் சதியைப் பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

வாசகர்வட்டம், கல்லை வட்டம்

☆ இதழ் எண் 6ன் தலையங்கள் கட்டுரையும் உள்ளே காங்கிரசு கோஷ்டிகள் சண்டை பற்றிய கட்டுரையும் ஒரே மாதிரி இருந்தன. இரண்டையும் இணைந்து ஒரே கட்டுரையாக வெளியிட்டிருக்கலாம். இந்திய - சீன எல்லைத் தகராறு பற்றிய கட்டுரையில் வாக்கியங்கள் நீளமானதாகவும் படிக்க சிரமமாகவும் உள்ளது. சிறுவாக்கியங்களாக எளிமைப்படுத்தக் கோருகிறோம். ஒவ்வொரு முறையும் வரைபடத்துடன் இத்தொடர் கட்டுரை வெளியிட்டால் சிறப்பாக இருக்கும். இதழ் எண்7 - 8ன் அட்டைப்படம் எளிதில் புரியும்படியாக அமையவில்லை. அட்டைப் படங்கள் ஜனரஞ்சகமாக அமைய கவனம் செலுத்தக் கோருகிறோம். போபால் தீர்ப்பு இந்திய மக்களுக்கு மட்டுமன்றி எவ்வாறு மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கும் எதிரானது என்பதை விளக்கி எழுதியிருக்கலாம்.

வாசகர்வட்டம், சென்னை

☆ பிற்போக்குக் கருத்துக்களைத் தாங்கிவரும் பத்திரிக்கைகளும் அரசு எந்திரத்தின் ஊது குழல்களும் மலிந்திருக்கும் இன்றைய கட்டத்தில் 'புதிய'ஜனநாயகம்' மற்றும் புதிய கலாச்சாரம்' தனது வரலாற்றுக் கடமையைச் சரியாக செய்து வருகின்றன. சரியான கருத்துக்களைத் தாங்கி வருவதோடு முழுமையான மாற்றத்திற்கு மக்களை உணர்மைப்படுத்தி வருகின்றன. இலங்கை தமிழ் தேசிய இன விடுதலைப் போரைப்பற்றி தொடர்ச்சியாக ஒருசில பக்கங்களை ஒதுக்கி அங்கு நடக்கும் உண்மை நிலையை வெளிஉலகுக்கு கொண்டுவர வேண்டும். அதே போல உலகில் எங்கு ஒடுக்குமுறை நடந்தாலும் தனது வர்க்க அச்சில் அவற்றை அம்பலப்படுத்த வேண்டும்.

தாஸ், மே.ஜெர்மனி

☆ மார்ச் 16-31 இதழில்வெளியான அமைதிப்படையின் அக்கிரமங்கள் என்ற கட்டுரையைப் படித்தபோது எமது கண்கள் குளமானது; குருதி கொப்பளித்தது. ஈழத்தைப்போலே இங்கேயும் நாம் அடிமைப் பட்டுக்கிடக்கும்போது தமிழ், தமிழன், தமிழ் நாடு பற்றிய வாய்ச்சவடால்களால் மக்களை ஏய்த்து வரும் பிழைப்புவாத அரசியல் வியாபாரிகளை முறியடிக்காதவரை நமது விடுதலையும் குதிரைக் கொம்புதான்!

சோம. சிவக்குமார் மரகதம், மன்னார்குடி

☆ அமைதிப்படையின் அக்கிரமங்களை அறிந்தபோது கலங்கியது என் கண்கள் மட்டு மல்ல; நெஞ்சமும்தான். என்னை 'இந்தியன்' என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்படுகிறேன். சால்மன் ரஷ்டியின் நூலைப் பற்றியும் கருத்துச் சுதந்திரம் பற்றி பிதற்றித் திரியும் போலி முற்போக்கு அறிவு ஜீவிகளையும் எடுப்பாக தோலுரித்துக் காட்டியுள்ளீர்கள். கோர்ட்டுகளில் நீதி கிடைக்குமா என்ற அட்டைப்படக் கட்டுரை வெகு சிறப்பு.

செல்வக்குமார், திருப்பத்தூர்.

☆ இதழ் எண் 7-8ன் அட்டைப்படக் கட்டுரை வர்க்க கண்ணோட்டத்துடன் அமையவில்லை. இதழ் 9ல் நீதி தேவதையை சிறைக்குள் அடைத்திருப்பதுபோல் அட்டைப் படம் போட்டிருக்கலாம் மற்றபடி கட்டுரை சிறப்பாக இருந்தது. ருஷ்டியின் நூலில் என்ன உள்ளது என்று புரியாமல் இருந்த எங்களுக்கு 'தடையும் தண்டனையும்' என்ற கட்டுரை பேருதவியாக இருந்தது. இதுதான் இன்றைய இந்தியா சிறப்பாக அமைந்திருந்தது.

வாசகர்வட்டம், கல்லைவட்டம்

☆ நாடாளுமன்ற பன்றித்தொழுவத்தில் விழுந்து புரண்டாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளின் சவடால். இவர்கள் இன்றைய அரசையும் சட்டமன்ற ஆட்சிமுறையையும் அம்பலப்படுத்தப் போகிறோம் என்று கூறிக் கொண்டு கடைசியில் இவர்களே அம்பலப் பட்டுப் போனதுதான் உண்மை. இதை விளக்கி இவர்கள் தலைமையின் கீழுள்ள புரட்சிகர இளைஞர்களை அணிதிரட்ட வேண்டியது நமது உடனடிக் கடமை.

சந்திரபாபு, பாகூர்.

☆ மக்களின் வரிப்பணத்தை கவர்ச்சித் திட்டங்களுக்கு பாழாக்குவதோடு, ஆளும் வர்க்கங்களான தரகுமுதலாளிகள், நிலப்பிரபுகளுக்கு ஏராளமான சலுகைகளை ஆட்சியாளர்கள் வாரியிறைப்பதாலும் அவர்களின் சொத்து நொடிக்கு நொடி கோடிக்கணக்கில் உயரும் வகையில் திட்டங்கள் தீட்டப்படுவதாலும் தேசம் திவாலாகிறது என்பதை விளக்கமாகவும் வர்க்கக் கண்ணோட்டத்தோடும் எழுதியிருக்கவேண்டும். இதழ் எண் 7-8ன் அட்டைப்படக் கட்டுரை அவ்வாறு அமையாதது குறைபாடாகும்.

வாசகர்வட்டம்,

திருவெண்ணெய்நல் லூர் ஒன்றியம்

## கழிவுப்பொருள் கிடங்காக இந்தியத்துணைக் கண்டம்

'புதிய ஜனநாயகம்' இதழ் எண்6-ல் "ஏழை நாடுகளைச் சுடுகாடாக்க ஏகாதிபத்தியங்களின் புதிய சதி" என்ற கட்டுரையில் 1986ல் அமெரிக்காவின் பிலடெல்பியாவிலிருந்து புறப்பட்ட நச்சுக் கழிவுக் கப்பல், கடைசியாக இலங்கைக்குச் சென்று அங்கிருந்து விரட்டப்பட்டு, இந்துமாக்கடலில் சிறிது காலம் அலைந்து கொண்டிருந்துவிட்டு பின்னர் தலைமறைவாகிவிட்டது என்று எழுதியிருந்தோம்.

"பெலிசியா" என்ற பெயர் கொண்ட அந்த நச்சுக் கழிவுக் கப்பல் வங்காள விரிகுடா கடல்பரப்பில் ரகசியமாக நுழைந்து வங்க தேசத்துக்கு அருகே கொடிய நச்சுக் கழிவுகளைக் கடலில் கொட்டிவிட்டுச் சென்றுவிட்டது என்பதை பசுமை அமைதி இயக்கத்தினரும் அமெரிக்கப் பத்திரிக்கைகளும் உறுதிப்படுத்தியுள்ளன. அமெரிக்காவிலுள்ள வங்கதேச தூதரக அதிகாரிகள் இந் நச்சுக்கழிவுகளால் ஏற்படும் பேரழிவுகளை விளக்கி தமது அரசுக்கு எச்சரித்துள்ளனர். நச்சுக் கழிவு கொட்டப்பட்ட பின்னர் கடல் நீரிலும் சுற்றுச் சூழலிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி அறிய வங்கதேச அரசிடம் போதிய அறிவியல் சாதனங்கள் இல்லாததால் விளைவுகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க முடியாமல் தவிக்கிறது.

வங்கதேசம் மட்டுமின்றி வங்காளவிரிகுடா பிராந்தியம் முழுவதுமே நஞ்சாகிப் போயுள்ளது என்று பசுமை அமைதி இயக்கத்தினர் அதிர்ச்சிதரும் செய்திகளைக் கூறுகின்றனர்.

நிலப்பரப்பில் காலூன்றி ரஷிய வல்லரசு கூடங்குளத்தை கொலைக்களமாக்கி வருகிறதென்றால், கடல் பரப்பை அமெரிக்க ஏகாதிபத்தியம் நஞ்சாக்கி வருகிறது. இந்துமாக்கடல் பிராந்தியத்தை தமது குப்பைத் தொட்டியாக மாற்றிவரும் மனித குலத்தின் கொடிய விரோதிகளான இருபெரும் வல்லரசுகளுக்கு எதிராக அணித்திரள்வோம்! ஆர்த்தெழுவோம்!

படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

10

1 - 15 ஏப்ரல் '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்



எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


## தாக்கர் கமிஷன் அறிக்கை:

# அரசியல் மிரட்டலுக்கான ஆயுதம்!

இந்திரா காந்தி கொலை மீதான தாக்கர் கமிஷன் விசாரணை அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிடும்படியான நிர்பந்தத்துக்கு வேறுவழியின்றி பணிந்து விட்டது பாசிச ராஜீவ் கும்பல். பிரதமர் - அரசுத்தலைவர் மோதல், ஃபார்ஃபாக்ஸ், ஆயுத பேர ஊழல்கள், சுமிடோமா எண்ணெய்க் குழாய் இறக்குமதி ஊழல் ஆகியவற்றைத் தொடர்ந்து இன்னுமொரு நெருக்கடியிலே ராஜீவ் கும்பலைச் சிக்க வைப்பதிலே எதிர்த்தரப்பினர் வெற்றி பெற்றுவிட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு பெரிய தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் பிரிவு, சக்தி வாய்ந்த - பிரபல பத்திரிக்கைச் சங்கிலித் தொடர் நிறுவனம், அரசு எந்திரத்துடன் நெருங்கிய தொடர்புடைய அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளைக் கொண்டு திட்டமிட்டு இயங்குகிறது எதிர்த்தரப்பு. அதைவிடவும் பாசிச ராஜீவ் கும்பல் பலமிக்கதுதான்; என்ற போதும், இந்தத் தேர்தல் ஆண்டிலே இன்னும்பல ஊழல்கள், அதிகார முறைகேடுகள், கையாலாகாத் தனங்கள் எதிர்த்தரப்பினரால் அம்பலமாக்கப்படும் என்பது உறுதியாகிவிட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அடுத்தடுத்துப் பல அம்பலப்படுத்தல்களையும், நெருக்கடிகளையும், தேர்தல் தோல்விகளையும் எதிர்கொண்டது பாசிச ராஜீவ் கும்பல். இறுதி முயற்சியாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களைக் குறிவைத்து கட்சியிலும் ஆட்சியிலும் தமக்கு விசுவாசமான நபர்களைப் போட்டு சில மாற்றங்களைச் செய்தது. அவற்றிலே முக்கியமான ஒன்று பிரதமரின் சிறப்புச் செயலாளராக ஆர்.கே.தவாண் நியமிக்கப்பட்டது. பாசிச இந்திராவின் சிறப்புச் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றிய தவாண் அந்நிய உளவு நிறுவனத்திற்காக இந்திரா கொலைக்கான சதியிலே சம்பந்தப்பட்டிருந்தார் என்று சந்தேகப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டவர். பாசிச ராஜீவ் கும்பலின் சரிவைத் தூக்கி நிறுத்துவதற்கான அரசியல் அனுபவமும் தந்திரமும் கொண்டவர் என்பதாகத் தீர்மானித்து தவாணுக்கு மீண்டும் அதே பதவி கொடுக்கப்பட்டது.

இந்திரா கொலை மீதான விசாரணை நடத்தும்படி உச்சநீதிமன்ற நீதிபதி தாக்கர் தலைமையிலே ஒரு விசாரணைக் கமிஷனும், டி.ஜி.பி. தகுதியுள்ள அனந்தராமன் தலைமையிலான ஒரு சிறப்பு விசாரணைக் குழுவையும் அமைத்தது பாசிச ராஜீவ் கும்பல். இவை பலகோடி ரூபாய் செலவு செய்து மிகவும் இரகசிய விசாரணைகள் நடத்தின. 1984 அக்டோபர் 31ந் தேதி இந்திரா கொலை நடந்தது. 1985 நவம்பர் 19ந் தேதி தாக்கர் ஒரு இடைக்கால அறிக்கை கொடுத்தார். 1986 பிப்ரவரி 27ந் தேதி இறுதி அறிக்கை கொடுத்தார். அனந்தராமன் குழு விசாரணை நீடித்துக் கொண்டேபோனது. தாக்கர் அறிக்கை வந்ததும் இந்திராவைக் கொன்ற சத்வந்த் சிங்கின் வக்கீல் அதன் பிரதியை வழவக்காடுவதற்காக சமர்ப்பிக்கும்படி கோரினார். அடுத்த நாளே அரசு ஒரு அவசரச் சட்டம் போட்டது. அதன் மூலம் விசாரணைக் கமிஷன் அறிக்கைகளை இரகசியமாக வைத்துக் கொள்ளும் ஏகபோக உரிமையைப் பெற்றது, பாசிச ராஜீவ் கும்பல்.

இந்திரா கொலையைத் தொடர்ந்து பல வட இந்திய நகரங்களில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சீக்கியர்களை காங்கிரசின் பாசிச வெறியர்கள் கொன்று குவித்தார்கள். பல சீக்கியப் பெண்களைக் கற்பழித்து, சீக்கியர் சொத்துக்களை சூறையாடினர். பலமாதங்கள் போராட்டம் - நிர்பந்தத்துக்குப் பிறகு டில்லி - கான்பூர் சீக்கியர் கொலைகளை விசாரிக்க ரங்கனாதன் மிஸ்ரா கமிஷன் ஒன்று கண்துடைப்புக்காக நிறுவப் பட்டது. நீண்ட காலம் அது செயல்படுவதற்கான இடமோ, உதவியாளர்களோ கூட இல்லை. கடைசியாக பாசிச ராஜீவ் கும்பலின் விருப்பத்திற்கேற்ப தீர்ப்பு வந்தது. காங்கிரசின் பாசிசக் கொலைவெறியர்கள் எவரும் இன்னமும் தண்டிக்கப்படவில்லை.

இதற்கிடையே ஒருபுறம் தாக்கர் கமிஷனும், அனந்தராமன் குழுவும் விசாரணை நடத்திக் கொண்டிருக்கும் போதே, மறுபுறம் இந்திராவை கொலை செய்ததாக சத்வந்சிங் மீதும், கொலை சதியில் ஈடுபட்டிருந்ததாக கேஹார்சிங், பல்பீர்சிங் ஆகியோர்மீதும் கொலைக் குற்றஞ்சாட்டி மூவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியது. மேல் முறையீட்டின் போது பல்பீர்சிங் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று உச்சநீதி மன்றம் விடுதலை செய்தது. ஆனால் சதியில் ஈடுபட்டிருந்ததாக கேஹார்சிங் மீதான குற்றத்துக்குக் எவ்வித ஆதாரமும் இல்லையென்று பிரபல சட்ட வல்லுநர்கள், அரசியல்வாதிகள், பத்திரிகைகள் எனப் பலரும் எடுத்துக் கூறியபோதும், கருணை மனுப்போட்டும் சத்வந்த்சிங்கோடு சேர்த்து கேஹார்சிங்கும் தூக்கிலிடப்பட்டார். உண்மையில் கேஹார்சிங் சட்டபூர்வமாக நீதித்துறையின் உடந்தையோடு கொலை செய்யப்பட்டார் என்றே கூற முடியும்.

அதே சமயம், முன்னாள் உயர் போலீசு அதிகாரி சிம்ரான்ஜித்சிங் மான், சீக்கியத் தீவிரவாதிகளின் தலைவர் அத்தீந்தர்பால்சிங் மற்றும் சிலர் இந்திரா கொலை சதியில் ஈடுபட்டதாகக் கைது செய்து கொடுஞ்சிறையில் அடைத்து சித்திரவதை செய்துவருகிறது பாசிச ராஜீவ் கும்பல். இதுவரை விசாரணை எதுவுமின்றிக் கிடக்கும் அவர்கள் மீது கொலை சதிக்குற்ற வழக்குப் போடுவதாகவும் கூறி வருகிறது.

உண்மை என்னவென்றால் இந்திரா கொலையைக் கூட குற்றவாளிகளைத் தண்டிப்பதைவிட, தன்னுடைய அரசியல் ஆதாயத்துக்கான வசதிக்கேற்பப் பயன்படுத்திக் கொண்டுவருகிறது பாசிச ராஜீவ் கும்பல் சீக்கியர்களைத் தண்டிப்பதன் மூலம் அவர்க ➧

படிப்பகம்

www.padippakam.com

ளைப் பழிவாங்கத் துடிக்கும் இந்து மதவெ றிக்குத் தூபம் போட்டு ஆதாயம் அடைய லாம்; தேசத்தை சீர்குலைக்க அந்நிய சக்தி கள் சதி செய்வதாக வதந்தியைப் பரப்பி ஆதாயம் தேடலாம் — என்கிற நோக்கத் தோடு செயல்படுகிறது. அதனால்தான் ஒரே கொலைக்கு மூன்று வெவ்வேறு திசையி லான விசாரணை நடத்தியது; என்றபோதும் சீக்கியர்கள் மீது குற்றஞ்சுமத்தும் இரு வழக் குகளை மட்டும் பகிரங்கமாக்கி தண்டிக்கி றது. ஆனல் பாசிச இந்திரா - ராஜீவ் கும்ப லின் சில புள்ளிகளையே குற்றஞ்சாட்டும் விசாரணைக் கமிஷன் மற்றும் புலனாய்வுக் குழு முடிவுகளை முற்றிலும் இரகசியமாக வைத்துக்கொண்டது. இப்போது அந்தக் கும் பலுக்குள்ளேயே நடக்கும் அதிகாரச் சண்டை காரணமாக அவை வெளியே வந்து விட்டன.

''இந்திரா கொலையில் சம்பந்தப்பட்டி ருப்பதாக தாக்கர் கமிஷன் கூறும் ஆர்.கே.த வாணை மீண்டும் பிரதமரின் செயலாளராக நியமிக்கலாமா? உண்மையான குற்றவாளி களைத் தண்டிப்பதற்குப் பதில் பதவி உயர்வு தரலாமா?'' என்று நியாயவானைப் போல கேட்டு தாக்கர் கமிஷன் அறிக்கையின் ஒரு பகுதியை மட்டுமே வெளியிட்டது, எதிர்த்த ரப்பின் ஊதுகுழலான இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு.

''தேசியப் பாதுகாப்பு, பிரதமரின் பாது காப்பு, வெளிநாடுகளுடனான நட்புறவு ஆகியன பாதிக்கப்படு''மெனக் கூறி அறிக் கையை வெளியிட மறுத்தது அரசு. அவை யில் கலவரம் செய்ததாக 63 எதிர்க்கட்சி எம்.பி.க்களைத் தற்காலிக நீக்கம் செய்தது. ''தாக்கர் கமிஷன் அறிக்கை புலனாய்வுக்கு முந்திய பொது விசாரணைதான்; புல னாய்வு செய்த குழு ஆர்.கே.தவாண் குற்ற மற்றவர் என்று கூறிவிட்டது. ஆனாலும் மேலும் சிலர் மீது வழக்குத் தொடர இருப்ப தால் அறிக்கையை வெளியிட முடியாது'' என்று மறுத்துவிட்டது. இந்தச் சண்டை யிலே, இன்னொரு உண்மையும் வெளிப் பட்டது. தாக்கர் கமிஷன் அறிக்கை மந்திரி சபையின் முன்பு கூட வைக்கப்படவில்லை. பாசிச ராஜீவுக்கோ - அல்லது அவரைச் சுற் றியுள்ள ஒரு சிறு கும்பலுக்கோ மட்டுமே தெரியும். இன்று எதிர்க்கட்சியில் இருந்து கூச்சல்போடும் முன்னாள் நிதி மந்திரியான வி.பி.சிங் மற்றும் முன்னாள் சட்டமந்திரி அசோக்சென் ஆகியோரும்கூட கமிஷன் அறிக்கையை பார்க்காமலேயே அதை இரக சியமாக வைக்கும் சட்டம் போடுவதற்குத் தலையாட்டியுள்ளனர்.

அறிக்கையை வெளியிடும்படி பத்தி ரிக்கைகள் கோரின. நாடு தழுவிய போராட் டம் நடத்துவதாக எதிர்க்கட்சிகள் மிரட்டின. எனவே வழக்கம் போல ''திடீர் பல்டி'' அடித்து ராஜீவ் தாக்கர் கமிஷன் அறிக் கையை அவையில் வைப்பதற்கு ஒப்புக் கொண்டார். அறிக்கையின் முக்கியப் பகுதி களை இருட்டடிப்பு செய்துவிடுவார் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. அதே மாதிரி ஐந்து தொகுதிகளைக் கொண்ட அறிக்கையின் மூன்று தொகுதிகளை இரகசி யமாக வைத்துக் கொண்டு முன்னுரை, முடி


ஆர்.கே.தவான்

வுரை ஆகியவற்றை மட்டுமே வெளியிட் டுள்ளது. புலனாய்வுக் குழு அறிக்கையை யும் மறைத்து வைத்துள்ளது. அவை அனைத்தையும் வெளியிடும்படி எதிர்க்கட் சிகள் தொடர்ந்து கோரி வருகின்றன. தொடர உள்ள வழக்குகளைப் பாதிக்கும்; இதுதான் சட்டப்படி முழு அறிக்கையாகும் என்று சாக்கு போக்குகளைக் கூறுகிறது ராஜீவ் கும்பல்.

தாக்கர் கமிஷன் அறிக்கையின் உட்கரு என்ன? இந்திராவுக்கு விசுவாசமாக தவாண் நடக்கவில்லை, வேவு பார்த்தார். இந்திரா கொலையில் தவாண் சம்பந்தப்பட் டிருப்பதாகக் கடுமையாக சந்தேகிப்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. கொலை நடந்த இடத் திற்குப் போகும் நேரத்தை மாற்றியது; விலக்கி வைக்கப்பட்டிருந்த சீக்கிய காவலர் கள் கொலை செய்ய வசதியாக அவர்கவ ளின் பணியை மாற்றிக் கொடுத்தது; சுட்ட பிறகு இந்திராவைக் காப்பதற்கு முயலாதது; உடனடி சிகிச்சைக்கு கவனம் செலுத்தாதது; கொலையாளிகளுக்கு என்ன நேர்ந்தது என்று மருத்தவமனையிலிருந்து அக்கறை யோடு விசாரித்தது; அமெரிகாவுடன் ஜெயில்சிங் உதவியாளர் மற்றும் கொலை யாளிக்குத் தொடர்பு பற்றி குறிப்பேட்டில் எழுதியுள்ளது போன்ற பல தடயங்களைக் கூறுகிறார் தாக்கர். இவற்றை மேலும் நிரு பிப்பதற்காக புலன் விசாரணை நடத்தவும், முன்னுக்குப்பின் முரணாகக் கூறும் தவாணை பொய் அறியும் இயந்திர சோதனை செய்யவும் கோருகிறார்.

தவாணுடன் கொலை சதியில் இன் னொரு நெருக்கமான முக்கிய நபர் சம்பந் தப் பட்டிருக்கலாம் என்று சந்தேசிக்கிறார். பாகிஸ்தான், பிரிட்டன் மற்றும் அமெரிக்க உளவு நிறுவனங்களின் கைவரிசையாகவும் இருக்கலாம் என்கிறார். இந்திராவின் பாது காப்புக்குப் பொறுப்பாக இருந்த தவாண் மற்றும் 43 அதிகாரிகள் பொறுப்புடன் நடந்து கொண்டிருந்தால் கொலையைத் தடுத்திருக்கலாம் என்கிறார். அவர்களில் சீக் கியக் காவலர்களைப் போடக் கூடாதென்று வாதிட்டவர் மட்டும் இன்னும் தற்காலிக நீக் கத்திலிருக்கிறார். மற்றவர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.



இதையெல்லாம் காட்டி இந்திரா கொலைக்குக் காரணமான உண்மையான குற்றவாளிகளைத் தண்டிப்பதில் ராஜீவ் தவ றிவிட்டார்; அவர்களைப் பாதுகாக்கிறார் என்பதாக குற்றஞ்சாட்டுகின்றன எதிர்க்கட் சிகள். உண்மையாக எதிரக்கட்சிகளின் அக் கறை அதுவல்ல. லஞ்ச ஊழல்கள், அதிகார முறைகேடுகளில் ஈடுபடும் ராஜீவ் திற மையோ, அறிவோ, அனுபவமோ அற்றவர் என்பதை நிரூபித்து ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்குத்தான் அவர்கள் விரும்புகிறார் கள். எனவேதான் கேஹார்சிங் தூக்கிலிடப் பட்ட பிறகு, ஆர்.கே.தவாண் நியமிக்கப் பட்ட பிறகு தாக்கர் கமிஷன் அறிக்கையை வெளியிடுகின்றனர், எதிர்த்தரப்பினர். அது மட்டுமல்ல ஃபார்ஃபாக்ஸ், போஃபார்ஸ் ஆகிய பிரச்சினைகளை தேர்தலுக்காகப் பயன்படுத்திக் கொள்வதுதான் அவர்களு டைய நோக்கம். குற்றவாளிகளை முழுமை யாக அம்பலப்படுத்தித் தண்டிப்பது அல்ல. எனவேதான் இந்த விவகாரங்கள் எல்லா வற்றிலும் எனக்கும் ராஜீவுக்கும் உண்மை தெரியும் என்று கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரும், ராஜீவின் ஒன்று விட்ட சகோதரரும், முன்னாள் உள்துறை மந்திரியுமான அருண்நேரு. அவரும் ஃபார் ஃபாக்ஸ் தலைவர் ஹெர்ஷ்மனும், ''சமயம் வரும்போது இரகசியங்களை வெளியிடு வோம்'' என்று கூறிவருகின்றனர். ஆக, எதி ரக்கட்சிகளைப் பொறுத்தவரை இவை எல் லாம் தேர்தலுக்கான ஆயுதங்கள்தாம்!

''தேசத்தை சீர்குலைப்பதற்கான முயற்சி; அந்நிய சக்திகளின் சதி, மதவாத -பிற்போக்கு, பிளவுவாத சக்திகளின் கூட்டு' போனற வழக்கமான காரணங்களைக் கூறிக் கொண்டே தன்னுடைய கிரிமினல் குற் றங்களைத் தொடர்வதற்கு முயலுகிறது பாசிச ராஜீவ் கும்பல். போபால் விஷவாயுப் படுகொலையில் ராஜீவ் கும்பல் போட்டுக் கொண்டுள்ள தேச துரோக ஒப்பந்தம், அதை வெறும் கண்டன அறிக்கையோடு எதிர்க்கட்சிகள் மறந்துவிட்டது ஆகிய இந்த ஒரு விவகாரமே போதும் —இவர்களு டைய அதிகாரத்துக்கான சண்டையில் மக் களை வெறும் பகடைக் காய்களாகக் கருதுகி றார்கள் என்று நிரூபிப்பதற்கு! ஆக, ஆளும் தரப்பாகட்டும், எதிர்த்தரப்பாகட்டும் தேர் தல் பிரச்சாரத்துக்கான நாடாளுமன்றச் சண் டையில்தான் ஈடுபட்டுள்ளனரே தவிர மக்க ளுக்கோ, தேசத்துக்கோ நல்லது செய்வதற் காக அல்ல. ஆனாலும் அந்தச் சண்டையின் மூலம் பல உண்மைகளை வெளிப்படுத்திக் கொள்வது மக்களுக்கும் தேசத்துக்கும் நல்ல துதான்! ●

படிப்பகம்

www.padippakam.com

சித்திரவதை சட்டபூர்வமாக மாறிய அவசரநிலை பாசிச ஆட்சியின்போது கேரளத்தில் கோழிக்கோடு பொறியியற் கல்லூரி மாணவர் ராஜன் போலீசாரால் மிருகத்தனமாக சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். நக்சல்பாரி இயக்கத்தின் ஆதரவாளரான அவர், புரட்சியாளர்களுக்கு தமது அறையில் தங்க இடம் கொடுத்ததாகக் கூறி, காகயம் சித்திரவதை முகாமுக்கு இழுத்துப் போய், அவரைப் படுக்க வைத்து கனமான உருளையை அவர் மீது உருட்டி சித்திரவதை செய்து கொன்று விட்டு பிணத்தை காகயம் அணையில் வீசியெறிந்தனர், காட்டுமிராண்டி போலீசார். மாணவர் ராஜனைக் கொன்ற போலீசு அதிகாரிகள் ஜெயராம் படிக்கல், லட்சுமண்தாஸ் ஆகியோரைப் பழிக்குப் பழி வாங்குவோம் என்று அடுத்து நடந்த தேர்தலின் போது பிரச்சாரம் செய்து ஓட்டுப் பொறுக்கி ஆட்சிக்கு வந்தனர், 'மார்க்சிஸ்டுகள்'.

பதவிக்கு வந்ததும் பச்சோந்திகளாக மாறுவது ஓட்டுக் கட்சிகளின் வாடிக்கை. அதன்படியே போலிக் கம்யூனிஸ்டுகளும் கொலைக்கார போலீஸ் அதிகாரிகளைத் தண்டிக்கவில்லை. மாறாக, அவர்கள் பதவி உயர்வு அளிக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர். இடையில் காங்கிரசு ஆட்சி வந்துபோய் இப்போது மீண்டும் போலிகளே ஆள்கின்றனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சி தங்களுடைய அட்டூழியங்களைக் கண்டுகொள்ளாமல் கூடிக் குலாவுவதைக் கண்ட போலீசு கும்பல், காகயத்தில் நக்சல் பாரி இயக்கத்தினரால் அமைக்கப்பட்ட தியாகி ராஜன் சிலையை சமீபத்தில் உடைத்தெறிந்துவிட்டது. யாரோ சில விஷமிகள் செய்துவிட்டதாக போலீசு கும்பல் நாடகமாடியது.


பின்னர் நக்சல்பாரி புரட்சி இயக்கத்தின் ஆதரவாளர்கள் ஒன்று சேர்ந்து மீண்டும் தியாகி ராஜன் சிலையை அதே இடத்தில் நிறுவ முடிவு செய்து, தலைநகர் திருவனந்தபுரத்திலிருந்து காகயம் நோக்கி ஊர்வலமாக முழக்கமிட்ட படியே ராஜன் சிலையை எடுத்துச் சென்றனர். ஆனால் போலீசார் ஊர்வலத்தை மறித்து சிலையைக் கைப்பற்றி, காகயத்தில் நுழையத் தடை உத்தரவும் போட்டனர். இதை எதிர்த்து திருவனந்தபுரத்தில் மார்க்சிய - லெனினிய இயக்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

''இது சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை; நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது'' என்று ஒதுங்கிக் கொள்கிறது, போலிக் கம்யூனிஸ்டு அரசு. உண்மையில் போலிகளும் போலீசாரும் தியாகி ராஜனை விளம்பரப் படுத்தக்கூடாது என்பதில் குறியாய் இருக்கின்றனர். கேவலம் பதவி சுகத்துக்காக வரலாற்றையே மறைத்து கொலை பாதக போலீசாருடன் வெட்கமின்றி போலிகள் கூடிக்குலாவத் தொடங்கிவிட்டனர்.

ஆனால் நாளைய வரலாறு அவர்களுக்கு எதிராகவே திரும்பும்; மீண்டும் தியாகி ராஜனின் சிலை அதே இடத்தில் நிறுவப்படும்; கொலை பாதக போலீசார் பழிக்குப் பழிவாங்கப் படுவார்கள்; கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையின் கீழ் திரண்டு உழைக்கும் மக்கள் ஒரு புரட்சியின் மூலம் அதைச் சாதிப்பார்கள்!



தியாகி ராஜன் சிலையை ஊர்வலமாக எடுத்துச் செல்ல தடைவிதித்ததை எதிர்த்து திருவனந்த புரத்தில் நக்சல்பாரி புரட்சி இயக்கத்தினர் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

## வெளி வந்துவிட்டது!

**பாட்டாளி வர்க்க இயக்கத்தின் போர்த்தந்திரம் - செயல் தந்திரம் பற்றி - ஒரு தொகுப்பு.**



சர்வதேசப் பாட்டாளி, வர்க்க ஆசான்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோர் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரக் கொள்கைகள் பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூல்.


தமிழில் முதன் முறையாக வெளிவந்துள்ள திரட்டு.

மார்க்சிய - லெனினிய வாதிகள் ஒவ்வொருவரும் அவசியம் படித்துப் பயன்பெற வேண்டிய சித்தாந்தக் கருவூலம்.

சமரன் பதிப்பக வெளியீடு
விலை ரூ: 30/-

**விவரங்களுக்கு:**

இல.கோவிந்தசாமி,
52/4, மேட்டுத்தெரு,
சாத்துமா நகர்,
திருவொற்றியூர்,
சென்னை - 600 019

## கடலூர் சிறைவாசிகளின் உறுதிமிக்க போராட்டம் வெற்றி!

கடலூர் மத்திய சிறைவாசிகள் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்திய உரிமைக்கான போராட்டத்தில் மூன்று கோரிக்கைகளில் வெற்றி கிட்டியுள்ளது. கடந்த மார் 6ந் தேதியிலிருந்து சிறைவாசிகள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கி விடாப்பிடியாக போராடிய போது, 10ந் தேதியன்று இரவு 11.30 மணிக்கு பின்வரும் மூன்று கோரிக்கைகளை ஏற்பதாக சிறை நிர்வாகம் அறிவித்தது.

1. அவசரகால விடுப்பு வழித்துணைக் காவலின்றி இன்றுமுதல் வழங்குதல், 2. மூன்று ஆண்டுகள் இச்சிறையில் கழித்த சிறைவாசிகளை உடனடியாக அவரவர் தாய் சிறைக்கு மாற்றம் செய்தல், 3. உணவை சிறைவாசிகள் மேற்பார்வையில் சிறை நிர்வாகம் தரமாக தயாரித்து வழங்குதல்.

- மேற்கண்ட உத்திரவாதம் சிறைத்துறை தலைவரால் கடலூர் மத்தியசிறை கண்காணிப்பாளர் மூலமாக எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஆறு கோரிக்கைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று ஆவண செய்வதாக வாக்குறுதி பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் எமது போராட்டம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

எமது போராட்டத்திற்கு உறுதுணையாக நின்று ஆதரவளித்த அனைவருக்கும் எமது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறைவாசிகள், கடலூர் மத்திய சிறை

படிப்பகம்

www.padippakam.com

ருஷ்யத் திருத்தல்வாதி கோர்ப்பச்சேவின் அரசியல் சீர்திருத்தங்களின் கீழ் நடந்த முதல் பொதுத் தேர்தல்களுக்கான முடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன. பெரும்பான்மையான தொகுதிகளில் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அதிகார பூர்வ வேட்பாளர்கள் தோற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக மாஸ்கோ, லெனின்கிராடு ஆகிய நகரங்களில் கோர்ப்பச்சேவின் ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப்போனார்கள். தேசிய இனங்கள் வாழும் குடியரசுகளில் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சி முற்றாக மண்ணைக் கவ்வி விட்டது. வெற்றி பெற்றவர்கள் புரட்சிகர அரசியலுக்காக நிற்பவர்கள் அல்ல. கோர்ப்பச்சேவின் சீர்திருத்தங்கள் போதாது; மேலும் முதலாளித்துவ உரிமைகள் - சலுகைகள் - அமைப்பு முறைகள் வேண்டும் என்று கோருபவர்கள்தான்!

“70 ஆண்டுகளுக்குப் பிறகு ஜனநாயகத் தேர்தல்கள் நடந்து கம்யூனிஸ்டுகள் தோற்றுப் போனார்கள். ஆனால் இன்னும் கூடுதலான சீர்திருத்தங்களைக் கோருபவர்கள் வெற்றிபெற்றுள்ளதால் இதுவும் ஒருவகையில் கோர்ப்பச்சேவுக்குக் கிடைத்துள்ள வெற்றிதான்'' என்று மேலை நாடுகள் பூரித்தப் போகின்றன. கோர்ப்பச்சேவும் இதையே கூறியுள்ளார். இந்தத் தோல்வி உண்மையில் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்த தோல்வியல்ல. குருச்சேவினால் நிறுவப்பட்ட போலிக் கம்யூனிஸ்டு கட்சியின் தோல்வி. கம்யூனிஸ்டு கட்சியையும், சோசலிசத்தையும் அழித்து அதிகார வர்க்க முதலாளித்துவ கட்சியையும் ஆட்சியையும் நிறுவினார்களே அதற்குத்தான் தோல்வி. 30 ஆண்டுகளுக்குமேலாக குருச்சேவ், பிரஷ்னேவ், கோர்ப்பச்சேவ் கும்பல் சோவியத் சமூகத்தை சீரழித்து எந்த நிலைமைக்குக் கொண்டு வந்தனர் என்பதற்கு இங்கேயுள்ள கட்டுரை சான்றாகும்.

### ரஷியாவில் உணவுப் பஞ்சம்:

# கோர்ப்பசேவின் சீர்திருத்தங்கள் சாயம் வெளுக்கிறது!

பெரஸ்த்ராய்க்கா; பொருளாதாரத்தில் மறு ஒழுங்கமைப்பு. ரசிய அதிபர் கோர்ப்பச்சேவ் நான்காண்டுகளுக்கு முன் ஆரவாரமாக அரங்கேற்றிய புதிய பொருளாதார கொள்கை. உற்பத்தியில் துரித வளர்ச்சி; பெரும் பாய்ச்சலை கட்டவிழ்த்து விடுகிறது தான் பெரஸ்த்ராய்க்காவின் நோக்கம் -இலட்சியம் என்றெல்லாம் பறையடிக்கப்பட்டது.

அந்தோ பரிதாபம்! ராஜீவின் புதிய பொருளாதார கொள்கையைப் போலவே கோர்ப்பச்சேவின் பெரஸ்த்ராய்காவும் எழுந்து நடப்பதற்கு முன்பாகவே முடக்குவாத நோயால் தாக்குண்டு படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் முடியாமல் ஈமொய்த்து நாறுகிறது.

நாட்டின் உற்பத்தியை பெருக்குவது இருக்கட்டும்! ரசிய மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய நுகர்பொருட்கள் கூட தற்போது கையிருப்பில் இல்லை என்று அரசு கையை விரித்து விட்டது.

பல பகுதிகளில் நிலவி வந்த உணவுப் பஞ்சம் தற்போது மொத்த நாட்டுக்கும் பரவி ரசிய மக்களின் குரல்வளையை மொத்தமாக இறுக்குகிறது. சாதாரண நுகர்பொருட்கள் கூட இலகுவாக கிடைப்பதில்லை.

பன்றிக் கறியிலிருந்து பால் பவுடர் வரை, சலவை சோப்பிலிருந்து சர்க்கரை வரை, உருளைக்கிழங்கு முதல் கோதுமை மாவு வரை அனைத்திற்கும் தட்டுப்பாடு; மலம் துடைக்கும் காகிதம் கூட கையிருப்பு இல்லை; அதற்கும் தட்டுப்பாடு. அக்காகிதமும் ரேசன் முறையில் தான் வழங்கப்படுகிறது. பழைய செய்தித் தாள்களையே பல துண்டுகளாக வெட்டிப் பயன்படுத்த வேண்டிய அவலம்.

காரட், ஆப்பிள் போன்ற சாதாரண காய்கறிகள், பழவகைகள், பற்பசை, காபித்தூள், தேயிலை வாங்குவதற்குகூட ரசிய மக்கள் 'ரேசன்' கடைகளின் முன் நீண்ட வரிசையில் காலைகடுக்க நின்று கொண்டிருக்கின்றனர். சாதாரண சலவை சோப்புக் கட்டிகள் வாங்குவதற்குகூட குறைந்தது கால்மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய கொடுமை.

''போர்க் காலங்களில்கூட இம்மாதிரியான தட்டுப்பாடுகள் இருந்ததாக நாங்கள் கேள்விப்படவில்லை. ரசியநாட்டிற்கு என்ன ஆயிற்று?'' என்று சோகத்துடன் வினா எழுப்புகிறார்கள், வீட்டு வேலைகளுக்கு உதவிசெய்ய, ரேசன் கடைகளின் வாசலில் நீண்ட வரிசையில் நிற்கும் ஓய்வு(!) பெற்ற முதியவர்கள். ''அரசு அறிவித்திருக்கும் பற்றாக்குறை நுகர்பொருட்களின் பட்டியலில் எந்த பொருள் இன்னும் இடம்பெறவில்லை என்று கண்டுபிடிப்பது கொஞ்ச நாளில் சிரமமாகிவிடும்'' என்று வெச்சர்ன்யயா மாஸ்குவா என்ற ரசிய நாளிதழ் எழுதுகிறது.

காலியாக இருக்கும் கடை; வெறிச்சோடிக் கிடக்கும அங்காடிகள்.



பற்றாக்குறைக்காக அரசு வழங்கியிருக்கும் ரேசன் அட்டை வைத்திருப்பவர்களுக்குக் கூட அனைத்து பொருட்களும் கிடைப்பதில்லை. இங்கு மாதிரிதான்; ஒரு பொருள் இருந்தால் இன்னொரு பொருள் இல்லை. அரசு புள்ளிவிவரப் படியே ரேசன் அட்டை வைத்திருப்பவர்களுக்கு கூட 3 நபருக்கு ஒருவர் என்ற விகிதத்தில்தான் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப் படுகிறது. தலைநகர் மாஸ்கோவில் இருக்கும் மிகப்பெரிய மத்திய காலீனின் நுகர்பொருள் அங்காடியே பொருட்கள் ஏதுமற்று வெறிச்சோடி கிடக்கிறது. ரசிய நாட்டிலிருக்கும் 67 குடியரசுகளிலும் இதுதான் நிலைமை.

அரைகிலோ மாட்டிறைச்சி 1.60 ரூபிளுக்கு விற்கிறது. ஏறக்குறைய இது நம் நாட்டு நாணயம் 26 ரூபாய்க்கு சமம். வாங்கும் பொருட்கள் தரமானதாக இருப்பது இல்லை. இறைச்சி என்ற பெயரில் எலும்பும் கொழுப்பும்தான் அதிகமாக இருக்கிறது என்று வாடிக்கையாளர்கள் மனம்நொந்து கூறுகிறார்கள். சாதாரண ஆப்பிள்கூட தரமானதாக கிடைப்பதில்லை. மஞ்சள்பூத்த பேரிக்காய் மாதிரியான நான்காம் தரமான ஆப்பிள்கள்தான் விற்பனைக்கு இருக்கிறது. அதுவும் ஒரு டஜன் ஆப்பிள் விலை 1.88 ரூபிள். மக்கள் வாங்கவே முகஞ்சுளிக்கிறார்கள். அவ்வளவு மட்டமாக, தரம் குறைந்தவை தயாரிக்கப் படுகிறது.

பல பத்தாண்டுகளுக்கு பிறகு, ரசிய அரசு ஊழியர்களின் சம்பளத்தை 8 சதவிகிதம் உயர்த்தி விட்டதாக கோர்ப்பச்சேவ் அரசு பீற்றிக் கொள்கிறது. இதனால், மக்களின் வாங்கும் தரம் எள்ளளவும் உயரவில்லை என்பதுதான் உண்மை. மாறாக, மக்களின் வாங்கும் சக்தி குறைந்துக் கொண்டே வருகிறது. நுகர்பொருட்களை அடுத்து வீட்டு நுகர்பொருட்கள் குறிப்பாக, மின்விசிறிகள், நவீன அடுப்புகள், துணிதுவைக்கும் இயந்திரங்கள், இரண்டு சக்கர வாகனங்கள் போன்ற சாதனங்களின் விற்

படிப்பகம்

www.padippakam.com

பனை வெகுவாக குறைந்து வருகிறது. புதிய வருவாயைக் கொண்டு மக்களால் உணவுத் தேவையையே அடையமுடியவில்லை. யூரி லஸ்க்காவோவே என்ற மாஸ்கோ நகர உணவு விநியோக அரசு தலைமை கமிட்டி தலைவரே இதை வெட்கமின்றி ஒப்புக்கொள்கிறார்.

தனது வருமானத்தையே உணவுத் தேவைக்காக செலவு செய்தாலும் ஒரு ரசிய குடிமகன் சராசரியாக ஆண்டொன்றுக்கு சாப்பிடும் இறைச்சியின் அளவு வெறும் 14 கிலோ தான். இதிலும் 5 கிலோ வெறும் எலும்பும் பன்றிக் கொழுப்புமாகத்தான் கிடைக்கிறது. இது அமெரிக்க குடிமகன் சராசரியாக ஆண்டொன்றுக்கு சாப்பிடும் இறைச்சியில் 3ல் ஒரு பங்கு தான்!

அரசு நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் இருக்கும் கூட்டுறவு பண்டகசாலைகளுக்குக் கூட அரசு ஒழுங்காக நுகர்பொருட்களை சப்ளை செய்வதில்லை. தொழிலாளர்களின் எதிர்ப்பை சமாளிக்க முடியாத அந்நிறுவனங்களின் நிர்வாகம், உருளைக்கிழங்கு, சலவைக் கட்டிகளைக் கூட பகிரங்கமாக கள்ளச்சந்தையில் வாங்கி விநியோகம் செய்கிறது. அரசும் வாய்பொத்தி வேடிக்கை பார்க்கிறது. பலம் உள்ளவர்கள் அடித்து பிடித்து ரேசன் கடைகளில் உணவு பண்டங்களை வாங்குவதும், பணம் உள்ளவர்கள் அதிகார முறைகேடுகள் மூலம் உணவுப் பொருட்களை வாங்கிப் பதுக்குவதும், ஒன்றுக்குப் பத்தாக விலைவைத்து நுகர்பொருட்களை கள்ளச்சந்தையில் விற்பதும் சாதூரியம், திறமை, சமூக ஒழுங்காக அரசால் மறைமுகமாக அங்கீகரிக்கப்படுகிறது.

சாதாரண ரசிய குடிமகன் உணவு பஞ்சத்தால் தெருவில் நாயாய் அலையும்போது ரசிய அதிகார வர்க்கத்தினரும், அரசியல் தலைவர்களும் குளியல் சோப்பு முதல் உடுத்தும் ஆடை வரை பன்மடங்கு விலை கொடுத்து நேர்த்தியான வெளிநாட்டுப் பொருட்களாக வாங்கி அனுபவிக்கின்றனர் இறக்குமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட முதல்தரமான இறைச்சிகள், நண்டுகள், இறால்கள், பாலாடைக் கட்டிகள், பழரசங்கள் - இவைகள்தான் இக்கும்பலின் உணவு. கண்ணைக் கவரும் நகைகளால் தம் மனைவிமார்களை அலங்கரித்துக் கொண்டு, மாலை நேரங்களில் மேற்கத்திய பாணி உணவரங்கங்களிலும் விருந்துகளிலும் உல்லாசமாக பொழுதைக் கழிக்கின்றனர்.



ரேஷனுக்கு முண்டியடிக்கும் ரஷிய மக்கள்.

நாட்டின் மக்கள் தொகையில் கையளவேயான இக்கும்பலின் ஆடம்பர தேவைக்காகவும் நேர்த்தியான உணவுப் பண்டங்களின் இறக்குமதிக்காகவும் கோர்ப்பச்சேவ் கும்பல், நாட்டின் அரிய அந்நிய செலாவணியில் 80 லட்சம் பில்லியன் டாலர் வரை நான்காண்டுகளுக்குள் செலவழித்திருக்கிறது. பெருமை பொங்க, மேற்கத்திய பொருளாதார நிபுணர்களே இதை அம்பலப் படுத்துகின்றனர்.

ஆனால் மறுபுறமோ, உள்நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட உணவு உற்பத்தியின் இலக்குக்கு சரியான திட்டமிடுதல், தேவையான பொருளாதார உதவி இல்லாமல் சென்ற ஒரே ஆண்டில் மட்டும் 17 சதவிகிதம் உணவு உற்பத்தி குறைந்துவிட்டது. பெரும்பாலான மக்களுக்கு தேவையான குடியிருப்பு, சுகாதாரம், நுகர்பொருட்களுக்கு கொடுக்கப்பட்ட உதவிகள், மான்யங்கள் நிறுத்தப்பட்டு, அவற்றின் தரமும் அளவும் நாளுக்குநாள் குறைந்து வருகிறது.

மக்களின் தேவைக்காக திட்டமிடுதல்; விவசாய உற்பத்திக்கு முதலிடம் கொடுப்பது, இதற்கு துணையாக -ஆதரவாக கனரகத் தொழில்களை வளர்ப்பது என்பதற்கு பதிலாக அனைத்தும் ராணுவத்திற்கே; அதன் பூதாகரமான வளர்ச்சிக்கே; என்று பிரஷ்னேவ் -கோர்ப்பச்சேவ் கும்பல் நாட்டின் மூலாதாரங்கள், செல்வங்கள் அனைத்தையும் சாவு வியாபாரத்தில் திருப்பிவிட்டது. விளைவு; ரசிய நாடே பஞ்சபூமியாக மாற்றப்பட்டு விட்டது.

''பணத்தின் மதிப்பு சமீப மாதங்களில் திடீரென வீழ்ச்சியடைந்து விட்டது'' என்று ரசிய பிரதமர் நிக்கோலாய் ரிஷ்க்கோவே ஒப்புக் கொள்கிறார். ஆனால் இது பாதி உண்மைதான்! உண்மையில், ரசிய கள்ளச் சந்தையில் ரூபிளின் மதிப்பு செல்லாக் காசாகி விட்டது. ஒரே அடியாக 80 சதவிகிதம் ரூபிளின் மதிப்பு வீழ்ச்சியடைந்து விட்டது. ஒரு ரூபிளின் ரசிய அரசின் அதிகாரபூர்வமான மதிப்பு 1.60 டாலர். ஆனால், அது கள்ளச்சந்தையில் வெறும் 20 சென்ட் மதிப்புக்குத்தான் புழகத்திலிருக்கிறது. ரசிய அரசின் அதிகாரபூர்வ அறிவிப்பின்படி சமீபத்தில் அதன் பட்ஜெட்டில் 100 பில்லியன் ரூபிள் துண்டு விழுந்திருக்கிறது. நடைமுறையில் இருக்கும் ரூபிளின் உண்மை மதிப்பின்படி பற்றாக்குறை பலநூறு பில்லியன்களைத் தாண்டும்.

முழுவதும் முதலாளித்துவ மயமாக்கும் கோர்ப்பச்சேவின் பெரஸ்த்ராய்க்கா என்ற கேடுகெட்ட பொருளாதாரக் கொள்கையால் ரசியநாடே ஓட்டை விழுந்த படகுபோல் பற்றாக்குறையால் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கோர்ப்பச்சேவ் கும்பல் தான் விரும்பினாலும் ராணுவச் செலவை இனிமேலும் பெருக்கவோ, அந்நிய நாடுகளில் தன்னுடைய ஆக்கிரமிப்பு ராணுவத்தை நிலைத்து நிற்க வைக்கவோ முடியாது. அதனால்தான் படைவிலகல், ஆயுதக்குறைப்பு, சமாதான வேடம் போட்டுக்கொண்டு அவகாசத்திற்காக பதுங்குகிறது. அடுத்து, முன்னிலும் வேகமாகப் பாய்வதற்கு, மூலாதாரங்களைத் தேட உள்நாட்டு மக்களின் மீது மூர்க்கமான பொருளாதார தாக்குதல் தொடுக்கிறது. இதற்காக அந்நிய மூலதனத்தையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கிறது.

பெரஸ்த்ராய்க்கா அரங்கேறியவுடன் அதை வாழ்த்தி வரவேற்ற உலக 'மூதறிஞர்கள் முதல் உள்ளூர்க் கழிசடைகள் வரை கூறியதுபோல் அது ரசிய நாட்டையோ, அந்நாட்டின் மக்களையோ உய்விக்க வந்த உன்னத கொள்கை அல்ல. கம்யூனிச கொள்கை காலாவதியாகி போனதால், கோர்ப்பச்சேவ் சுயமாக பெற்றெடுத்த புதிய பொருளாதாரக் கொள்கையும் அல்ல. மரண படுக்கையில் இருக்கும் பலவண்ண போலி சோசலித்திலான ஒருவண்ணம் தான் பெரஸ்த்ராய்க்கா என்பது நிரூபணமாகிவிட்டது.

— மணி.

## ராஜாங்க கம்யூனிஸ்டுகளின் பஞ்சாங்க நாளேடு

*ரசியாவில் கோர்ப்பசேவ் கும்பல் கிளாஸ்நாஸ்ட் - பிரஸ்த்ரோய்கா கொள்கைகளை அறிவித்து முதலாளித்துவத்தை அரங்கேற்றி வருவதைக்கண்ட இந்திய போலிக் கம்யூனிஸ்டுகள் தாங்களும், தங்கள் குருபீடத்தின் பாதையில் வேகமாக நடைபோடத் தொடங்கி விட்டனர். குறிப்பாக தமது கட்சியின் நாளிதழ்களில் முதலாளித்துவ சோம்பேறி ஆட்டமான கிரிக்கெட் பற்றி முதல்பக்கத்தில் பரபரப்பாக செய்தி வெளியிட்டு வந்த போலிகள் இன்று அதைவிட ஒருபடி முன்னேறிவிட்டார்கள்.*

*மே.வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சியின் நாளிதழான ''ஜனசக்தி''யில் அன்றாடம் அந்நாளில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை - கம்யூனிச இயக்கத் தலைவர்களின் பிறந்தநாள், புரட்சிகர எழுச்சி நடந்த நாள் முதலானவற்றை ஒரு தனிப்பகுதியாக வெளியிட்டு வந்தனர். சிறிது காலம் கழித்து ஒருநாளில் இந்து பண்டிகைகளை அப்பகுதியில் வெளியிட்டனர். பிறகு இந்து சனாதனிகளான சைதன்ய தேவ், ராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்தநாள் முதலானவற்றையும் வெளியிடத் தொடங்கினர். பின்னர் இந்துமதக் கற்பனாவாதக் கோட்பாட்டின்படி கி.மு. 3102ல் தோன்றிய 'கலியுகம்' ஒரு குறிப்பிட்ட நாளில் தொடங்கியதாக கண்டுபிடித்து வெளியிட்டனர்.*

*''ஜனசக்தி'' பத்திரிகையின் விற்பனை குறைந்து விட்டது போலும். அதற்காக ஜனரஞ்சகமாக ஆன்மீகவாதிகளையும், கவரும் வண்ணம் பத்திரிக்கையை மாற்றிவிட்டார்கள். போகிற போக்கைப் பார்த்தால் ஜனசக்தி பஞ்சாங்கமும், ராசிபலன், தினப்பலன், ராகுகாலம், எமகண்டம் முதலானவற்றையும் வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!*

படிப்பகம்

www.padippakam.com

கருணாநிதிக்கு ஒரு



தமிழனர் தகரர்!

கடந்த ஒரு மாதத்துக்குள்ளாக நாட்டின் ஐந்து மாநில சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும்ஏறக்குறையஒரேமாதிரியான நாடாளுமன்ற - சட்டமன்ற ரௌடித் தனங்கள், கேலிக்கூத்துகள் நடந்துள்ளன. இருந்தாலும் தமிழக மக்கள் என்ன ''பாக்கியம்'' செய்தார்களோ! தமிழகத்தின் ''தலைசிறந்த கதை - வசன கர்த்தா முதல்வராகவும், பிரபலமான கவர்ச்சி நடிகை எதிர்க்கட்சித் தலைவியாகவும் வாய்த்திருப்பது ஒரு வேளை இதற்கான காரணமாக இருக்கலாம்! அதனால்தான் மற்ற இடங்களில் நடந்த சட்டமன்ற ரௌடித் தனங்கள், கேலிக் கூத்துகளைவிட மிகவும் சுவாரசியமானவற்றை இங்கே நடத்திக் காட்டினார்கள்.

அரசியல் நோக்கர்களுக்கோ ஒரு தரமான பொழுது போக்கு சினிமாவைப் பார்த்த திருப்தி ஏற்பட்டது. மார்ச்சு 25 ந் தேதி மாலை ஐந்து மணிக்கு சென்னையிலே ஒரு சில்லரைச் செய்தித் தாள் வியாபாரி சொன்னார், ''தினமும் இப்படி நடந்தா எவ்வளவு சந்தோசமா இருக்குந் தெரியுமா? அரைமணி நேரத்திலே எல்லாம் பறந்திருச்சு.'' அவரது முகத்திலே மகிழ்ச்சி பொங்கியது. அதேபோலத்தான் அடுத்த நாள் அதிகாலையிலும், செய்தித்தாள் கடைகள் திறப்பதற்கு முன்னே வாசகர் கூட்டம்; போட்டி போட்டுக்கொண்டு வாங்கிக் கொண்டு போனார்கள். கொஞ்ச நேரத்திலேயே பத்திரிக்கைகள் காலியாகிவிட்டன.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், மந்திரிகளும் அங்கே செய்து வரும் ரௌடித்தனங்கள், கேலிக்கூத்துகளையே வெளியே ஏதாவது ஒரு சாதாரணக் குடிமகன் செய்தால் அவை கடும் தண்டனைக்குரிய கிரிமினல் குற்றங்களாகி விடும். கொலைமுயற்சி, கற்பழிப்பு, எதிரிகள் மீது ரத்தக் காயம் ஏற்படுமளவு தாக்குவது, பொதுச் சொத்துக்களை சூறையாடுவது - சேதம் விளைவிப்பது, பொது இடத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவித்து வன்முறையைத் தூண்டுவது, கலவரங்களில் ஈடுபடுவது, ஆபாசமான வசவுகள்-அசிங்கமான செய்கைகள் -மானக்கேடான சம்பவங்கள் ஆகியவற்றில் ஈடுபடுவது - இப்படி ஏராளமான கிரிமினல் குற்றங்கள். இவை அத்தனையையும் செய்து விட்டு ''மக்கள் பிரதிநிதிகள்'' என்பதற்காகத் தரப்பட்டுள்ள பல தனிச்சிறப்பான உரிமைகள் சலுகைகளைக் காட்டி தண்டனை இன்றித் தப்பித்துக் கொள்கிறார்கள். இவை எல்லாவற்றையும் விட மேலாக மக்களுக்குக் கடமையாற்றுவதாகக் கூறிவிட்டுப் போய் நம்பிக்கைத் துரோகம் செய்து, பொதுப் பணத்தை விரயமடிக்கிறார்களே, இதுவே ஒரு கிரிமினல் குற்றமாகும்.



கடந்த மார்ச்சு 25ந் தேதி தமிழக சட்டமன்றத்தில் நடந்த சம்பவங்களைத் தொகுத்துப் பாருங்கள். அவை எத்தகு கிரிமினல் குற்றங்கள் என்று தெரியும்!.

''கருணாநிதி ஒரு கிரிமினல்; ஒரு கிரிமினல் முதல்வராக இருக்கக்டாது; ஒரு கிரிமினல் மாநில பட்ஜெட் வைக்கக் கூடாது'' என்று கூச்சல் போடுகிறார் ஜெயலலிதா.

''ஏண்டி, பச்சைத் தேவடியாள்! நீயா என்னை முதல்வராக இருக்ககூடாது என்று சொல்வது? போய் சோபன் பாபுவிடம் சொல்லு'' என்று ஏசுகிறார் முதல்வர்.

மீண்டும் அதே வசனங்களை இருவரும் பரிமாறிக் கொள்கிறார்கள். ஆனால் முதல்வர், பொது வாழ்வில் பொன் விழா கொண்டாடிய அனுபவசாலியல்லவா? ''மைக்''கைத் துண்டால் மூடிக்கொண்டு, எச்சரிக்கையோடு ஏசுகிறார்.

ஜெயலலிதாவின் அருகே ஓடிவந்த அவருடைய கட்சி எம்.எல்.ஏ. செங்கோட்டையனைப் பார்த்து, ''குத்துடா அவனை'' என்று ஏவினார். கருணாநிதி முகத்திலே அவர் குத்தி கண்ணாடி உடைகிறது. கருணாநிதி கையிலிருந்த பட்ஜெட் உரைப் புத்தகத்தைப் பிடுங்கி, அவர் மண்டையிலே அடித்தார், செங்கோட்டையன். ''ஜெயலலிதாவே பட்ஜெட் புத்தகத்தைப் பிடுங்கிக் கிழித்து விசிறியதை முதல் வரிசையில் இருந்த நானே பார்த்தேன்'' என்று போலிக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கே.ரமணி சாட்சியம் கூறுகிறார். மேலும் சில ஜெயலலிதா கட்சி எம்.எல்.ஏக்கள் ஓடிவந்து கருணாநிதியைத் தாக்க முயலுகிறார்கள். அவ்வளவுதான்! தி.மு.க.வினர் களத்திலே குதிக்க கலவரம் துவங்கி விட்டது.

## சட்டமன்ற ரௌடித் தனங்கள்:

துணைச் சபாநாயகர் துரைசாமி, ஜெயலலிதா கட்சிக் காரர்களைக் குத்தினார். துணை மந்திரி எல்.கணேசன் அவரை இழுத்துக் கொண்டார். பிறகு ஜெயலலிதா கட்சிக் காரர்கள் பட்ஜெட் புத்தகம், ''பேப்பர் வெயிட்'', ''மைக்'' ஆகியவற்றைப் பிடுங்கி தி.மு.க.க்காரர்கள் மீது வீசினர். கண்ணப்பன், பொன்,, முத்துராமலிங்கம், கோ.சி. மணி ஆகிய மந்திரிகள் கருணாநிதியைச் சூழ்ந்து கொண்டனர். தி.மு.க.க்காரர்கள் புத்தகங்களையும், மரக்கட்டைகளையும் ஜெயலலிதாவைக் குறிவைத்து வீசினர். மந்திரி கண்ணப்பன் ஜெயலலிதாவை ஒரு குத்து குத்தினார். திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன் ஆகிய ஜெயலலிதா கட்சிக்காரர்கள் அவரைச் சூழ்நதுகொண்டு பாதுகாக்க முயன்றார்கள். ஒரு தி.மு.க எம்.எல்.ஏ வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, மேசை மீது ஏறி ஜெயலலிதாவை எட்டி உதைத்தார். காங்கிரசு துணைத் தலைவர் குமரி அனந்தன் அவரைக் கீழே இழுத்தார்.

சாத்தூர் ராமச்சந்திரன் மைக்கைப் பிடுங்கி மந்திரிவீரபாண்டி ஆறுமுகத்தின் மண்டையில் அடிக்க ரத்தம் கொட்டியது. செருப்பு, மரப்பலகைகள், ''மைக்'', ''புத்தகங்கள்,'' ''பேப்பர் வெயிட்'' ஆகிய கையில் கிடைத்ததை எல்லாம் எடுத்து இரு தரப்பினரும் தாக்கிக் கொண்டனர். தேவடியாள் என்றும் எழுதமுடியாத ஆபாச வசனங்களாலும் ஒருவரைஒருவர் ஏசிக் கொண்டனர். காங்கிரசாரும் இந்த ரௌடித் தனத்தில் குதிக்கவே மூப்பனாருக்கும் செருப்படி விழுந்தது. பார்வையாளர்கள்

## அவமானமாகக் கருதவில்லை;

படிப்பகம்

www.padippakam.com



ஜெயலலிதாவுக்கு ஒரு துரும்பு நண்பர் நடராஜன்!

பகுதியிலிருந்தும் செருப்புகள், புத்தகங்களை வீசி தி.மு.க.காரர்கள் தாக்கினர்.

ஜெயலலிதா இருக்கைக்குள் சுருண்டு கொண்டு தலைக்குமேலே கைகளை வைத்துக் கொண்டு, அழுதார். ஜெயலலிதா சபையை விட்டு வெளியேற எழுந்தபோது, மந்திரி துரைமுருகன் அவரது சேலையைப் பிடித்து இழுத்தார். முந்தானை கிழிந்தது. சேலையை உருவிக் கொண்டு திருநாவுக்கரசு ஜெயலலிதாவை வெளியே அழைத்துப் போக தலைவிரிகோலமாக அழுது கொண்டே காருக்குள் ஏறி கவர்னரிடம் புகார் கொடுக்கப் போனார்கள். வெளியேறி விட முயன்ற ஜெயலலிதா கட்சிக் காரர்களைத் துரத்தித் துரத்தி தாக்கினார்கள். நெஞ்சைப் பிடித்துக் கொண்டு ஓடிய அண்ணா நம்பி கீழே விழுந்தார். அவரை சிலர் காலால் மிதித்தனர். மயங்கி விழுந்த அவரை அவை ஊழியர்கள் எடுத்துப் போனார்கள். ஆரம்பம் முதலே ஆளுங்கட்சிக்கு ஆதரவாகவும், ஜெயலலிதாவை ஆபாசமாக ஏசியும் தூண்டிவிடும் திருப்பணியைச் செய்து கொண்டிருந்தார் முன்னாள் சபாநாயகர் பாண்டியன். அவரைத் துரோகியெனச் சொல்லி ஜெயலலிதா கட்சியினர் தாக்க ஓடினார்கள். அவரும் வேட்டியை மடித்து கைச்சட்டையை சுருட்டிக் கொண்டு கோதாவில் குதிக்கத் தயாரானார். மிரண்டு போன ஜெயலலிதா கட்சிக்காரர்கள் பின்வாங்கி விட்டனர். ஜெயலலிதா வெளியேறிய பிறகு கலவரம் ஓய்ந்தது.

அவை ஊழியர்கள் ஆயுதங்கள், அலங்கோலங்களை அப்புறப்படுத்திய பிறகு மீண்டும் சபை கூடியது. வெறியிலே குளிர்காற்று, குளிர் நீர் சாதனங்களைக்கூட ''மக்கள் பிரதிநிதி''கள் உடைத்து எங்கும் ஈரமாக்கியிருந்தனர். கருணாநிதி பட்ஜெட்டைப் படித்து முடித்தபிறகு, ஜெயலலிதா கட்சிக்காரர்களை சபையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யும் தீர்மானம் நிறைவேறியது. அதை எதிர்த்து, குழம்பிய குட்டையில் "மீன்'' பிடிக்கும் நோக்கத்தோடு காங்கிரசார் வெளிநடப்பு செய்தனர்.

அப்புறம், கருணாநிதியும், ஜெயலலிதாவும், அவர்களுடைய கட்சியினரும் வெளியே தமது கைவரிசைகளைத் துவங்கினர். ''சபையில் வைத்தே என்னைக் கொல்ல முயன்றார்கள். மானப்பங்கப் படுத்த முயன்றார்கள். சேலையைப் பிடித்து இழுத்துக் கிழித்தார்கள். நான் இதுவரை கேட்டிராத வார்த்தைகளினால் ஆபாசமாக ஏசினார்கள். எதிர்கட்சித் தலைவியான ஒரு பெண்ணுக்கே இந்தக் கதி என்றால் சாதாரணப் பெண்களின் நிலை என்ன? கருணாநிதியும் தி.மு.க. ஆட்சியும் இருக்கும்வரை சட்டசபைக்குப் போக மாட்டேன். இந்த ஆட்சியை நீக்கிவிட வேண்டும். சி.பி.ஐ. விசாரணை நடத்தவேண்டும்'' என்று பேட்டி கொடுத்த போதே ஜெயலலிதா அழுது புலம்பினார்.

''ஜெயலலிதாவே தூண்டி, ஏவிவிட என்னைத் தாக்கினார்கள். சபையை நடத்த விடமாட்டோம் என்று ஏற்கனவே சாத்தூர் ராமச்சந்திரன் பேசியிருந்தார். காங்கிரசும், ஜெயலலிதாவும் திட்டமிட்டு சதிசெய்து தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக செய்த அராஜகம் தான் இவை. இன்னும் சில தினங்களில் முன்னாள் மந்திரிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தப் போகிறேன். அதைத் திசை திருப்பவே இப்படிச் செய்தார்கள். உங்களுக்கே தெரியும், ஆபாசமான வார்ததைகளைப் பேசக்கூடியவனா நான்?'' என்று கேட்டு நடித்திருக்கிறார் கருணாநிதி.

சட்டசபை ரௌடித்தனங்கள் பற்றிய செய்தி பரவியதும் உடன்பிறப்புகளும், ரத்தத்தின் ரத்தங்களும் கொதித்தெழுந்தார்கள். சென்னையின் பல பகுதிகளிலும், கோவை, மதுரை, சேலம், திருச்சி, தஞ்சை, காஞ்சி வேலூர், ஈரோடு ஆகிய நகரங்களில் ஜெயலலிதா கட்சிகாரர்கள் கண்டன ஊர்வலங்கள் நடத்தி, பஸ்களைத் தாக்கி, கடைகளை மூடும்படி செய்தனர். கடைகளைத் திறக்கும்படி கருணாநிதி கட்சியினர் மிரட்டி ஊர்வலம் போனார்கள். அவசியமான இடங்களில் சோடாப் புட்டிகள் சகிதமாக மோதிக் கொண்டார்கள். கரிகளால் சுவர்களிலும், சுண்ணாம்புக் கட்டிகளால் தார்ச் சாலைகளிலும் ஜெயலலிதா, கருணாநிதி பற்றி ஆபாசமான வசவுகளைக் கிறுக்கினார்கள். அடுத்துக் கண்டன அறிக்கைகள், பேரணிகள் என்று இரு தரப்பும் தொடர்ந்து இயக்கங்கள் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இத்தனைக்கும் காரணம் - அடிப்படை ஏதோ கொள்கை மோதல்கள் அல்ல. எம்.எல்.ஏ. சீட்டுக்கள் பெறுவதற்கு ஆளுக்கு 2,3 லட்சம் என்று ஏறக்குறைய 3000 பேரிடமிருந்து கோடிக்கணக்காக வசூலித்துவிட்டுப் பலருக்குப் பட்டை நாமம் சாத்திவிட்டது ஜெயலலிதா கும்பல். பணத்தைத் திருப்பிக் கேட்கப் போனபோது ஜெயலலிதாவின் குடும்ப நண்பர் என்று சொல்லிக் கொள்ளும் நடராஜன் தாக்கியதாகவும், துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாகவும் இரண்டு கட்சிக்காரர்கள் போலீசிடம் புகார் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் நடராஜனைக் கைது செய்து, வீட்டைச் சோதனை போட்ட போலீசார் பல இரகசிய ஆவணங்களைக் கைப்பற்றினர். அவற்றிலே, உடல்நிலை காரணமாக அரசியலில் இருந்து விலகுவதாக ஒரு பத்திரிக்கை செய்தியும், சட்டமன்றத்திலிருந்து விலகுவதாக சபாநாயகருக்கு ஒரு கடிதமும், ஜெயலலிதா எழுதியவை, கிடைத்தன.

கருணாநிதியின் கட்டளைப்படி ராஜீனாமா கடிதம் சபாநாயகருக்கும், விலகல் அறிக்கையை பத்திரிக்கைகளுக்கும் போலீசார் அனுப்பினர். ''ஜெயலலிதா அரசியல் விலகல்'' என்ற பரபரப்பான செய்தியோடு மறுப்பு அறிக்கையும் வெளிவந்தன. ஜெயலலிதாவின் உட்கட்சி விவகாரங்களை அம்பலப்படுத்தி ஆதாயம் தேட கருணாநிதி முயன்றார். கூடவே கொலை முயற்சி, மோசடி உட்பட பல வழக்குகளை ஜெயலலிதா மீதும் அவருடைய கட்சிக்காரர்கள் மீதும் தொடுத்தார். ஜெயலலிதா கும்பல் உட்கட்சி விவகாரம் என்கிற பெயரில் பல கிரிமினல் குற்றங்களைச் செய்து வருவது உண்மைதான்! என்றாலும் கருணாநிதி அவற்றைத் தமது அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்திக் கொள்ள முயன்று சிக்கிக் கொண்டார். அரசியல் ரீதியில் தன்னைச் சந்திக்க முடியாத கருணாநிதி சதி செய்து பொய் வழக்குகள் போட்டுப் பழிவாங்குவதாக பிரச்சாரம் செய்தது ஜெயலலிதா கும்பல். அதன் ஒரு பகுதியாக சட்டமன்ற ரௌ



# அவசியமெனச் செய்கிறார்கள்!

படிப்பகம்

www.padippakam.com

டித்தனங்களையும், கேலிக் கூத்துகளையும் பயன்படுத்திக் கொள்கிறது.

கடந்த சட்ட மன்றத் தேர்தல்களிலே மண்ணைக் கவ்விய காங்கிரசு கருணாநிதி, ஜெயலலிதா அரசியல் சண்டையிலே தலையிட்டு ஜெயலலிதா மீதேறி சவாரி செய்வது என்று முடிவு செய்து விட்டது. ''ஒரு பெண்ணை இப்படி மான பங்கப்படுத்தலாமா? ஜனநாயக விரோதமாக நடக்கலாமா?'' என்று காங்கிரசு முதலை கண்ணீர் வடிக்கிறது. ''வெட்கித் தலை குனிய வைப்பவை; இதற்கு நமது கலாச்சாரத்தில் இடமில்லை; சட்டவிரோத ஜனநாயக விரோதப் போக்கு'' என்று காங்கிரசின் குட்டித் தலைவர்கள் டெல்லியிலிருந்து அறிக்கை விடுகிறார்கள். பிரதமர் ஜெயலலிதாவிடம் அனுதாப விசாரணை செய்கிறார். மத்திய மந்திரி ஓடிவந்து ரகசியப் பேச்சு வார்த்தை நடத்துகிறார். ''எழுதிக் கொடுங்கள் மத்திய அரசுக்கு அனுப்புகிறேன்'' என்று ஆறுதல் கூறுகிறார் கவர்னர் அலெக்சாண்டர்.

தமிழகத்தில் மட்டுமா இப்படி நடக்கிறது? மேற்கு வங்கம், ஒரிசா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய நான்கு மாநிலங்களிலும், நாடாளுமன்றத்திலும் இதேபோல கடந்த ஒரு மாதத்துக்குள் ரௌடித்தனங்களும் கேலிக் கூத்துகளும் நடந்துள்ளன. குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் காங்கிரசு கட்சி எம்.எல்.ஏக்கள் கூட்டங்களே அடிதடியில் முடிந்துள்ளன. இதற்கெல்லாம் முக்கிய நாயகர்களாக இருந்த காந்திய காங்கிரசாரா ஜனநாயகம், கண்ணியம் பற்றிப் பேசுவது?

☆ கடந்த பிப்ரவரி 27ந் தேதி மேற்குவங்க சட்டமன்றத்தில் உரையாற்ற விடாமல் கவர்னரைச் சூழ்ந்து கொண்டு ''கெரோ'' செய்தனர் காங்கிரசு எம்.எல்.ஏக்கள். கவர்னரின் கனத்த தொந்தியிலே குத்தி, அவரது உரையைப் பிடுங்கிக் கிழித்து முகத்திலே விசிறியடித்தனர். தப்பி ஓடிய கவர்னரின் காரை மறித்து, மேலேறி ஆட்டம் போட்டனர். போலிக் கம்யூனிஸ்டுப் பெண் எம்.எல்.ஏக்களின் சேலையைக் கிழித்தனர். அவர்களைச் சூழ்ந்து கொண்டு 'மார்க்சிஸ்டு'' கட்சி எம்.எல்.ஏக்களும் மந்திரிகளும் தாக்கி, ஒருவரது மண்டையை உடைத்தனர். கலவரத்தில் கூட்டம் முடிந்தது. அடுத்த நாள் காங்கிரசு எம்.எல்.ஏ 12 பேரை சட்டமன்றத்திலிருந்து தற்காலிக நீக்கம் செய்தனர்.

☆ கடந்த மார்ச்சு 15ந்தேதி இந்திரா கொலையை விசாரணை செய்த தாக்கர் கமிஷன் அறிக்கையை வெளியிடும்படி இரண்டாவது நாள் நாடாளுமன்றத்தில் நடந்த கலவரத்தின் போது, பெண் மந்திரி ஷீலா தீக்சித் வாசித்த அறிக்கையைப் பிடுங்கவும் அவரை அடிக்கவும் கை ஓங்கிவிட்டார் எதிர்க்கட்சி எம்.பி அரிஃப் முகமதுகான். நான்கு இ.காங்கிரசு எம்.பிகள் அவரைப் பிடித்துத் தள்ளினார்கள். சரமாரியான ஆபாசமான வசவுகளைப் பரிமாறிக் கொண்டதோடு, கோப்புகள் வைக்கும் மரத்தட்டை எடுத்து வீசினார்கள். கலவரம் மூள்வதற்கு முன்பு சபை ஒத்தி வைக்கப்பட்டது. பிறகு எதிர்க்கட்சி எம்.பிக்கள் 63பேரைக் கூண்டோடு நாடாளுமன்றத்திலிருந்து தற்காலிக நீக்கம் செய்தனர்.

☆ கடந்த மார்ச்சு 17ந் தேதி, தாக்கல் கமிஷன் அறிக்கையை வெளியிடும்படி ஆந்திர சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்த போது, காங்கிரசு எம்.எல்.ஏக்கள் அவை மையப்பகுதியில் குவிந்து கூச்சல் போடத் துவங்கினர். சபாநாயகர் மேசை மீது ஏறி உட்கார்ந்து கொண்டு ஒருவர் கூச்சல் போட்டார். ஆபாசமான வசவுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு சபை இயங்கமுடியாத நிலை தொடர்ந்தது. பிறகு சபையில் கலவரம் செய்ததாக 18 காங்கிரசு எம்.எல்.ஏக்கள் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர்.

☆ பீகார், குஜராத் ஆகிய மாநிலங்களைத் தொடர்ந்து ராஜஸ்தானிலும் காங்கிரசு கும்பல் -பதவிச் சண்டை முற்றியுள்ளது. கடந்த மார்ச்சு 19ந் தேதி மத்திய மந்திரிகள் தலைமையில் காங்கிரசு எம்.எல்.ஏக்கள் கூட்டம் நடந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கி சட்டைகளைக் கிழித்துக் கொண்டனர். ஆபாசக் கூச்சலிட்டு, விளக்கை அணைத்துவிட்டு ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து நொறுக்கினர். பல எம்.எல்.ஏக்கள் படு காயமடைந்தனர். மந்திரி அறைக்குள் ஓடி ஒளிந்து தப்பித்துக் கொண்டார்.

☆ கடந்த மார்ச்சு 23ந் தேதி மருத்துவ உயர்கல்விக்கான ஓரிடத்தை தனியார் மருத்துவருக்குக் கொடுத்ததை எதிர்த்து கர்நாடகா மேலவையில் தொடர்ந்து இரண்டு நாட்களாக கூச்சல் போட்டு, மறியல் செய்தனர் காங்கிரசார். அவை நடக்கவிடாமல் தடுத்ததாகக் கூறி 12 எம்.எல்.ஏக்கள் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர்.

— இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன. நாடாளுமன்ற சட்டமன்ற ரௌடித்தனங்களும் - கேலிக் கூத்துகளும் நாடு தழுவிய, விதிவிலக்கற்ற வழக்கமாகிவிட்டன. எதிர்க்கட்சிகளை நீக்கிவிட்டு அவையை நடத்துமளவு ஜனநாயகம் வாழுகிறது! பிறகு நடந்தவை நடந்தவையாகப் போகட்டும் என்று கூறி இதே ஓட்டுக் கட்சிகள் சமரசம் செய்து கொள்கின்றன. ஆனால் ''ஜனநாயகத்தின் கண்ணியத்தைக் காக்கும்படி'' போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா ஓட்டுக்கட்சி அரசியல் வாதிகளும், பத்திரிக்கைகளும் ஒரு சுற்று கூப்பாடு போட்டு ஓய்ந்துவிடுகின்றனர்.

உண்மையாகச் சொன்னால் ஜனநாயகத்துக்கும் கண்ணியத்துக்கும் இந்த ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. நாடாளுமன்ற -சட்டமன்ற அராஜகங்களில் தாங்கள் அடி உதை படுவதையும் ஆபாச வசவுகளைக் கேட்பதையும் அவர்களே அவமானமாகக் கருதவில்லை. அவை ஓட்டுப் பொறுக்குவதற்கான பிரச்சார விஷயங்களாகக் கருதுகிறார்கள் - எந்தப் பிணம் விழுந்தாலும் உரிமை கொண்டாடி ஒப்பாரி வைத்து ஓட்டுப் பொறுக்குவதைப் போல! ''முதுபெரும் அரசியல் தலைவர் கலைஞரைத் தாக்கலாமா?'' என்றும், ''ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தி அடிக்கலாமா?'' என்றும் கேட்டு அவரவர் அனுதாபம் தேடிக் கொள்கிறார்கள்.

காந்தீயம், திராவிடம், தேசியம், போலிக் கம்யூனிசம் - சோசலிசம் போன்ற கொள்கைகள் -இலட்சியங்களை ஓரங்கட்டி வைத்துக் கொண்டு தனிநபர் வழிபாடு, கவர்ச்சி முழக்கங்கள், இலவசத் திட்டங்கள் என்று எல்லா ஓட்டுக் கட்சிகளும் முடிவு செய்துவிட்ட பிறகு, பிழைப்பு வாதிகளைக் கொண்டு பொறுக்கி அரசியல் நடத்துவது என்று இறங்கிவிட்ட பிறகு நாடாளுமன்ற -சட்டமன்ற ரௌடித்தனங்களும், கேலிக் கூத்துகளும் அவர்களுக்கு மிகவும் அவசியமானவை ஆகிவிட்டன. கொள்கைகளையோ, இலட்சியங்களையோ, அவற்றின் அடிப்படையான திட்டங்களையோ சொல்லி அவர்கள் இனிமேலும் ஓட்டு பொறுக்கப் போவதில்லை. நாடாளுமன்ற -சட்டமன்ற அராஜகங்கள் மூலம் தமது வீர தீர சாதனைகளை காட்டியும், அனுதாபங்களை பெற்றும்தான் அரசியல் நடத்தமுடியும் என்கிற அளவு இழிந்து போய்விட்டார்கள்.

ஆனால் இவற்றையே காரணமாகக் காட்டி நாடாளுமன்ற சட்டமன்ற ஆட்சிமுறையையே அகற்றிவிட்டு, பாசிச -இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு அதிகாரவர்க்க இராணுவ - பாசிச கும்பல் காத்துக் கொண்டிருக்கிறது.

இனிமேலும் எந்த ஓட்டுக் கட்சியையும், அவர்களின் ஜனநாயகப் பித்தலாட்டங்களையும் நம்பமுடியாது. பாசிசம் அவர்களின் இடத்தைப் பிடித்து பரந்துபட்ட மக்கள் மீது அம்மணமான சர்வாதிகாரத்தை நிறுவும் முன் புரட்சிப்பாதையை மக்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

புரட்சியின் மூலம் இந்த ஓட்டுக்கட்சிகள், சட்டமன்ற -நாடாளுமன்ற ஆட்சிமுறை, அவற்றுக்குப் பின்னே உள்ள அரசு எந்திரம் அத்தனைக்கும் முடிவுகட்டடுவதன் மூலம் இப்போது நடந்துவரும் ரௌடித்தனங்கள் ஆபாச கேலிக்கூத்துகள் அனைத்துக்கும் முடிவு கட்டவேண்டும்.

— ஆர்.கே.

## வறட்சி நிவாரண நடவடிக்கை எடுக்கக் கோரி ஆர்ப்பாட்டம்!

புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து நிவாரண நடவடிக்கை எடுக்கக் கோரியும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் வரிவசூல் செய்வதை நிறுத்தி வைக்கக் கோரியும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கக் கோரியும் எல்லா கிராமங்களுக்கும் ஆழ்குழாய் கிணறு அமைத்து உடனடியாக பாசனவசதி செய்துதரக் கோரியும் விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக மார்ச் 10ந் தேதியன்று திருவோணம் ஒன்றிய வி.வி.மு. அமைப்பாளர் தோழர் துரைமாணிக்கம் தலைமையில் ஏறத்தாழ 2கி.மீ தூரம் ஊர்வலமாக முழக்கமிட்டுச் சென்று, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா அலுவலகம் முன்பு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் தோழர் குருமூர்த்தி சிறப்புரை ஆற்றினார். பகுதி மக்கள் இந்நடவடிக்கையை வெகுவாக வரவேற்று ஆதரித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

# மேலைநாகரிகத்தின் பாசாங்கு அம்பலமானது

மேலை நாடுகளின் சீரழிந்த மேட்டுக்குடி கலாச்சாரம் மீண்டும் வீதிக்கு வந்து நாறுகிறது. அந்தஸ்தும் அதிகாரமும் பெற்ற முதலாளித்துவ அரசியல்வாதிகளின் தனிநபர் ஒழுக்கம் பற்றிய செய்திகள் இன்று உலகெங்கும் சாக்கடையாக நாறுகிறது. சில வாரங்களுக்கு முன் ஆஸ்திரேலியாவின் 59 வயதான பிரதமர், ஒரு இளம்பெண்ணுடன் நடத்திய ரகசிய வாழ்க்கை பற்றிய செய்திகள் வெளிவந்து சந்தி சிரித்தது. இப்போது, பிரிட்டனின் ஆளுங்கட்சி எம்.பி.க்கள் பமீலா என்ற இந்திய 'அழகுராணி'யுடன் நடத்திய காமக்களி வெறியாட்டங்களும், அவள் மூலம் ராணுவ ரகசியங்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற பீதியும் சூடேறிய விவகாரமாக அந்நாட்டைக் கலக்குகிறது.

1982-ல் இந்தியாவின் 'அழகுராணி'யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜஸ்தானைச் சேர்ந்த பமீலா, பின்னர் மேலை நாடுகளுக்குச் சென்று மேல்மட்ட விலைமகளானாள். பெரு நாட்டுத் தலைநகர் லிமாவில் நடந்த உலக அழகிப் போட்டியில் அவள் கலந்த கொண்ட போது உலகின் பெரும் கோடீஸ்வரனும், ஆயுதக் கடத்தல் பேர்வழியுமான அட்னன் கஷோகியின் 'சிநேகிதி'யானாள். கஷோகியின் மூலம் ரகசிய உலகப் பேர்வழியான சந்திராசாமியின் 'நட்பு'ம் கிடைத்தது.

பின்னர் பிரிட்டனுக்கு வந்த அவள், ஆளும் கன்சர்வேடிவ் கட்சி எம்.பி. டேவிட் ஷா என்பவரின் ஆராய்ச்சி உதவியாளராகச் சேர்ந்து, மக்களவைக்குள் நுழையும் உரிமை பெற்றாள். அதன்மூலம் பல ஆளுங்கட்சி மந்திரிகள், எம்.பி.க்களின் 'பெண் தோழி'யானாள். விளையாட்டுத்துறை மந்திரி காலின் மொய்னிகன், சிரிப்பு நடிகர் ஜிம்டேவிட்சன், பிரபல பத்திரிக்கை ஆசிரியர்கள், 'ராக்' இசைக் கலைஞர்கள், இன்னும் பிரதமர் தாட்சரின் ரகசிய ஆலோசகர் வரை ஏராளமானோர் அவளது 'நண்பர்கள்'.

பமீலாவுக்கும் அவளது மேல்மட்ட 'நண்பர்'களுக்குமான கள்ள உறவு பற்றிய விவகாரம் 'கிசுகிசு' செய்தியாக இருந்தது போய், இப்போது பிரிட்டனில் 'ஸ்காண்டல்' என்ற திரைப்படம் வெளியானதையடுத்து, சூடேறிய விவகாரமாகிவிட்டது. பிரிட்டனில் கீலர் என்ற விலைமகள் 1963ல், அன்றைய மாக்மில்லன் அரசின் போர்த்துறை மந்திரியாக இருந்த ஜான் ப்ரோப்ஃயூமோவுடன் உல்லாசமாக இருந்து அவரிடமிருந்து பல ராணுவ ரகசியங்களைக் கறந்துவிட்டாள். அதேசமயம் பிரிட்டனிலிருந்த ரஷிய ஏகாதிபத்திய ராணுவ உயரதிகாரியுடனும் உறவு கொண்டிருந்தாள். இதன் காரணமாக பிரிட்டனின் ராணுவ ரகசியங்கள் கடத்தப்பட்டு ஆட்சிக் கவிழ்ப்பு அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்போது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அதைத் தொடர்ந்து ஜான் ப்ரோப்ஃயூமோ அவமானத்தால் பதவிவிலகினார். மாக்மில்லன் அரசு கவிழ்ந்தது. கீலர் சிறையிடப்பட்டாள். 26 ஆண்டுகளுக்கு முன் நடந்த இச்சம்பவத்தை விளக்கும் திரைப்படம்தான் 'ஸ்காண்டல்'! இப்போது பமீலாவும் ''எனக்கு சில ரகசியங்கள் தெரியும்'' என்று கூறியதை வைத்துக் கொண்டு கீலரைப் போல பமீலாவும் ஒரு உளவாளியாக, சதிகார விலைமகளாக இருக்கக்கூடும் என்று பத்திரிகைகள் சூடேற்றுகின்றன.

இதை நிரூபிக்கும் வகையில் பமீலாவுக்கும் லிபியாவின் ராணுவ உயர் அதிகாரிக்குமிடையேயான ரகசிய உறவு பற்றிய செய்திகள் வருகின்றன. லிபியாவின் 'பச்சை' சோசலிச, ராணுவ சர்வாதிகாரி கடாபியின் உறவினரும், ராணுவ உயரதிகாரியுமான அகமது கடாஃப் -அல் டய்ம் என்பவருக்கும் பமீலாவுக்கும் ரகசிய உறவு இருந்து வந்தது. இதற்காக அவள் பலமுறை பாரீசுக்குப் பறந்து செல்வாள். கடாபியின் அரசு விருந்தாளியாக லிபியாவுக்கும் இன்னும் பல அரசு நாடுகளுக்கும் சென்று வந்துள்ளாள். கடாப் - அல் -டய்ம் ராணுவ அதிகாரி என்ற பெயரில் சர்வதேசப் பயங்கரவாதிகளுக்கு ரகசியமாக ஆயுதங்களைக் கடத்தி விற்கும் வேலையையும் செய்து வந்துள்ளாள். 1984-ல் லண்டனில் ஒரு இரவு விடுதியில் நடந்த குண்டு வெடிப்புக்கு அவன்தான் காரணம். பாரீசில் இவனுடன் பமீலா உல்லாசமாக சுற்றியபோதே, அமெரிக்க, பிரெஞ்சு உளவு நிறுவனங்கள் இவர்களது நடவடிக்கைகளை ஆராயத் தொடங்கின. ரீகனின் ''ஈரான் -காண்ட்ரா'' ஆயுத பேரத்திலும் பமீலா சம்பந்தப் பட்டிருக்கக்கூடும் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் பீதியூட்டுகின்றன.

இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் எகிறிப் பாய்ந்து, பிரிட்டனின் பாதுகாப்புக்கே அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி நீதி விசாரணை கோரினார். பிரதமர் தாட்சரும் பிரிட்டனின் ரகசிய ஒற்றாடல்' துறையான 'எம்.ஐ.5' மூலம் விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளார். ஆளுங்கட்சி பிரமுகர்களோ, தாங்களும் பமீலாவும் சாதாரண நண்பர்களாகவே இருந்தோம்; சதி ஏதும் நடக்கவில்லை என்று சாதிக்கின்றனர்.

விலைமகளுடன் கள்ள உறவும், ரகசியங்களைக் கடத்துவதும், உளவு வேலை பார்ப்பதும் ஏதோ அறியாமல் நடந்துவிட்ட விவகாரமல்ல; பிரிட்டனுக்கு மட்டுமேயான பிரச்சினையுமல்ல! உலகெங்கும் எல்லா முதலாளித்துவ பிற்போக்கு நாடுகளிலும் இது பெரும் சந்தை வியாபாரமாகப் பெருகிவிட்டது. காலனியாதிக்கத்திற்காகவும், ராணுவத்தளவாட உற்பத்தி -வியாபாரத்திற்காகவும், மேலாதிக்கப் போட்டிக்காவும் எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் தங்களுக்குள்ளும் பிற ஏழை நாடுகளையும் ரகசியமாக உளவறிகின்றன. இதற்காக ஆயுத பேரத் தரகர்கள், போதை மருந்து கடத்தல்காரர்கள், மேல்மட்ட விபச்சாரிகள், ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி பிரமுகர்கள், ராணுவ அதிகாரிகள் ஆகியோரை ரகசியமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. ஒருபுட்டி சீமைச் சாராயத்துக்கும் பெண் சுகத்துக்கும் லார்க்கின்ஸ் என்ற இந்திய ராணுவ அதிகாரி அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. வுக்கு உளவு வேலை பார்த்த விவகாரத்திலிருந்து பிரதமர் அலுவலகத்திலேயே உளவாளிகள் இருந்த விவகாரம் வரை ஏராளமான சம்பவங்கள் இங்கேயும் நடந்துள்ளன.

பிரிட்டனின் நாலாந்தர பத்திரிக்கைகளும் அவற்றோடு போட்டி போட்டுக் கொண்டு இந்தியப் பத்திரிக்கைகளும் பமீலா விவகாரத்தைப் பற்றி தினமும் பரபரப்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றன. பமீலாவின் கவர்ச்சிப் படங்கள், அவள் வாங்கும் கட்டணம், வெவ்வேறு பெயர்களில் உள்ள அவளது வங்கிக் கணக்கு விபரம்; அவளது ஆடம்பரமாளிகை என்று ஆபாசக் குப்பைகளை அள்ளி அள்ளிக் கொடுத்து வாசகனை போதையில் கிறங்க வைக்கின்றன. பிரிட்டனில் முக்கிய பிரச்சினையாக இருக்கும் சால்மன் ரஷ்டி விவகாரம்கூட பின்னுக்குத் தள்ளப்பட்டு இப்போது பமீலா விவகாரம் முன்னுக்கு வந்துவிட்டது.




பமீலாவுடன் 'தி அப்சர்வர்' மற்றும் 'போர்டுநீத்' பத்திரிக்கைகளின் ஆசிரியர்கள்

தனிநபர் ஒழுக்கத்துக்கு முதன்மை கொடுப்பதாகக் கூறிக் கொண்டு, பிரிட்டனில் குடியேறும் பிற நாட்டு இளம் பெண்களுக்கு விமான நிலையத்திலேயே அவர்களது கன்னித்தன்மையை சோதனை செய்தும், ஆப்பிரிக்காவிலிருந்து கல்வி கற்க வரும் மாணவர்களுக்கு 'எயிட்ஸ்' நோயுள்ளதா என்று சோதனை செய்தும் அவமானப் படுத்துகிறது, காட்டுமிராண்டி பிரிட்டிஷ் அரசு. ஆனால் 'உலகுக்கு நாகரீகத்தைக் கற்றுக் கொடுத்த' அந்நாட்டு மேட்டுக்குடி கனதனவான்களின் தனிநபர் ஒழுக்கம் சாக்கடையாக நாறுகிறது.

— குமார்.

படிப்பகம்

www.padippakam.com

## சிலுவையில் அறையப்பட்ட மாணவர்கள்

மாணவர்களை அடிமைகளைப் போல நடத்தி, அவர்களின் சிந்தனைகளை முடமாக்குவதில் 146 ஆண்டுகளாகப் 'புகழ்' பெற்றது திருச்சியிலுள்ள செயிண்ட் ஜோசப் கல்லூரி. "ஜெயில் ஜோசப்", "ஸ்லேவ் செயிண்ட் ஜோசப்" என்ற பட்டப் பெயர்களும் இதற்கு உண்டு.

'இயேசு சபையினர்' என்றழைக்கப்படும் கிறித்தவப் பாதிரிமார்களால் இக்கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. உரிமைக்காக் குரல் கொடுக்கும் மாணவர்களின் குரல்வளையை நசுக்குவதில் கைதேர்ந்தவர்கள் இப்பாதிரிமார்கள். ஆதலால் 'கட்டுப்பாடான' கல்லூரி என்று கூறி, அரசாங்கம் இக்கல்லூரிக்கு 1978ல் 'தன்னாட்சி' உரிமையை அளித்தது.

இக்கல்லூரியில் 'புத்தில்லம்' என்ற மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. இதில் அறுநூறு மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர். மூன்று பாதிரிமார்கள் இவ்விடுதியின் வார்டன்களாக இருக்கின்றனர். அவர்கள், பீட்டர் பிரான்சிஸ், ஜோ துரை, இருதயசாமி ஆகியோர். பீட்டர் பிரான்சிஸ் என்பவர் விடுதியின் வார்டனாக இருப்பதோடு, கல்லூரியின் துணை முதல்வராகவும் இருக்கிறார்.

விடுதியில் இவர்கள் செய்து வரும் அராஜகங்களுக்குக் குறைவே இல்லை. ஒவ்வொரு மாதமும் உணவுக் கட்டணம் மிக அதிகமான அளவு வசூலிக்கப்படுகிறது. 16 எம்.எம். சினிமாக்களை ஒவ்வொரு மாதமும் போட்டு அதற்கு ஒவ்வொரு மாணவரிடமும் எட்டு ரூபாய் வசூலிக்கிறார்கள். மின்சாரக் கட்டணம் ஒவ்வொரு மாணவருக்கும் தலைக்கு இருபது ரூபாய். அடிக்கடி பல பெண்கள், இம்மூன்று பாதிரிமார்களையும் தேடி வருவது உண்டு. வார்டன்களின் அறையில் மதுபானப் புட்டிகளும், சிகரெட் பெட்டிகளும் நிறைந்திருப்பது உண்டு.

இருதயசாமி என்ற பாதிரியார் திருச்சியிலுள்ள கருமண்டபம் என்ற இடத்திற்கு அடிக்கடி போய் வருவார். இவர் அங்கு 'பாப்பா' என்கிற பெண்ணை வைப்பாட்டியாக வைத்திருக்கிறார். கல்லூரி விடுதியில் வேலை பார்க்கும் சேவியர் என்பவன் இவருடைய கையாள். 'பாப்பா'வுக்குத் தூது போகும் வேலைகளைச் செய்பவன்.

பீட்டர் பிரான்சிஸ் என்ற பாதிரியார் மாதம் ஒரு முறை பம்பாய் சென்று வருவார். அங்கு இவருடைய வைப்பாட்டி ஒருத்தி இருக்கிறாள்.

திருமணம் செய்து கொள்ளாமல், மக்கள் 'சேவை'க்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டதாகக் கூறிக்கொள்ளும் இப்பாதிரிமார்களின் அட்டூழியங்கள் மாணவர்கள் அனைவரும் அறிந்ததே. விடுதி மாணவர்களின் பணத்தை அநியாயமாகக் கொள்ளையடித்து, அந்தப் பணத்தில் பாதிரிமார்கள் நடத்தி வரும் உல்லாச வாழ்வைக் கண்டு மாணவர்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தனர்.

ஜனவரி மாதம் ஹாஸ்டலில் நடந்த கலை நிகழ்ச்சி ஒன்றில் மாணவர்கள் ஒரு நாடகம் நடத்தினர். இந்த நாடகத்தில், பாதிரிமார்களின் போலித்தனங்களை இவர்கள் சூசகமாக வெளிப்படுத்தினர். ஜான் ஆரோக்யராஜ், சக்தி பாபு என்ற இரு மாணவர்கள் பாதிரிமார்களாக வேடமேற்று நடித்தனர். மாணவர்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றது இந்நாடகம். தங்கள் முகமூடிகள் கிழிக்கப்படுவதைக் கண்ட பாதிரிமார்கள் சும்மா விடுவார்களா?

இந்நாடகம் நடந்த அடுத்த வாரமே, ஹாஸ்டலுக்கு வெடிகுண்டு வைக்க முயன்றதாகவும், ஹாஸ்டல் பணத்தைத் திருடியதாகவும் நாடகத்தில் நடித்த இரு மாணவர்களான ஜான் ஆரோக்யராஜ், சக்திபாபு ஆகியோரையும் அவர்களுக்கு உதவியாயிருந்த, அந்தோணி, இளங்கோவன், பெலிக்ஸ் ஆகிய மாணவர்களையும் ஹாஸ்டலில் இருந்து டிஸ்மிஸ் செய்தனர். இவர்கள் அறைகளில் இல்லாத போது இவர்களுடைய புத்தகங்களை எடுத்து வெளியே வீசி இருக்கி



பீட்டர் பிரான்சிஸ்

## அரசு மாணவர் விடுதியின் அவல நிலை! மாணவர் உயிர் குடித்தது மரணக்கிணறு

நந்தனம் அரசினர் மாணவர் விடுதி; சென்னை - அண்ணாசாலையை ஒட்டி அமைந்திருக்கும் விடுதி. விடுதி என்பதைவிட மாநகராட்சி பொது கழிப்பறை என்று சொல்வதுதான் மிகவும் பொருந்தும்.

பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 340 மாணவர்கள் தங்கியிருக்கும் இந்த விடுதியில் அடிப்படைத் தேவைகள் அறவே இல்லாமல் மாணவர்கள் படும் துன்பங்களுக்கு அளவேயில்லை. 340 மாணவர்கள் தங்கியிருக்கும் இவ்விடுதியில் இருக்கும் ஒரு சில கழிப்பறைகளும், குளியலறைகளும் பயன்படுத்த முடியாத நாற்றம் ஒருபுறம், குவிந்து கிடக்கும் குப்பை கழிவுகளிலிருந்து படையெடுக்கும் கொசுத் தொல்லை மறுபுறம். கழிவுநீர் தொட்டி மாதிரி இருட்டறையில் இருக்கும் தரைக் கிணற்றிலிருந்து நீர் இறைத்து மாணவர்கள் மைதானத்தில் குளித்துக் கொண்டிருக்கும் அவலம்.

மாணவர்களின் பராமரிப்புக்கென்று மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு அரசு ஒதுக்கும் பணம் ரூ.140. அந்த சொற்ப தொகையையும் முழுமையாக செலவழிப்பதில்லை, விடுதி பொறுப்பாளர் டி.சக்தி வேலாயுதம் அதில் பாதியை சுருட்டிக் கொள்கிறார். காய்கறி வாங்குவதிலிருந்து, விடுதிக்கு வெள்ளையடிப்பது வரை கான்ட்ராக்ட் விட்டு ஒன்றுக்கு பத்தாக கணக்கெழுதுகிறார். ஆனால் பலமுறை கோரியும் பழுது பார்க்கும் சிறு சிறு வேலைகளுக்கு கூட பணம் இல்லையென கையை விரிக்கிறார்.

இருட்டறையில் இருக்கும் தரைக்கிணற்றைச் சுற்றி ஒட்டடைப் போன்று தொங்கிக் கொண்டிருக்கும் பழுதடைந்த மின்சார கம்பிகள். தவறி அதன் மேல் சாய்ந்தால் சாவு நிச்சயம். சமீபத்தில் இப்படித்தான் இங்கு ஒரு மாணவர் இறந்துபோனார்.

திருத்தணியில் இளநிலை பட்டப்படிப்பு படிக்கும் ஞானசேகரன் என்பவர் இவ்விடுதியில் தங்கிப்படிக்கும் தம் அண்ணனைப் பார்க்க வந்தார். விடியற்காலை, ஊருக்கு போகும் அவசரத்தில் யாருடைய துணையும் இன்றி குளிக்கச் சென்றார். இருளடைந்த இடத்தில் இருக்கும் கிணற்றில் நீர் இறைத்த போது பழக்கமில்லாததால் தவறி கிணற்றில் விழுந்தவர், கைக்கு கிடைத்த மின்சார கம்பியை ஆதாரமாக பிடிக்க, அப்படியே விறைத்த நிலையில் மாண்டு போனார்.

பலமுறை கோரிக்கை மனுகொடுத்த போதும், உண்ணாவிரதம் இருந்தபோதும் எட்டிப் பார்க்காத அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மாணவரின் சாவுக்கு துக்கம் விசாரிக்க விடுதிக்குப் படையெடுத்தனர். எங்கே, மாணவர்கள் போராட்டத்தில் குதித்து செய்தியை பரப்பிவிடுவார்களோ என்ற பயமும் காரணமாக இருக்கலாம்! ஆனால் வந்தவர்கள் விடுதிக்கு உள்ளே கூட காலெடுத்து வைக்கவில்லை. "நாற்றம் அடிக்கும்" என்று கிண்டல் அடித்து விட்டு வந்த வேகத்தில் திரும்பிச் சென்றனர். தற்போது புதிதாக பதவியேற்றிருக்கும் அரிஜன நலத்துறை அமைச்சர் ராமகிருஷ்ணனும் இதே முறையில்தான் நடந்து



படிப்பகம்

www.padippakam.com

றார், பீட்டர் பிரான்சிஸ் என்ற பாதிரியார். நியாயம் கேட்கச் சென்ற போது இரு மாணவர்களை பலமாக அடித்து வன்முறை வெளியாட்டம் நடத்தி இருக்கிறார் இந்தப் பாதிரியார்.

பாதிரியார்களின் இந்த வெறியாட்டம் கண்டு எரிமலையாக வெடித்தனர், கல்லூரி மாணவர்கள். இந்நிலையில், ஜனவரி 27ஆம் தேதி இக்கல்லூரியின் வரலாற்றிலேயே இல்லாத கொந்தளிப்பு மாணவர்களிடம் ஏற்பட்டது. மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர்; ஹாஸ்டல் மாணவர்கள் ஒரு நாள் முழுவதும் உணவு உண்ணவில்லை. மாணவர்கள் சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

மாணவர்களின் எழுச்சியைக் கண்டு அஞ்சிய பாதிரிமார்கள் கல்லூரிக்கு கால வரையற்ற விடுப்பு அளித்தனர். இக்கல்லூரி வரலாற்றிலேயே மாணவர்கள் இந்த மாதிரிப் போராட்டம் நடத்தியதும் இல்லை; மாணவர்களின் போராட்டத்திற்காக கல்லூரிக்கு கால வரையற்ற விடுப்பு அளித்ததும் இதுவே முதல் முறை.

ஐந்து மாணவர்களையும் டிஸ்மிஸ் செய்தது சரிதான் என்று பெற்றோர்களிடமே எழுதி வாங்கிக் கொண்டனர். இத்தனையும் நடந்து முடிந்த பின்னர்தான் மீண்டும் கல்லூரி திறக்கப்பட்டது. பழி வாங்கப்பட்ட ஐந்து மாணவர்களும் இப்போது தெருவில் நின்று கொண்டிருக்கிறார்கள். மீண்டும் போராட்டத்தில் குதித்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்று மற்ற மாணவர்கள் எச்சரிக்கப் பட்டிருக்கிறார்கள்.

மாணவர்களைச் சிலுவையில் அறையும் இப்பாதிரியார்களை நாம் சிலுவையில் அறைவது எப்போது?

— அலமேலு, திருச்சி.

கொண்டார். வன்னியர் வன்முறையை கண்டிக்க பேரணி நடத்த மட்டும் சாதி உறவு கொண்டாடி இரண்டு லாரிகளில் மாணவர்களை ஓட்டிச்சென்ற அம்பேத்கார் மக்கள் தலைவர் வை.பாலசுந்தரம் மாணவர் சாவுக்கு எட்டிக்கூட பார்க்கவில்லை!

இவ்வளவு துன்பங்கள் துரோகங்கள் அனுபவித்த போதும் இவ்விடுதி மாணவர்கள் இன்னும் பிரமையில் இருக்கிறார்கள். போராட்டமலேயே விடிவு பிறக்கும் என நம்புகிறார்கள். இன்று இல்லையானாலும் சில காலம் கழித்தாவது சில சில்லறை சீர்திருத்தங்கள் செய்து ஓட்டுப் பொறுக்கிகள் இம் மாணவர்களிடம் தங்கள் தலைமையை தக்க வைத்துக் கொள்ள முயலலாம்! ஆனால் விடுதியை சுத்தம் செய்து விடுவதால் மட்டும் விடிவு பிறந்துவிடப் போவதில்லை. விடுதிக்கு வெளியே உழைக்கும் மக்கள் ஓராயிரம் பிரச்சினைகளுக்கு தன்னந்தனியாக முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நமது பெற்றோர்களும் சகோதரிகளும் கூட அதில் இருக்கிறார்கள். அவர்களுடன் ஒன்றிணைந்து போராட்டத்தை முனனெடுக்கும் போது மட்டுமே பிரச்சினைகள் தீர்வதற்கு வழி ஏற்படும்.

## பட்டத்தை ஏலம் விட்ட பல்கலைக் கழகம்.

ஓட்டுக் கட்சித் தலைவர்கள் ஆட்சியைப் பிடித்ததும் ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திடமிருந்து தங்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் பெற்றுக்கொள்வது, இந்திய ஜனநாயகத்தின் கண்கொள்ளாக் காட்சி! இப்போது அதே பாணியில் எந்தத் தகுதியுமில்லாத கொள்ளைலாப காண்டிராக்டர் ஒருவரும் மங்களூர் பல்கலைக்கழகத்திடம் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

ஆந்திராவைச் சேர்ந்த சுப்பராமி ரெட்டி மிகப்பெரிய காண்டிராக்டர். நாகார்ஜுன சாகர் கால்வாய் திட்டத்தை உரிய காலத்திற்குள் முடித்து கொடுத்து 1967ல் இந்திரா காந்தியிடம் தங்கப்பதக்கம் பெற்ற காண்டிராக்டருக்கு டாக்டர் பட்டம் வாங்க வேண்டுமென்று நாக்கில் எச்சில் ஊறியது. அதற்காக மங்களூர் பல்கலைக்கழகத்துக்கு ஜவஹர்லால் நேரு ஆய்வுக்கல்வியைத் துவக்க ரூ.10 லட்சம் நன்கொடை அளித்தார். உடனே பல்கலைக்கழக வேந்தரும், கவர்னர் வெங்கிடசுப்பையாவும் அவருக்கு கௌரவ டாக்டர் கொடுக்க சிபாரிசு செய்தனர். பல்கலைக்கழக செனட் உறுப்பினர்களும், பேராசிரியர்களும், மாணவர்களும் இம்முடிவை கடுமையாக எதிர்த்துக்கொண்டிருந்த அதே நேரத்தில் சுப்பராமி ரெட்டிக்கு டாக்டர் பட்டம் வழங்க ஏற்பாடுகள் வேகமாக நடக்கத்தொடங்கின.



காண்டிராக்டருக்கு பட்டமளிக்கப்படுவதை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் கழுதைக்கு பட்டமளிக்கும் விழா.

பெரிய புள்ளி. சிமெண்ட் கள்ளமார்க்கெட் பேர்வழி. தனது அயோக்கியத்தனங்களை மறைக்க சுப்பராமி கலாபீடம், சேவாபீடம் என்ற பெயரில் அறக்கட்டளைகள், மருத்துவமனை, திருமண மண்டபம் முதலானவற்றை நிறுவி சிறந்த பரோபகாரியாக வேடம் போடுபவர். இதனாலேயே ஆந்திராவின் செஞ்சிலுவைச்சங்க கௌரவ உபதலைவராகவும் இருப்பவர். தனது அருமை பெருமைகளை தம்பட்டம் அடிப்பதற்காகவே சினிமா நடிகனைப் போல் 150 ரசிகர் மன்றங்களை நிறுவியுள்ளவர்.

இதோடு, எல்லா பணமுதலைகளையும் போலவே, ஆட்சியாளர்களையும் குறிப்பாக கவர்னர்களையும் உரியமுறையில் 'கவனிப்பது' அவரது வாடிக்கை. அவர்களும் தம் செஞ்சோற்றுக்கடன் தீர்க்க அவரை "காலபந்து", "காலா சாம்ராட்", "கலாரத்னா", என்று அடைமொழிகளுடன் பாராட்டி கௌரவித்துள்ளனர். இப்போதைய ஆந்திர கவர்னர் குமுத்பென் ஜோஷியும் 'இத்தலைமுறையின் மிகச்சிறந்த மனிதர்' என்று புகழாரம் சூட்டி அவரை கௌரவித்தார். இத்தனையும் போதாதென்று இந்த

ஆத்திரமுற்ற மாணவர்கள் சுப்பராமி ரெட்டிக்கு பட்டமளிப்பு விழா நடந்த அதே நேரத்தில் அதேபோல கழுதைக்கு பட்டமளிக்கும் விழாவை நடத்தி அம்பலப்படுத்தினர். பல்கலைக்கழக கல்விக்கவுன்சில் உறுப்பினர் நாயக், மாணவர்களோடு சேர்ந்து கொண்டு "பல்கலைக்கழகத்திற்கு நிரந்தரமாக கரும்புள்ளி ஏற்பட்டுவிட்டது" என்று குற்றம் சாட்டினார். பல்கலைக்கழக காக்காய் கல்வி மான்களோ "ஆயிரம் பேர் பணம் சம்பாதிக்கலாம்; ஆனால் ரெட்டியைப் போன்ற தயாள குணமுடையவர்களைப் பார்ப்பது அரிது; அவர் ஒரு உண்மையான காந்தியவாதி" என்று தமது செயலுக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

அவர்கள் வாதப்படி, கள்ளக்கடத்தல் காரன் மஸ்தான் பல்கலைக்கழகத்துக்கு நன்கொடை அளித்தால் அவனுக்கும் டாக்டர் பட்டம் கொடுக்கப்படும். சாராயம் விற்ற காசில் மருத்துவப் பல்கலைக்கழகம் நிறுவிய சென்னை சாராய உடையாருக்குக்கூட டாக்டர் பட்டம் கொடுக்கப்படும். ஒரு வேளை இதுதான் புதியக் கல்விக் கொள்கையின் சாதனையோ?

படிப்பகம்

www.padippakam.com

நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளான நாம் மேலும்மேலும் ஓட்டாண்டிகளாகி வருகிறோம். விவசாயமே இயற்கையோடு நடத்தும் சூதாட்டமாகிவிட்டது. அரசின் சட்டங்களும் திட்டங்களும் விவசாயிகளுக்கு ஒரு மண்ணும் செய்வதில்லை. அதேசமயம் நிலப் பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும் மேலும் மேலும் கொழுக்கின்றனர்.

காவிரி காய்ந்துவிட்டது; நஞ்சை செழிக்கும் தஞ்சை மாவட்டம் தரிசு நிலமாகி விட்டது. தமிழகத்தின் பல மாவட்டங்கள் வறட்சியின் விளிம்பில் நிற்கின்றன. கடன் சுமை தாளாமல் விவசாயிகள் குடும்பம் குடும்பமாகத் தற்கொலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பிழைக்க வழியற்ற நிலையில் ஏராளமான விவசாயிகள் நகரங்களுக்கு ஓடி அற்பக் கூலிக்கு கொத்தடிமைகளாக உழல்கிறார்கள். இன்னும் சிலர் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தொழிலாகக் கொள்ள வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கிராமப்புறங்களை - விவசாயத்தைப் புறக்கணிக்கும் அரசின் கேடுகெட்ட கொள்கையால் மொத்த நாட்டு மக்களுக்கும் வாழ்வளிக்கக் கூடிய விவசாயம் பின்னிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. விவசாயிகள் புறக்கணிக்கப்பட்ட மூன்றாந்தர குடிமக்களாக உள்ளனர்.

**ஆளுவது அதிகாரிகள் தான்!**

பாடுபடும் விவசாயிகளை நிலப்பிரபுக்கள், பெரு வியாபாரிகள், பெரு முதலாளிகள் மட்டும் சுரண்டுவதில்லை. அரசாங்கமே தனிப் பெரும் சுரண்டல் ஒடுக்குமுறை நிறுவனமாக வளர்ந்து நமது உதிரத்தை உறிஞ்சிக் கொழுக்கிறது. நம்மிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் பிடுங்கப்படும் வரியிலிருந்தும், அரசாங்கத்தின் வருமானத்திலிருந்தும் நூற்றுக்கு எழுபது சதவிகிதத்தை அதிகாரவர்க்கக் கூட்டமே விழுங்கி விடுகிறது. இந்த பூதாகரமான அரசு எந்திரம் மேலும்மேலும் பெருத்து அதிகரித்த அளவில் நம்மை ஒடுக்கிச் சுரண்டி வருகிறது.

எனவே இந்த அரசியலமைப்பு நீடிக்கும்வரை விவசாயிகள் ஒடுக்குமுறை சுரண்டலிலிருந்து விடுபட முடியாது. ஆனால் இந்த உண்மையை தேர்தல் கட்சிகள் கூறுவதில்லை. எல்லா தேர்தல் கட்சிகளும் நிலப்பிரபுக்கள், கமிஷன் மண்டிக்காரர்கள், கந்து வட்டிக் காரர்கள், சாதி மதவெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்து அவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சேவை செய்வதிலேயே குறியாய் இருக்கின்றன. தமது தேர்தல் நோக்கங்களுக்காக விவசாயிகளைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றன. இக்கட்சிகளை நம்பிப் போவது மண் குதிரை மீதேறி ஆற்றில் இறங்குவது போலாகும்.

**அதிகாரத்தைக் கோராத மலட்டு சங்கங்கள்**

நாராயணசாமி நாயுடு சங்கம் இப்படித்தான் போராடியது. ''விவசாயிகளுக்கு அரசியலே வேண்டாம்; கட்சி சார்பற்ற சங்கம்'' என்று கூறிக்கொண்டே இச்சங்கம் பின்னர் ஓட்டுக் கட்சிகளின் கைப்பாவையாக மாறியது. பணக்கார விவசாயிகள், நிலப்பரப்புக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய இச்சங்கம் சிதைத்துபோய் இன்று தானே ஒரு அரசியல் கட்சியாக மாறி ஓட்டுப் பொறுக்கவும் செய்கிறது.



# ஒரு விடியலை நோக்கி...

இதேபோல் மராட்டியத்தில் சரத் ஜோஷி என்பவரின் தலைமையிலும், உ.பி.யில் மகேந்திரசிங் திக்காய்த் என்பவரின் தலைமையிலும் உள்ள விவசாய சங்கங்கள் விவசாயிகளை அணிதிரட்டி, அதன் பலத்தைக் காட்டி ஓட்டுக் கட்சிகளிடம் விலை போகின்றன.

கோரிக்கைகளுக்காக நாம் போராடும் போது அவற்றின் சிலவற்றை அரசாங்கம் ஓரளவு தீர்க்கவும் செய்கிறது. ஆனால் நம்முடைய பிரச்சினைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகின்றன. காரணம், அரசாங்கம் ஒரு பிரச்சினையைத் தீர்த்து பல பிரச்சினைகளைக் கிளப்பிவிடுகிறது. எனவே தான் கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி அரசியல் அதிகாரத்திற்காகவும் விவசாயிகள் போராட வேண்டும்.

ஆனால் வெறும் சலுகைகளை மட்டும் கோரும் இவ்வகை அமைப்புகள், விவசாயிகளின் அரசியல் அதிகாரத்தைக் கோராத இவ்வகை அமைப்புகள், உண்மையில் விவசாயிகளின் போராட்ட உணர்வை மழுங்கடித்து திசைதிருப்பி வருகின்றன.

**போலிக் கம்யூனிஸ்டுகளின் வாய்ப்புரட்சி சங்கங்கள்**

ஒருசில எம்.எல்.ஏ.; எம்.பி. பதவிக்காக எந்தக் கட்சியுடனும் கூடிக் குலாவும் 'இடது', 'வலது' போலிக் கம்யூனிஸ்டுகளின் விவசாய சங்கங்களும் இப்படிப்பட்ட கோரிக்கைகளைத் தான் வைக்கின்றன. மற்ற சங்கங்களைவிட முற்போக்கானதாக, புரட்சிகரமானதாகக் காட்டிக் கொள்ள ஏழை விவசாயிகளுக்குச் சாதகமாகவும் பணக்கார விவசாயிகளுக்கு பாதகமாகவும் இருப்பது போன்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றன. உண்மையில் இத்தகைய கோரிக்கைகள் மூலம் திரட்டப்படும் மக்களை தமது நாற்காலி சுகத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டதற்கு மேல் வேறெதுவும் அவர்கள் சாதிக்கவில்லை.

சலுகைக்காகப் போராடும் சங்கங்களோடு, இன்று சாதிய சங்கங்கள் பெருமளவில் உழைக்கும் மக்களை -விவசாயிகளை அணிதிரட்டி அவர்களின் ஒற்றுமையைக் கூறுபோட்டு தமது குறுகிய நோக்கங்களுக்காக அவர்களைப் பலியிட்டு வருகின்றன. அவர்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து சாதிய போதையில் மூழ்கடித்து வருகின்றன.

**விவசாயிகளின் முன்னணிப்படை**

எனவே இத்தகைய சங்கங்களை உதறியெறிந்து விட்டு, விவசாயிகளின் விடுதலைக்கான வழியை அமைத்துக் கொடுக்கும் புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவது, உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவி உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவது, அதன்மூலம் விவசாயிகளின் வளமான எதிர்கால வாழ்க்கையை உருவாக்குவது ஒன்றே நமக்குள்ள ஒரே வழி!

இந்த உயர்ந்த லட்சியத்துடன் விவசாயிகளின் விடுதலைக்காக விடாப்பிடியாகப் போராடுகின்ற அமைப்பாக விவசாயிகள் விடுதலை முன்னணி இயங்கி வருகிறது.

விவசாயிகள் விடுதலை முன்னணி -கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழகத்தில் இயங்கிவரும் புரட்சிகர அமைப்பு. விவசாயிகளின் அதிகாரத்திற்காக தன்னை ஒரு முன்னணிப் போர்ப்படையாக முன்னிறுத்திக் கொண்டுள்ள அமைப்பு. புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்ற முனைப்புடன் செயல்பட்டுவரும் அமைப்பு.

* **உழுபவனுக்கே நிலம் சொந்தம்!**
* **உழைக்கும் மக்கள் கமிட்டிகளுக்கே அனைத்து அதிகாரங்களும்!**
* **விவசாயிகளின் விவசாயப் புரட்சி வெல்க!**

என்ற மைய முழக்கங்களை முன்வைத்து பல்வேறு வகைகளிலும் தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்து விவசாயிகளை அணிதிரட்டி வருகிறது. கிராமங்களில், மக்களின் குடும்ப, சொத்து மற்றும் ஊர் பொதுப் பிரச்சினைகளில் தலையிட்டு தீர்த்து வைக்கிறது. பல கிராமங்களுக்கான பொதுப் பிரச்சினைகளைக் கையிலெடுத்து மக்களை அணிதிரட்டி போராடித் தீர்க்க முனைகிறது. தமிழக



படிப்பகம்

www.padippakam.com



நிலப்பிரபுக்கள் பெரும் மாட்டுப் பண்ணைகள் வைத்து ஜல்லிக்கட்டு ரேக்ளா ரேஸ் நடத்தி கும்மாளமடிக்கிறார்கள். ஏழை விவசாயிகளோ உழவுமாடு வாங்கவும் வழியின்றி குடும்பப் பெண்களை பூட்டி ஏர் உழுகிறார்கள். அவலங்களையும் உணர முடியாமல் அப்பாவிகளாக இருக்கிறார்கள். காங்கிரசு ஆளும் உ.பி., பீகார், குஜராத் மாநிலத்தில் இக்கொடுமை அதிகமாக நீடிக்கிறது.

மக்களின் உயிராதாரமான பிரச்சினையான காவிரி நீர் பிரச்சினைக்கு, தஞ்சையில் காவிரி நீர்: தமிழக உரிமைக்கான மாநில மாநாட்டை நடத்தி தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்தது. கடந்த தேர்தலில் இவ்வகைத் தேர்தல்கள் போலி ஜனநாயக - மோசடித் தேர்தலே என்பதை விளக்கி தோழமை அமைப்பான மக்கள் கலை இலக்கியக் கழகத்துடன் இணைந்து திருச்சியில் போலி ஜனநாயகத் தேர்தல் புறக்கணிப்பு மாநாட்டை நடத்தியது. போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணித்து புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள அறைகூவல் விடுத்து தமிழக மெங்கும் தோழமை அமைப்புகளுடன் இணைந்து பிரச்சார இயக்கத்தை நடத்தியது.

தமிழகத்தில் தென்னாற்காடு, தஞ்சை, மதுரை, பெரியார் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஆறு பகுதிகளில் முறையான அமைப்பாக வி.வி.மு. செயல்பட்டு வருகிறது. இன்னும் பல்வேறு பகுதிகளிலும் புதிய கிளைகளாக விரிவடையும் வகையில் தனது முனைப்பான செயல்பாட்டின் மூலம் வளர்ந்து வருகிறது.

**போர்க்குணமிக்க புரட்சிப்படை**

குழந்தைப் பருவத்திலிருந்தாலும் வி.வி.மு. தனது போர்க்குணத்தை என்றுமே குறைத்துக் கொண்டதில்லை. எதிரிகளும் போலீசும் இந்தப் புரட்சிகர அமைப்பை முளையிலேயே கிள்ளியெறியவும் தயங்கியதில்லை. தஞ்சை - குடமுருட்டி குண்டு வெடிப்பையொட்டி விவசாயிகள் விடுதலை முன்னணியின் திருவையாறு மற்றும் திருவோணம் ஒன்றிய அமைப்பாளர்கள் மீது ராஜீவைக் கொல்ல முயன்றதாக பொய் வழக்கு சோடிக்கப்பட்டு தோழர்கள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டனர். அதேசமயம் இத்தகைய அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சிவிடாமல், விவசாயிகளைப் பரிதவிக்கவிட்ட பாசிச ராஜீவ் உசிலம்பட்டிக்கு வந்த போது உசிலை வட்ட வி.வி.மு. தோழர்கள் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இன்னும் பல்வேறு சம்பவங்களில் எம்மீது அடக்குமுறை ஏவப்பட்ட போதிலும் அவற்றைத் துச்சமாக மதித்து புரட்சிகர அமைப்புகளுக்கே உரிய வீரத் தழும்புகளுடன் தொடர்ந்து போராடி வருகிறது விவசாயிகள் விடுதலை முன்னணி.

**உடனடிக் கோரிக்கைகள்**

பாடுபடும் விவசாயிகளின் இருள்கவிந்த அவல வாழ்வை ஒழித்து ஒரு புதிய விடியலுக்காகப் போராடி வரும் வி.வி.மு. விவசாயிகளின் உடனடிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக பின்வரும் 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைக்கிறது.

1) நில உச்சவரம்பை அமுல்படுத்து! நட்டஈடு இன்றி உபரி மற்றும் பினாமி நிலங்களைக் கைப்பற்று! கூலி, ஏழை விவசாயிகளுக்கு அவற்றை இலவசமாக விநியோகி!

2) குறைந்தபட்சக் கூலியை அமுல்படுத்து!

3) கூலி விவசாயிகளுக்கு வேலை உத்திரவாதத் திட்டத்தை அமுல்படுத்து!

4) வேலை செய்யும்போது விபத்துக்குள்ளாகும் கூலி, ஏழை விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கு!

5) விளைபொருட்களுக்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்!

6) தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம், உரம், பூச்சிமருந்துகள் ஆகியவற்றை சலுகை விலையில் ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு வழங்கு!

7) அத்தியாவசியப் பொருட்களுக்கு நியாயமான ஒரே விலையைத் தீர்மானம் செய்! தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்!

8) வெள்ளம், வறட்சி, பூச்சிகளின் தாக்குதல்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்!

9) பாசனக் கால்வாய் வசதிகளைப் பெருக்கு! காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்!

10) அனைத்து கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கும் மானியத்துடன் கடன் வழங்கு!

11) சிறு விவசாயிகளின் பாசன வசதியற்ற நிலங்களுக்கு சமுதாயக் கிணறுகள் மூலம் நேரடி நீர்ப் பாசனம் செய்!

12) ஈழத்திலிருந்து இந்திய இராணுவ ஆக்கிரமிப்பைத் திரும்பப் பெறு!

13) 59-வது அரசியல் சட்டத் திருத்தம் உட்பட அனைத்து கருப்புச்சட்டங்களையும் இரத்து செய்!

14) ராஜீவ் கும்பலின் பாசிசத் திணிப்பு எத்தனிப்புகளை முறியடிப்போம்!

**அணிதிரள்வோம்!**
**ஆர்த்தெழுவோம்!**

மலட்டுத்தனமான போராட்டங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, வீறுகொண்ட வலிமைமிக்க விவசாயிகளின் புரட்சிகர போராட்டப் பாதையை உயர்த்திப் பிடித்து, இக்கோரிக்கைகளை நிறைவேற்ற விவசாயிகள் அனைவரும் அணிதிரண்டு போராடுவோம்! இப்போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் நமது இறுதி இலட்சியத்தை அடைய வீறுகொண்டெழுவோம்! அடிமை இருள் நீக்கி புதிய ஜனநாயகம் எனும் புதிய விடியலைப் படைக்க ஆர்த்தெழுவோம், வாரீர்!

**— விவசாயிகள் விடுதலை முன்னணி, தமிழ்நாடு.**

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய-சீன எல்லைத் தகராறு: மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்

## இந்திய அரசின் வெற்றிக் கனவுகள், இமாலயத் தவறுகள், ஆத்திர மூட்டல்கள்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இருதரப்பும் ஏற்றுக் கொண்ட வரையறுக்கப்பட்ட எல்லை இல்லாதபோதும் தகராறுக்குள்ளான பகுதிகளில் இராணுவச் சாவடிகளை நிறுவி ''முன்னேறும் கொள்கை''யை நேரு அரசு மேற்கொண்டது. அதே சமயம் இந்தியா ஒருதலைப்பட்சமாக உரிமை கொண்டாடிய பகுதிகளில் சீன இராணுவச் சாவடிகள் இருப்பதை ஆக்கிரமிப்பு என்று குற்றஞ்சாட்டியது. இதைத் தொடர்ந்து இந்திய எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியும், பத்திரிக்கைகளும் போட்டிபோட்டுக் கொண்டு சீனாவுக்கு எதிரான தேசிய வெறியையும் யுத்தவெறியையும் கிளப்பிவிட்டன. சீனாவுடன் போர் தொடுப்பதைத் தவிர எல்லைப் பிரச்சினைக்கு வேறு தீர்வே கிடையாது என்கிற தற்கொலைப் பாதையில் இந்தியாவை இட்டுச்சென்றன.

இராணுவ நிலைமைகளைப் பற்றி அரிச்சுவடிகூட அறியாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் முட்டாள்தனமான சவடால்கள் அடித்தனர். ''சீன மேலாண்மை என்ற பூச்சாண்டி குறித்து நமது இராணு வல்லுநர்கள் கவலைப்பட வேண்டியதில்லை'' என்று தைரியமூட்டினார் ஒரு எம்.பி. ''சீனச் செய்தித் தொடர்பு நிலை குலைந்து கிடக்கிறது, வெறுப்பும் விரக்தியுமுற்ற சீன மக்களுடைய கலக அபாயத்தினால் சீன இராணுவம் குழம்பிக்கிடக்கிறது'' என்று மற்றொரு எம்.பி. சித்திரம் தீட்டினார். ''இருநூறு இந்திய வீரர்கள் இரண்டாயிரம் சீனர்களின் பலமுடையவர்கள்'' என்று கணக்குப் போட்டார் இன்னொரு எம்.பி. ''நாம் ஏன் பயப்படவேண்டும்'' அவர்களை ஏன் தூக்கிவீசக் கூடாது?'' என்று வெடித்தார் வேறொரு எம்.பி. ''அரசு உத்திரவிடட்டும்; ஆறே மாதத்தில் ஆயுதப் பயிற்சி பெற்ற நாற்பது லட்சம் இந்துக்கள் இமயமலைக்குப் படையெடுப்பார்கள்; சீனர்களை விரட்டியடிப்பார்கள்'' என்று அவரே உறுதி கூறினார். ''நாட்டைப் பாதுகாக்க முடியாத அளவு இந்திய ராணுவம் ஆயுதபலம் குன்றி இருக்கிறது'' என்று தொலைக் காட்சிக்குப் பேட்டியளித்த பிரதமர் நேருவின் ஒன்றுவிட்ட சகோதரரும், அமெரிக்காவில் உள்ள தூதருமான பி.கே. நேருவை ஏகமனதாகக் கண்டித்தனர். (நாடாளுமன்ற விவாதங்கள், தொகுதி 6 எண் 6. பத்தி 1530)

இதேபோல மேலும் மேலும் உசுப்பிவிடும் வகையிலும், நேருவின் தயக்கத்தைக் கேலிசெய்யும் வகையிலும் பத்திரிகைகள் எழுதின. ''சீனர்கள் தாக்கத் துணியமாட்டார்கள். எனவே சாத்தியமான அளவு முன்னேறி இராணுவச் சாவடிகளை நிறுவுவோம். தாக்கினாலும் திருப்பி அடித்துவிரட்டும் பலம் நமது இராணுவத்துக்கு இருக்கிறது'' என்று நேருவும் அவருடைய உறவினரும் இராணுவச் செல்லப்பிள்ளையுமான கௌலும் திரும்பத்திரும்பச் சவடால் அடித்தனர்.

ஆனால் கீழ்மட்ட - கள இராணுவத் தலைமையோ மாறுபட்ட கருத்தே கொண்டிருந்தது. ''இராணுவ ரீதியில், நமது கைவசமுள்ள பகுதிகளைத் தக்கவைத்துக் கொள்ளக்கூட முடியாது. எனவே யுத்தத்தைத் தூண்டும் வகையில் சீனாவை ஆத்திரமூட்டக் கூடாது. சீனாவைப் பொருத்தவரை அக்சாய்சின் மலைப்பாதை மிகவும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே இந்தியா முன்னேறினால் சீனா கடுமையாகத் திருப்பித்தாக்கும். எனவே சீனாவை எதிர்கொள்ளும் அளவு படை - ஆயுதபலம் பெறும் வரை முன்னேறும் கொள்கையைத் தற்காலிகமானது நிறுத்தி வைக்க வேண்டும் எனறு இராணுவத்தின் மேற்கு மண்டல ஆணையத் தளபதி தௌலத்சிங் மிகத் தெளிவாக 1962 ஆகஸ்டிலேயே தலைமை நிலையத்துக்கு எழுதினார்.

மூன்றாவது வாரமே தௌலத் சிங்குக்குப் பதில் வந்தது ''முன்னேறும் கொள்கையே சரியானது; அவசியமானால் இறுதிப் போருக்கும் தயாராயிருக்க வேண்டும்'' என்று கட்டளையாக அது இருந்தது. படை - ஆயுத பலத்தைக் கூட்டுவது பற்றி எதுவுமில்லை.

'சுடுவதும் குண்டு வீசுவதும சிறுபிள்ளை விளையாட்டு அல்ல. நெருப்போடு விளையாடுபவன் நெருப்பாலேயே அழிவான்'' இந்திய இராணுவம் தொடர்ந்து அச்சுறுத்தி ஆத்திரத்தைத் தூண்டுமானால் அதனால் எழும் விளைவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டிவரும்'' என்று 1962 செப்டம்பரில் சீனா இருமுறை எச்சரித்தது. ஆனால் இந்திய அரசோ எளிதான இராணுவ வெற்றிக் கனவிலேயே மிதந்து கொண்டிருந்தது.

சாலை வசதிகள் இல்லாத, அடர்ந்த காடுகளும் மலைமுகடுகளும் நிறைந்த வடகிழக்கு எல்லையில் சாவடிகளை நிறுவுவதும் துருப்புக்களுக்குத் தேவைகளை அனுப்புவதும் இயலாது என்று கள இராணுவத் தலைமை எதிர்ப்புத் தெரிவித்தது. கௌல் நேரிலேயே அங்கே போய் தளபதிகளைக் கடிந்து கொண்டார். முன்னேறி இராணுவச் சாவடிகளை நிறுவுவது குறித்து எதிர்ப்புத் தெரிவித்தவர்களை வீழ்த்துவதற்காக அந்தப் பிராந்திய வரைபடங்களை வைத்துக் கொண்டு சாவடிகளை நிறுவ வேண்டிய குறிப்பான இடங்களைத் தீர்மானித்தனர், கௌலும், உளவுத் துறை இயக்குநர் மாலிக்கும். 1962 ஆகஸ்டுக்குள் அசாம் துப்பாக்கிப் படைகள் மற்றும் இராணுவத்தினரைக் கொண்டு 20 சாவடிகள் மக்மகோன் கோடு நெடுகிலும் நிறுவப்பட்டன. அற்றிலே ஒன்றுதான் யுத்தம் வெடிப்பதற்கான மையமாக அமைந்தது.

மக்மகோன் கோட்டின் மேற்கு முனை பூடானைத் தொடுவதோடு முடிகிறது. அந்தப் பகுதியில் எல்லையை வரையறுப்பதற்கான நீர்த்தாரை எதுவுமில்லை. எனவே மலை முகட்டு வரையை எல்லையாகக் கொண்டு மக்மகோன் வரைந்துள்ளார். எல்லை வரை படத்தில் உள்ளதை நேரிலே குறியீடு செய்வதற்கு அப்படி மலைமுகட்டு வரை எதுவுமே அங்கே இல்லை. எனவே மக்மகோன் கோட்டிற்கு வடக்கே தாக்லா மலைமுகட்டு வரையை எல்லை என்று ஒருதலைப்பட்சமாக இந்தியா முடிவு செய்து கொண்டது; அது மக்மகோன் கோட்டுக்கு நான்கு மைல் அப்பால் உள்ளது. அங்கே சின்ஜேமேன் என்னுமிடத்தில் இந்தியா ஒரு இராணுவச் சாவடி அமைத்ததன் மூலம், இந்தியா உரிமை பாராட்டும் மக்மகோன் கோட்டையும் தாண்டி 25 சதுர மைல் பரப்புப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்தச் சாவடியை நிறுவிய 10, 15 அசாம் துப்பாக்கிப் படையினரை உடனடியாகவே சீனப்படையினர் நெட்டித்தள்ளிவிட்டனர். அதாவது ''தாக்காமல் ஆட்களைத் தள்ளிக் கொண்டு வந்து விட்டுவிட்டு விலகிப் போய்விட்டனர்'' என்று நேருவே நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். பிறகு பெரும் எண்ணிக்கையில் இந்திய படை அங்கே போனது. சீனர்கள் மறுபடியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அவர்கள் மோதலைத் தவிர்க்க விரும்பியதே காரணம். எனினும் தூதரகத்தின் மூலம் ஆட்சேபக் குறிப்பு அனுப்பினார். ஆனாலும் ''அதையும் தாண்டித் தமது எல்லை இருப்பதாக இந்தியா உரிமை கொண்டாடியது. வெறும் புளுகுதான். இந்தியாவிடமிருந்த வரைபடங்களில் கூட அப்படிஇல்லை'' (நிவில் மாக்ஸ் வெல், இந்தியாவின் சீனப் போர். பக். 293). இவ்வளவும் நடந்தது 1959 இல். அதன்பிறகு 3 வருடங்களுக்குக் குறிப்பிடத் தகுந்த சம்பவம் எதுவும் இல்லை.

1962 ஜூன் 4ந்தேதி தாக்லா மலைமுகட்டு வரைக்கும் கீழே ஓடிய நம்காசு என்ற சிற்றாற்றின் கரையில் அசாம் துப்பாக்கிப் படையினர் இன்னும் ஒரு சாவடி நிறுவினர். மக்மகோன் கோட்டையும் ஏறக்குறைய நான்கு மைல் தாண்டி சேதோங் என்ற இடத்தில் அது இருந்தது. ஆனால் மக்மகோன் கோட்டிற்கு தெற்கே நான்கு மைல் தொலைவில் உள்ள தோலா என்ற கணவாயின் பெயரை அந்த இடத்துக்கு வைத்தனர். பிறகு தாக்லா மலைமுகட்டுவரை வரை இந்



படிப்பகம்

www.padippakam.com

தியப் படை போய்ப் பார்த்தது. 1959 ஒப்பந்தப்படி எல்லைப் பகுதியில் ரோந்துப்பணி நிறுத்தப்படவேண்டும் என்பதால் சீன ரோந்துப் படைகூட அங்கு வரவில்லை. அந்தப் பிராந்தியத்தின் உடனடி பொறுப்பு இராணுவ அதிகாரி பிரிகேடியர் தால்விக்கு வந்ததும், சீனர்களிடம் எதிர்விளைவு எற்படுமாதலால் அந்தச் சாவடி நிறுவப்பட்டதை அவர் எதிர்த்தார். ஆனால் அவருடைய மேலதிகாரி தளபதி பிரசாத் அது ஒரு தேசியக் கொள்கை என்று கூறி தால்வியை அடக்கினார். தாக்லா மலைமுகட்டுவரைதான் எல்லை என்பது முடிவு. எனவே தாக்லா கணவாய் வரை முன்னேறி சாவடி அமைத்திருக்க வேண்டும் என்றார் தளபதி பிரசாத்.

இந்திய ராணுவ வரைபடத்திலேயே சீனப் பிராந்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ராணுவச் சாவடி அமைத்துவிட்டு, சீனா வாலாட்டினால் தகுந்த பதிலடி கொடுத்து தனது பலத்தை நிரூபித்துக் காட்டலாம் என்று பீற்றிக்கொண்டது ராணுவத் தலைமை. தோலா சாவடி நிறுவப்பட்ட மூன்று மாதங்களுக்கு சீனா துருப்புக்களை அனுப்பவில்லை. 1962 செப்டம்பர் 8ந் தேதி தாக்லா மலைமுகட்டுவரைக்கு கீழே இறங்கி வந்து தோலா சாவடிக்கு எதிரே நாம்கா சு ஆற்றின் மறுகரையில் வந்து முகாமிட்டது, சீன ராணுவப்பிரிவு. 60 பேரே இருந்த அந்தப் பிரிவு குறித்து 600 பேர் கொண்ட பெரிய படை வந்திறங்கியிருப்பதாக மேலதிகாரிக்குச் செய்தி அனுப்பினார் இந்தியச் சாவடி ஆணையாளர். உண்மையான எண்ணிக்கையை மட்டும் குறிப்பிட்டால், ஏற்கனவே உள்ள துருப்புக்களைக் கொண்டுச் சமாளிக்கும்படி கூறிவிட்டு புதிய படைப்பிரிவுகளை அனுப்ப மாட்டார்கள் என்று அவர் பயந்தார். ஆனால் தோலா சாவடியை சீனர்கள் சூழ்ந்துகொள்ளவோ, தாக்குவதற்கோ முயற்சி எதுவும் செய்யவில்லை.

1962 செப்டம்பர் 16ந் தேதி இந்திய அரசுக்கு ஒரு ஆட்சேபனைக் குறிப்பு அனுப்பியது, சீனா. அதிலே, ''மக்மகோன் கோடு என்று கூறிக் கொள்ளும் எல்லையைத் தாண்டி கின்ஜேமேன் பகுதிக்குள் 1959லேயே ஊடுருவித் தங்கிவிட்ட இந்தியப்படை, இப்போது புதிதாக செதோங்கில் ஒரு சாவடி அமைத்துள்ளது. இது இந்தியாவின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நோக்கமுடையது'' என்று சீனா குற்றஞ்சாட்டியது. தோலா சாவடி மற்றும் தாக்லா மலைமுகட்டு வரை இரண்டுமே மக்மகோன் கோட்டுக்கு வடக்கே இருந்தபோதும் அது தனது பகுதி தான் என்று இந்தியா உரிமை கொண்டாடியது. ''ஒருதலைப்பட்சமாக எல்லையைக் குறியிடக் கூடாது, குறைந்தபட்சம் உள்ளூர் அரசு நிர்வாக அதிகாரிகள் சந்தித்து தற்காலிகத் தீர்வாவது காண்போம்'' என்று சீனா இந்தியத் துருப்புகள் மூலம் செய்தி அனுப்பியது. ''பேச்சுவார்த்தைக்கு இடமே கிடையாது; தாக்லா மலைமுகட்டுவரையைத் தாண்டி சீனப் படைப்பிரிவு போய்விட வேண்டும்'' என்று அடாவடித்தனமாகக் கூறிவிட்டது நேரு அரசு.

இதன்மூலம், தாக்லா மலைமுகட்டுவரைக்குக் கீழே சீனப் படைப்பிரிவு வந்திருப்பதே ஆக்கிரமிப்பு; அங்கிருந்து அதை விரட்டுவது இந்தியாவின் கௌரவப் பிரச்சினை என்கிற ஒரு தற்கொலை விவகாரத்தை இந்தியாவே உருவாக்கிக் கொண்டது. இந்தியப் பகுதியை சீனா ஆக்கிரமித்துவிட்டதாக பத்திரிக்கையில் பொய்ச் செய்திகள் வெளியாயின. உடனடியாகப் போர் தொடுத்து சீனப் படையை விரட்டியடிக்கும்படி அரசியல்வாதிகளும் பத்திரிக்கைகளும் கூச்சல்போடத் துவங்கின. ''சீன ஊடுருவலைச் சகித்துக் கொள்ள மாட்டோம், லடாக் பிராந்தியத்தை விடக் கூடுதலான சாதகமான நிலையில் இந்திய இராணுவம் உள்ளது'' என்று இந்திய அரசும் புளுகியது. உண்மை அதற்கு நேரெதிராக இருந்தது.

லடாக் -அக்சாய்சின் பிராந்தியத்தை விட பூகோள ரீதியில் வடகிழக்கு எல்லை பாதகமான பல அம்சங்களைக் கொண்டுள்ளது. படைகளை நகாத்துவதற்குப் பல அடர்ந்த காடுகள், செங்குத்தான சரிவுகளையுடைய உயர்ந்த மலைமுகடுகள், எளிதில் கடக்க முடியாத காட்டாறுகள், இந்திய இராணுவம் பழக்கப்படாத பனிப்பாறைகள் நிரம்பியுள்ளன. சாலை வசதிகள் கொஞ்சம் கூடக் கிடையாது; எனவே இராணுவத் தேவைகள் சேமிப்புப் படைகள் போர் முனைக்குக் கொண்டு செல்லவும் முடியாது. இவற்றுக்கு மாறாக சீனத்தரப்பு எல்லா வகைகளிலும் சாதகமான வசதிகள், நிலைமைகளைக் கொண்டிருந்தது. இந்த உண்மை விவரங்கள் அனைத்தையும் அப்படியே மறைத்துவிட்டு சீன இராணுவத்தை துச்சமென மதிக்கும்படி இந்தியாவில் பிரச்சாரம் நடத்தப்பட்டது.

அரசியல் தலைமையில் இருந்த நேரு, கிருஷ்ணமேனன் முதல், இராணுவத் தலைமையில் இருந்த தபார், கௌல் வரை அனைவருமே மிக எளிதான முறையில் தாக்லா மலைமுகட்டுவரைக்கு அப்பால் சீனப் படையை தூக்கி வீசிவிட முடியும் என்று நம்பினர். உண்மையில் சீனப்படை அங்கு வருவதற்கு முன்பே அதைத் துரத்தி அடிக்கும் முடிவை இந்திய அரசு எடுத்துவிட்டது செப்டம்பர் 8ந்தேதி லண்டனில் கூடிய காமன்வெல்த் பிரதமர்கள் கூட்டத்துக்கு நேரு போய்விட்டார். நேருவின் வாரிசுப் பிரச்சினை உருவாகிவிடும் என்பதால் அவர் இல்லாதபோது மந்திரிசபைத் தலைமைப் பொறுப்பு, தீர்மானிக்கப் படாமலேயே இருந்தது. அமைச்சர்கள் தான் தோன்றித்தனமாக முடிவெடுத்து செயல்பட்டனர். மந்திரிசபை இராணுவக் கமிட்டியும் காட்டப்படவில்லை. தலைமைத் தளபது தபார், கிழக்கு மண்டலத் தலைமைத் தளபதி சென், அமைச்சரவைச் செயலாளர் எஸ்.எஸ்.கேரா, இராணுவ அமைச்சகத் துணை செயலாளர் எஸ்.சி.சாரின் மற்றும் உளவுத் துறை இயக்குநர் மாலிக் ஆகியோரை செப்டம்பர் 9ந்தேதி கூட்டினார் கிருஷ்ணமேனன்.




**இந்திய அரசு ஒருதலைப் பட்சமாக உரிமை கொண்டாடிய எல்லையையும் மீறி சீன பிராந்தியத்துக்குள் இராணுவச்சாவடிகளை நிறுவியது. மந்திரி, தளபதிகள், அதிகாரிகள் கூடி சீனாவுடன் போர் தொடுப்பது என அதிகாரபூர்வமாக முடிவெடுத்தனர். படையை நிறுத்தி ஆத்திரமூட்டி வலிந்து போரைத் துவங்கக் காரணமாக இருந்தனர். இருந்தாலும் சீனா ஊடுருவியதாக தேசிய வெறியைத் தூண்டும் மேற்கண்டது மாதிரியான அவதூறுப் பிரச்சாரம் நடத்தினார்கள். (தினத்தந்தி கருத்துப் படம்)**

நேருவின் பரம்பரை முறைப்படி மந்திரிசபை எப்போதும் கூடி ஆலோசிப்பதே கிடையாது. தலைமையின் எதேச்சதிகார முடிவு தான். அதையே பின்பற்றி, நேருவுடன் தமக்குள்ள தனிப்பட்ட செல்வாக்கு - உரிமையைக் கொண்டு கிருஷ்ணமேனன் முடிவு செய்தார். இந்திய வரைபடங்களைக் காட்டி தோலா சாவடியும், தாக்லா

படிப்பகம்

மலைமுகட்டுவரையும் மக்மகோன் கோட்டிற்கு வடக்கே சீனப் பிராந்தியத்தில் இருப்பதை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். ''வரைப்படங்களைத் தூரத்தள்ளுங்கள். தாக்லா மலைமுகட்டுவரை தான் நமது எல்லை. அதற்குக் கீழேயுள்ள சீனப் படைப் பிரிவை அப்புறப் படுத்துங்கள்'' என்று முடிவானது. சீனப் படையை அகற்றும் அந்த உத்தரவைத் தளபதி தபார் எவ்வித முணுமுணுப்புமின்றி ஏற்றார். 33வது காலாட்படை பஞ்சாப் 9வது பிரிவை உடனே அங்கே போகும்படி உத்திரவிட்டார். ''48 மணி நேரத்தில் ஒரு பிரிகேடு முழுவதும் போகும். தாக்லா மலைமுகட்டுவரைப் பகுதியில் உள்ள சீனப் படைப் பிரிவை சூழ்ந்து கொண்டு அடித்து விரட்டிவிட வேண்டும்'' என்கிற உத்திரவு பறந்தது. ''வெள்ளைக்கால் நடவடிக்கை'' என்று அதற்குப் பெய்ரிட்டனர்.

வேவு - முன்னோட்ட நடவடிக்கை, போதிய இராணுவத் தேவை இருக்கிறதா என்கிற கணிப்பு ஆகிய எந்த முன்னேற்பாடும் இல்லாமல் முட்டாள்தனமான உத்திரவுகள் பறந்தன. இராணுவ ரீதியிலான சிந்தனை சிறிதுமின்றி அரசியல் ஆசையிலே மிதந்தார்கள். கிழக்கு மண்டல ஆணையகத் தளபதி சென் உத்திரவை அப்படியே ஏற்று கீழே அனுப்பினார். இராணுவ வரிசையிலே கடுமையான முரண்பாடுகள் எழுந்தன. மேல்மட்டத் தலைமைக்கு நேரெதிராக கள இராணுவத் தலைமை போர்த்தந்திரக் காரணிகள், துருப்புகளின் பலாபலம் ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சீனாவுடனான போர்த் தயாரிப்புகளை எதிர்த்தனர்.

குறிப்பாக 33வது காலாட்படையின் தளபதி உம்ராவ்சிங் இராணுவ ரீதியிலான பாதகமான நிலைமைகளை எடுத்துக்காட்டி தோலா சாவடியைக் காலிசெய்து பின் வாங்கி விடுவதே சரியானது என்று வாதிட்டார். கிழக்கு மண்டல ஆணையகத் தளபதி லக்னோவிலிருந்து அசாமிலுள்ள தேஜ்பூருக்கு நேரிலேயே போனார். ''சீனர்களை விரட்டியே ஆகவேண்டும்; வரைபடங்களை மறந்துவிடுங்கள், தாக்லா மலைமுகட்டுவரை வரை கைப்பற்றுங்கள்'' என்று தளபதி உம்ராவ்சிங், பிரிவுத் தளபதி பிரசாத், பிரிகேடியர் தால்வி ஆகியோருக்கு உத்தரவிட்டார். அவர் தமது எதிர்ப்பைப் பதிவு செய்துவிட்டு உத்திரவை அமுலாக்கத் துவங்கினார். செப்டம்பர் 14ந் தேதி தோலா சாவடியை நோக்கி பஞ்சாப் படை 9 வது பிரிவு பயணமானது. களப் பணிகளை முடித்துக்கொண்டு ஓய்வுக்குப் புறப்பட இருந்த சீக்கிய மற்றும் கூர்க்காப் படைப்பிரிவுகளையும் தாக்லா பிராந்தியத்துக்குப் போகும்படி பணித்தனர்.

''முதலில் புறப்பட்டுப் போன 33வது காலாட் படை பஞ்சாப் 9 பிரிவு செப்டம்பர் 19ந் தேதிக்குள் தாக்லா மலைமுகட்டுவரையைக் கைப்பற்றி 16,000 அடி உயரத்தில் உள்ள இரு கணவாய்களிலும் நிலை கொள்ள வேண்டும்'' என்று இராணுவத் தலைமையகம் நேரடியாகவே உத்திரவிட்டது. ஆனால் அந்த உத்திரவே செப்டம்பர் 19ந் தேதிதான் அவர்களுக்குக் கிட்டியது.




**இந்தியா தான் உரிமை கொண்டாடும் எல்லையை தாண்டி சாவடி அமைத்து, போருக்குக் காரணமாக இருந்தது.**

தோலா சாவடிக்குச் செல்லும்வழியோ செங்குத்தான சரிவுகளைக் கொண்ட மலைப் பாதை. மிகக் குறைவான உணவு -உடை - ஆயுதத் தேவைகளை மட்டுமே எடுத்துச் செல்லமுடியும். உறைபனி நிலைமைக்கான போர்வைகள் உடைகள் கிடையாது. இரண்டு நாட்கள் நடந்து தோலா சாவடி போய்ச் சேர்ந்தது பஞ்சாப் 9 பிரிவுப்படை. நாம்காக ஆறு 20 முதல் 50 அடிகள் வரை செங்குத்தான பாறைச் சரிவுகளின் கீழே வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. தோலா சாவடிக்கு துருப்புகள் போகும்பாதை எதிர்த் தரப்பிலிருந்து எளிதாகச் சுட்டுவீழ்த்தும் வகையில் இருந்தது. தாக்லா மலைமுகட்டு வரைக்கு அப்பால் போகும் அளவு படை -ஆயுதப்பலங்களுடன் சீன இராணுவ முகாம்கள் இருந்தன. அந்தப் பக்கத்திலிருந்து படை - ஆயுதங்கள் மற்றும் தேவைகளை குவிப்பதும் எளிதாகவே இருந்தது.

பஞ்சாப் படை தோலா சாவடிக்குப் புறப்படும் முன்னே அங்கே போகும்படி பிரிகேடியர் தால்விக்கு உத்திரவிடப்பட்டது. அவர் உடனே புறப்பட மறுத்துவிட்டார். அவரை விரட்டும்படி தளபதி பிரசாத்துக்கு கிழக்கு மண்டல ஆணையகத்தளபதி கட்டளையிட்டார். பிறகு பிரசாத்துக்கும் அதே கதி நேர்ந்தது. ''இராணுவ விதிகளின்படி பிரிகேடியர் மற்றும் தளபதி அளவு அதிகாரமுள்ள அதிகாரிகள் நேரடியாகப் போர் முனைக்குப் போகவேண்டியதில்லை. கிரமமான தலைமையகங்களில் உத்திரவிட்டு வழிகாட்டுவது தான் அவர்கள் பணி'' என்று தால்வி வாதிட்டார். இரண்டாவது உலகப் போரில் பர்மாவில் போரிட்டு அனுபவமிக்க பிரிகேடியர் தால்வி தோலா சாவடிக்கு விரட்டப்பட்டார். அவசர கோலத்தில் அரைகுறையாக இந்தியா போருக்குத் தயாரித்துக் கொண்டிருக்கும் இதே சமயம் போதிய படை பலத்தை சீனா குவித்து வருகிறது என்கிற உளவுத் துறைச் செய்தி டெல்லி இராணுவத் தலைமையகத்துக்கு எட்டியது. இருந்தாலும் பல நாட்கள் பின்னாலேயே போர் முனைக்கு அது போய்ச் சேர்ந்தது. ஒருபுறம் உளவுச் செய்தி இப்படி இருப்பினும், மறுபடியும் ''சீனா தாக்கத் துணியாது. வெள்ளைக் கால் நடவடிக்கையை முன்தள்ளிச் செல்லலாம்'' என்று உளவுத்துறை சிபாரிசு செய்தது. நேருவுக்கு உள்நாட்டு அரசியல் உளவு வேலை செய்து செல்வாக்குப் பெற்ற பி.என்.மாலிக்கின் இந்த சிபாரிசை அப்படியே நேரு நம்பினார். மக்மகோன் கோட்டை தாண்டி சீனப் படை ஊடுருவி விட்டது என்கிற வதந்தியை எப்படி நம்பினார்களோ அதேபோல சீனாவை எளிதில் தோற்கடித்துவிடலாம் என்று குருட்டுத்தனமாக நம்பினார்கள்.

இராணுவத் தலைமை கிரமமாக மேலே போகப்போக கள நிலைமைகள் பற்றி எதுவுமறியாத முட்டாள்களாக இருந்தனர். வரைப்படத்தைப் பார்த்துக்கொண்டு சில மணி நேரங்களில் ஒரு பிரிகேடு அளவு துருப்புகளைக் குவித்துவிட முடியும் என்றனர். ஆனால் அடர்ந்த காடுகள், மலைகளின் ஊடாக சில மைல் தூரம் போவதற்குக் கூட 2, 3 நாட்கள் ஆகிவிடும். வாகன - சாலை வசதி கொஞ்சம் கூட கிடையாது. ஒரு பிரிகேடு அங்கே போய்விடும் என்று குறித்த தேதியில் ஏற்கனவே இருந்த ஒரு பகுதிப் படைப் பிரிவு மட்டுமே அங்கிருந்தது. கீழ் அதிகாரிகளின் ஆட்சேபனைகளை ஆதரித்த 33வது காலாட்படை தளபதி உம்ராவ் சிங் தலைமையின் சாத்தியமற்ற உத்திரவுகளை அமுலாக்க மறுத்தார்.

''தாக்லா மலைமுகட்டிலிருந்து சீனர்களை அப்புறப்படுத்த முடியாது'' என்கிற கீழதிகாரிகளின் கணிப்பை ஏற்காவிட்டாலும் அதன் பிறகு சீனா திருப்பித்தாக்கி பிரச்சினைக் குள்ளான பகுதி முழுவதும் கைப்பற்றிவிடும் என்று தலைமைத் தளபதி தபார் வாதிட்டார். ஆனால் இராணுவம் மற்றும் வெளி விவகார அமைச்சக சிவில் அதிகாரிகளும் உளவுத் துறையும் அதை நிராகரித்துவிட்டனர். ''சீனாவுக்கு ஒரு அடி கொடுத்தால் போதும் ஓடிவிடும் திருப்பித் தாக்கத் துணியாது'' என்று முடிவாகக் கூறினர். செப்டம்பர் 22ந்தேதி நடந்த கூட்டத்தில் ''தாக்லா மலைமுகட்டுவரைக்கு அப்பால் சீனாவை விரட்டியப்பது'' என்று முடிவானது. அதை எழுத்துபூர்வமாகக் கொடுக்கும்படி தலைமைத் தளபதி தபார் கோரினார். அதுவே ஒருவகை எதிர்ப்புதான். உடனே பீதியடைந்த இராணுவ மந்திரி கிருஷ்ணமேனன் ஐ.நா.சபைக் கூட்டத்தைக் காரணங்காட்டி நழுவி ஓடிவிட்டார். தளபதிக்கும் தைரியம் வந்தது. இம்மாதிரியான முக்கியமான முடிவோடு தேசிய நிலைமை, போரின் அவசியம் ஆகியன அடங்கிய அதிகாரிபூர்வ அறிக்கையைக் கோருவது இயல்பானது


படிப்பகம்

www.padippakam.com



## பொய்வழக்கு புஸ்வாணமாகியது!

கடந்த 3.6.88 அன்று கடலூர், மஞ்சகுப்பம் - அண்ணா மார்க்கெட் அருகே புதிய ஜனநாயகம் இதழை மக்களிடம் அறிமுகப்படுத்தி பிரச்சாரம் செய்தபோது டி.எஸ்.பி. சுந்தர்ராஜன் தலைமையிலான போலீசு கும்பல், தோழர்கள் சக்கரை, இந்திரஜித், தீனதயாளன் மூவரையும் கைது செய்து போலீசு நிலையத்தில் மிருகத்தனமாக சித்திரவதை செய்ததோடு பொய் வழக்கு ஒன்றையும் போட்டது. இதுபற்றி புதிய ஜனநாயகம் இதழில் (மூன்றாமாண்டு இதழ் எண் 18) ஏற்கனவே செய்தி வெளியாகியுள்ளது.

தோழர்கள் சக்கரை, இந்திரஜித், தீனதயாளன் மூவரும் ஒருவரையொருவர் கைகால்களால் தாக்கிக் கொண்டதாகவும் ஆபாசமாக ஒருவரையொருவர் திட்டிக் கொண்டதாகவும் பொய் வழக்கு சோடிக்கப்பட்டிருந்தது. தோழர்கள் வழக்கினைச் சந்திக்க 'நீதி'மன்றம் சென்ற போது அமிர்ஜான் என்ற போலீஸ் கான்ஸ்டபிள் மட்டும் வந்து சாட்சி சொன்னான். சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசாரால் உருவாக்கப்பட்ட இரண்டு சாட்சிகள் இறுதிவரை கோர்ட் பக்கம் தலைகாட்டவே இல்லை. ''சாட்சிகள் தேவையில்லை; சப் இன்ஸ்பெக்டர் மட்டும் வந்து வாக்குமூலம் கொடுத்தால் போதும்'' என்று மாஜிஸ்ட்ரேட் கோரிய போதிலும் கடைசிவரை சப் இன்ஸ்பெக்டரும் வரவேயில்லை.

இந்தப் பொய் வழக்கை வைத்து கடந்த 10 மாதங்களாகத் தோழர்களை இழுத்தடித்துவிட்டு, வேறு வழியின்றி 13.3.89 அன்று, ''நீங்கள் மூவரும் குற்றவாளிகள் இல்லை; எனவே உங்களை விடுதலை செய்கிறேன்'' என்று திருவாய் மலர்ந்தார் அந்த மாஜிஸ்ட்ரேட்.

அரியலூர் ரயில் விபத்தின் போது அப்போது கடலூர் கிளை செயலராக இருந்த தோழர் மோகனை விசாரணை என்ற பெயரில் ஒரு வாரத்திற்கு மேல் 'லாக் - அப்'பில் வைத்து கொடூரமாக சித்திரவதை செய்த அதே டி.எஸ்.பி. சுந்தர்ராஜன், இரண்டாவது முறையாக தோழர்கள் மீது அடக்குமுறையை ஏவி, பொய்வழக்குச் சோடித்தான். ஆனால் இந்த பொய் வழக்கு பிசுபிசுத்துப் போகும் என்று தெரிந்தே சப்-இன்ஸ்பெக்டரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டுள்ளான்.

அடக்குமுறை - பொய் வழக்குகள் மூலம் புரட்சிகர இயக்கங்களை அடக்கி ஒடுக்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்கின்றது போலீசு கும்பல். ஆனால் அதன் கீழ்த்தரமான நடவடிக்கைகளே அதன் முகத்தில் கரிபூசி மேலும் அம்பலப்படுத்தி வருகின்றன.

— மக்கள் கலை இலக்கியக் கழகம்,
கடலூர் கிளை

தான். ஆனால் இந்திய - சீன நெருக்கடி முற்றியதிலிருந்து எதுவுமே எழுத்துபூர்வமாக செய்யவில்லை. போர்தொடுப்பது என்று முடிவான உயர்மட்டக் கமிட்டிக் கூட்டத்தின் குறிப்புகூட எழுத வேண்டாம் என்று கிருஷ்ணமேனன் தடுத்துவிட்டார். பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கும் நோக்கத்தோடு உத்திரவுகள், முடிவுகள் அனைத்தும் வாய்வழியே எடுத்தனர்.

ஏற்கனவே நடவடிக்கையில் இறங்கி பத்து நாட்களுக்குப் பிறகு தளபதி அதிகாரபூர்வ எழுத்துவடிவிலான கட்டளை கேட்டார். பிரதமரோ, இராணுவ மந்திரியோ வெளிநாட்டுக்கு ''ஓடி'' போய்விட்டார்கள். ஆயுத உற்பத்திக்கு மட்டுமே பொறுப்பான துணை இராணுவ மந்திரி ரகுராமையாவும் கையொப்பமிட மறுத்துவிட்டார். மந்திரிசபையின் இராணுவக் கமிட்டியும் கூடவில்லை. அமைச்சக இணைச் செயலாளர் எஸ்.சி.சரின் கையொப்பமிட்ட பொதுவான ஒரு உத்தரவு தரப்பட்டது. பொறுப்பிலிருந்து நழுவிக் கொள்வதற்காக தளபதி அந்த உத்தரவைக் கோரிப் பெற்றாலும், அவரது சொந்த முடிவுப்படி நடந்துகொள்வது தான் அவருடைய கடமை. ஆனால் அவர் உத்திரவை அப்படியே கீழே அனுப்பினார். மேற்கு ஆணையகத்தையும் போருக்குத் தயாராக இருக்கும்படி எச்சரித்தார்.

நாடு முழுவதும் மக்கள் கவனம் தாக்லா மலைமுகட்டுவரை மீது குவிக்கப்பட்டு பதட்டநிலை உருவானது. கீழ்மட்டத் தளபதிகளின் ஆட்சேபனைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு தாக்குவதற்கான திட்டத்தைத் தயாரிக்கும்படி சென் உம்ராவ் சிங், பிரசாத் மற்றும் தால்விக்கு அடுத்தடுத்து கீழே போனது. அதன்படி பிரசாத்தும் தால்வியும் ஒரு தாக்குதல் திட்டம் தயாரித்தனர். அதைவிட முக்கியமான பிரச்சினை துருப்புகள், தேவையான ஆயுத சேமிப்புகள் தான் என்று கருதிய அவர்கள் அக்டோபர் 10ந்தேதிக்குள் அனுப்பவேண்டியவை குறித்த திட்டம் வகுத்தனர். தவறினால் பனிமழை துவங்கிவிடும், ஆறு மாதத்துக்குள் எந்த நடவடிக்கையும் சாத்தியமாகாது என்று எச்சரித்தனர்.

தளபதி உம்ராவ் சிங், அவர்களைச் சந்தித்து சில மாறுதல்களுடன் திட்டத்தை எடுத்துக் கொண்டு கிழக்கு மண்டல ஆணையகத்துக்குப் பறந்தார். தாக்குதல் தொடுப்பதையே ஆட்சேபிப்பதாகவும் மீறிச் செய்தால் தேவையான தயாரிப்பும் குறித்த திட்டத்தையும் முன்வைத்தார். அவர் கோரிய அளவு துருப்புக்கள் ஆயுதங்கள் மற்றும் பிற தேவைகள் அனுப்ப முடியாது என்று தளபதிகள் சென்னும் தபாரும் நிராகரித்தனர். உம்ராவ் சிங் தனது ஆட்சேபனையைப் பதிவு செய்தார். இதனால் ஆத்திரமடைந்த தலைமைத் தளபதிகள் உம்ராவ்சிங்கை 33வது காலாட்படையின் தளபதி பொறுப்பிலிருந்து நீக்கும்படி கிருஷ்ணமேனனுக்கு சிபாரிசு செய்தனர். ஏற்கனவே கிருஷ்ணமேனனை விமர்சனம் செய்து கெட்ட பெயரெடுத்தவர் மானக்ஷா. எனவே மானக்ஷாவை நியமிக்க அவர் மறுத்துவிட்டார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேனன், தபார் சென் ஆகியோர் ஒரு திட்டம் வகுத்தனர். 33வது காலாட்படையை இரண்டாகப் பிரித்து நாகா மற்றும் கிழக்கு பாகிஸ்தான் பிரச்சினைகளைக் கவனிக்கும் பொறுப்பை உம்ராவ் சிங் இடம் ஒப்படைப்பது, மற்றொரு பிரிவு வடகிழக்கு எல்லைக்கானதாக உருவாக்கிவிடுவது என்பதுதான் அந்த முடிவு. காஷ்மீரில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தவரும், எவ்விதப் போர் அனுபவமும் இல்லாதவரும், நேருவின் நெருங்கிய உறவுக்காரரும் செல்லப் பிள்ளையுமான கௌல் தெரிவு செய்யப்பட்டார். நேரு, மொரார்ஜி, மேனன் ஆகிய எல்லோரும் வெளிநாட்டில் இருக்கும்போது விடுமுறையில் உள்ள தான் மட்டும் ஏன் பொறுப்பேற்க வேண்டும் என்று கௌல் முதலில் மறுத்தார். நேரு நாடு திரும்பிய பிறகு அவரைக் காண வந்த கௌலை வளைத்துப் போட்டனர்.

கௌலைப் பொறுத்தவரை இராணுவத்தின் பொது ஊழியர் தளபதி பொறுப்பிலிருந்து ஒரு காலாட்படைத் தளபதியாக மாறுவது பதவி இறக்கம்தான். இருந்தபோதும் சீனப் படையை விரட்டி, குறுக்குவழியில் திடீர் புகழ்பெற - பதவி உயர்வு பெற ஒரு வாய்ப்பாகக் கருதி ஏற்றுக்கொண்டார்.

அக்டோபர் 3ந்தேதி, போருக்குப் புறப்படும் ஒரு பெரிய வீரதீர சூரப்புலி, கதாநாயகனுக்குரிய ஆரவாரத்தோடு புறப்பட்டார் கௌல். ''நாளை பத்திரிக்கைகளின் தலைப்புச் செய்தி எனது நியமனம்தான். இதிலே நான் தோற்றால் இந்த அரசே கவிழ்ந்துவிடும்'' என்று விமானத்தில் பயணம் செய்த பிற தளபதிகளிடம் வீரச் சவடால் அடித்துக் கொண்டே போனார் கௌல். **''சீனர்களை விரட்டுவதற்குத் தனிச் சிறப்பான பணிப்படை உருவாக்கப்பட்டது. ஆணைப் பொறுப்பேற்பதற்காக தளபதி கௌல் வடகிழக்குப் பிராந்தியத்துக்குப் புறப்பட்டார். கடுமையான தாக்குதல் தொடுக்க இந்திய இராணுவம் தயாராகிவிட்டது''** என்று பத்திரிக்கைத் தலைப்புச் செய்திகள் வந்தன.

— தொடரும்

படிப்பகம்

www.padippakam.com

# கொத்தடிமைத்தனம் குழந்தை உழைப்பாளிகள்

உலகம் முழுவதும் இந்த ஆண்டு சர்வதேச பெண்கள் ஆண்டாக கொண்டாடப்படுகிறது. வழக்கம் போலவே, கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், ஆய்வறிக்கைகள், பட்டிமன்றங்கள் நடத்தி பெண்ணினத்தின் பெருமை பற்றி பேசுகிறார்கள், உலகம் முழுவதுமுள்ள பிற்போக்காளர்கள். இந்த வம்பளத்தல்கள், வெற்று கூச்சல்கள் எந்த விதத்திலும் பெண்ணினத்தின் மீது மாட்டட்பட்டிருக்கும் இரட்டை நுகத்தடியை வெட்டியெறிய உதவப் போவதில்லை! ஒரு சமுதாயப் புரட்சியில் பெண்கள் தங்களை ஊக்கமுடன் ஈடுபடுத்திக் கொள்ளும்போது மட்டுமே, அவர்கள் மீது பூட்டப்பட்டிருக்கும் விலங்கொடியும். இதோ, உலகம் முழுவதும் பெண்ணினத்தின் பெருமைப் பற்றி வெற்றுக் கூச்சல் போடும் பிற்போக்காளர்களை, தங்கள் நாடுகளில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பரிசாக கொடுத்திருக்கும் அவமானங்களையும் அடிமை வாழ்க்கையும் பாருங்கள்!

போதைப் பொருட்கள் கடத்துவதில் உலகின் முக்கிய மையமாக விளங்கும் இந்தியா, இன்று பெண்களை விபச்சாரத்திற்கு வெளிநாடுகளுக்கு கடத்துவதிலும் உலகின் மையமாக விளங்கும் செய்தி வெளி உலகுக்கு தெரிய வந்துள்ளது. விபச்சாரத்திற்காக, சிறுமிகளை கடத்துவதும் அம்பலத்திற்கு வந்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது இழைக்கப்படும் கொடுமைகள், அதன் காரணங்கள், விளைவுகள் பற்றி ஆராய்ந்த ஆசிய நாடுகளின் பெண்கள் அமைப்புகள் கலந்து கொண்ட மாநாடு சமீபத்தில் டெல்லியில் நடந்து முடிந்தது. குறிப்பாக, வங்கதேசம், நேபாளம் போன்ற அண்டை நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் பல அதிர்ச்சி தரும் உண்மைகளை இம்மாநாட்டில் சமர்ப்பித்தனர்.

மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியாளர்கள், தங்களின் நாடுகளில் கிராமப்புறங்களின் மேம்பாட்டை முற்றாக புறக்கணிப்பதால், அதிக அளவில் விவசாயக் கூலிகள் நகர்ப்புறங்களில் குவிவதை இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். வேலை கிடைக்காத விவசாயப் பெண் உழைப்பாளிகள், விபச்சாரத்தில் தள்ளப்படுவது இதனால் ஆண்டு தோறும் அதிகரித்துக் கொண்டே போகிறது என்ற உண்மையை ஆதாரங்களுடன் நிருபித்தனர்.

சின்னஞ்சிறு நாடான நேபாளத்திலிருந்து மட்டும் ஒரு லட்சம் பெண் உழைப்பாளிகள் இவ்வாறு இந்தியாவிற்கு கடத்தப்பட்டு விபச்சாரத்தில் தள்ளப்பட்டுள்ளனர். பெரு நகரங்கள் சீரழிவின் குவிமையமாக இருப்பதால், இலகுவாக, இத்தொழிலில்




பெண்களை தள்ளுவது வேகமாக நடக்கிறது என்பதை குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். இவ்வாறு டெல்லி நகரில் மட்டும் 12,000க்கும் மேற்பட்டவர்களும், பம்பாயில் 18,000க்கும் மேற்பட்டவர்களும் கல்கத்தாவில் 15,000க்கும் மேற்பட்ட நேபாள பெண் உழைப்பாளிகளும் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படும் அவலத்தை, மறுக்க முடியாத ஆதாரங்களுடன் அரசின் முகத்தில் வீசியெறிந்துள்ளனர்.

இன்னும், இந்தியாவைப் போனறே, நிலப்பிரபுத்துவ, மத பிற்போக்கு மூடநம்பிக்கையில் உழன்று கொண்டிருக்கும் நேபாளி இந்துக்கள் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதை ஒரு சமூக ஒழுங்காகவே கடைபிடிக்கின்றனர். இந்தியாவில், தேவதாசிகள் என்பதுபோல் "தேவகிகள்", "பத்தினிகள்" என்று உழைப்பாளிகளின் பெண்களுக்கு பட்டம் சூட்டி, அவர்களை கடவுளுக்கு மணம் முடிக்கும் சடங்கு நடத்தி, கிராமங்களில் ஆதிக்கம் செலுத்தும் பண்ணைகளின் காமவேட்டைக்கு இரையாக்குகின்றனர்.

மற்றொரு அண்டை நாடான வங்க தேசத்தின் நிலைமை இன்னும் கொடுமையானது. வறிய, முஸ்லீம் இளம்பெண் உழைப்பாளிகள் ஆண்டுதோறும் பல பத்தாயிரக் கணக்கில் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதை, அண்டை நாடுகளுக்கு கடத்தப்படுவதை அரசு திட்டமிட்டே மறைக்க முயற்சிக்கிறது.

சமூக சேவை நிறுவனங்கள், மகளிர் அமைப்புகள், பெண்களுக்கு இழைக்கப்படும்கொடுமைகளின் விபரங்களை சேகரிப்பது கூட அரசால் தடுக்கப்படுகிறது. அவ்வாறு ஈடுபடுவோர் ராணுவ சர்வாதிகார எர்ஷாத் அரசால் மிரட்டப்பட்டு பலவித தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இந்நாட்டிலிருந்து பல பத்தாயிரக் கணக்கில் வறிய முஸ்லீம் பெண்கள் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டு கல்கத்தா—பம்பாய்—கராச்சி வழியே மேற்கு ஆசிய அரபு நாடுகளில் விபச்சாரததில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இந்தியாவின் பெரு நகரங்களில் "சிவப்பு விளக்கு" பகுதிகள் என்று நேரடியாகவும் "மொட்டைக் கோபுரம்" இன்னும் பல்வேறு அடைமொழிகளிலும் மறைமுகமாகவும் அழைக்கப்படும் விபச்சாரப் பகுதிகள், ஆட்சியிலிருக்கும் ஓட்டுப் பொறுக்கி கட்சித் தலைவர்களின் கோட்டைகளாகவே திகழ்கின்றன.

மூன்றாம் உலக நாடுகளில், ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு, உள்நாட்டு தரகு முதலாளிகள், ஓட்டுப் பொறுக்கிகள் சொந்த நாட்டின் வளங்கள், மக்களின் உழைப்பை மட்டுமா தாரை வார்த்துக் கொடுக்கிறார்கள்? சொந்த நாட்டு உழைப்பாளி பெண்களின் கற்பையும் அல்லவா விலைக் கூவி விற்கிறார்கள்!

*

படிப்பகம்

www.padippakam.com

இன்று உலகிலேயே அதிக குழந்தை உழைப்பாளர்கள் இருக்கும் நாடு இந்தியாதான்! சமீபத்திய சர்வதேச புள்ளி விபரம்இதை உறுதி செய்கிறது.

சிவகாசியில், 5வயதிலிருந்தே தீக்குச்சியை அடுக்கச் செல்லும் பால்மணம் மாறாக் குழந்தைகள் நாளொன்றுக்கு 8 மணி நேரம் மட்டுமல்ல 15 மணி நேரத்திற்கு மேல் கந்தகத் துகள்களின் இடையில் சிக்கி சிறுக சிறுக செத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகம் போனால், இச்சிறுவர் சிறுமியர்கள் நாளொன்றுக்கு கிடைக்கும் அதிகபட்ச கூலி வெறும் 5ரூபாய் தான். இதிலும் ஆரம்ப (!) குழந்தை உழைப்பாளிகளுக்கு வெறும் 2 ரூபாய்தான் தினக்கூலி!

குழந்தைகள் தினத்தை வருடந்தோறும் கொண்டாடும் கேடுகெட்ட இவ்வரசுதான் '85 நவம்பர் 21ல் குழந்தைகள்உழைப்பைச் சட்டப்பூர்வமாக்கியது. இன்றுசிவகாசி பகுதியில் மட்டும், 45,000க்கும் மேற்பட்ட குழந்தை உழைப்பாளிகள் இருப்பதாக வெட்கங்கெட்ட முறையில் அரசு புள்ளி விவரம் சொல்கிறது.

இதே போல், உத்திரபிரதேசம் படோஹி—மிர்சாபூர் பகுதிகளில் அழகிய தரைவிரிப்புகள் தயாரிக்க வேலைபாடுமிக்க, சிக்கல் மிகுந்த கடும் உழைப்புக்கு பச்சிளம் சிறுவர் சிறுமிகள் பயன்படுத்தப்படுகிறார்கள். அலங்கார பின்னல் வேலைப்பாடுகளுக்கு இவர்களின் தளிர் விரல்கள்தான் தகுதியானதாக இருக்கிறதாம்!

இந்த அவலம் இந்திய திருநாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் கொடிகட்டி பறக்கிறது. குறிப்பாக பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகளில் கேட்பாரற்று பெருகிக் கொண்டே போகிறது. ஆப்பிரிக்காவின் வடகிழக்கே இருக்கும் வறிய குட்டிநாடான சூடானில் குழந்தை உழைப்பாளிகள் சந்தையில் விற்கப்படுவதும், வாங்கப்படும் அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதும் சர்வசாதாரணமாக நடக்கிறது.

அந்நாட்டின் மேற்கு பகுதியான பார்—எல்—கஜல் பகுதியில் வசிக்கும் டின்கா இன கடும் உழைப்பாளி மக்களும் அவர்களுடைய குழந்தைகளும் அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டு அண்டை நகர சந்தைகளில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றனர்.

இங்கு அடிமைகள்,வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு வரும் அண்டை நாட்டின் முஸ்லீம் ஷேக்குகளான பக்கரா அரபு—அடிமை வியாபாரிகளுக்கு எதிராக நீண்ட விடாப்பிடியான யுத்தம் நடத்துகிறார்கள் வீர டின்கா இன மக்கள். போரினால், அனாதரவாக்கப்பட்ட டின்காஇனகுழந்தைகள் மீண்டும் மீண்டும் அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டு சந்தையில் விற்கப்படுகின்றனர் வீர, டின்கா இன குழந்தைகள் அடிமை வியாபாரிகளின் கண்களில் மண்ணை தூவிவிட்டு அருகில் உள்ள நகரங்களுக்கு தப்பிச் சென்று பிழைக்கின்றனர்.

சொந்த நாட்டைசூறையாடும் பாசிஸ்ட்டுகளின் கையில் சிக்கிசீரழியும் இன்னொரு மூன்றாம் உலக நாடானபிலிப்பைன்சில், இந்தியாவில் உள்ளது போன்றே பட்ட கடனுக்கு தங்கள் பரம்பரையையே அடகு வைக்கும் கொடுமை நடக்கிறது. அந்நாட்டின் வறண்ட, மலைப்பாங்கான நுயெவா எகிஜா பகுதிகளில் வசிக்கும் டாசுமேட் இனமக்களில் பத்தாயிரக்கணக்



கானோர் தங்கள் முன்னோர்கள் பட்ட கடன்களுக்கு இன்றளவும் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கீழ்திசை நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் நிலைமை இன்னும் மோசம்! அடிமைகளை வாங்கவும் விற்கவும்அதிகாரபூர்வமான சந்தைகளே அங்கு இருக்கிறது. அந்நாட்டின் தலைநகரான பாங்காக் நகரின் மையப் பகுதியிலேயே மிகப் பெரிய அதிகாரபூர்வமான அடிமை சந்தைஇயங்குகிறது. சுமார் 1500ரூபாய்க்கு அழகான ஆறுவயது சிறுவனைஅங்கு வாங்கலாம். கேட்டால் ரசீதும் கிடைக்கும்.

வருடந்தோறும் 6,000 குழந்தை உழைப்பாளிகள் இச்சந்தையில் விற்கப்படுகின்றனர். மிகஅழகான பெண் சிறுமிகள் இங்கு குறைந்த விலைக்கு வாங்கப்பட்டு பாங்காக்கின், பெருகி வரும் விபச்சார விடுதிகளில் தள்ளப்படுகின்றனர். இந்நாட்டிலிருந்து பச்சிளம் கைக்குழந்தைகள் அண்டை நாடான மலேசியாவிற்குகடத்தப்பட்டு கள்ளத்தனமாக விற்கப்படுவது நாளும் பெருத்து வருகிறது.

படிப்பகம்

திருடிச் செல்லும் பச்சிளங் கைக்குழந்தைகளுக்கு போதை மருந்துகள் செலுத்தி மயங்கிய நிலையில் கைப்பைகளுக்குள் திணித்து தரைவழியாக மலேசியா எல்லைக்களுக்குள் கடத்துகின்றனர். அங்கு, அவைகள் பணக்கார தம்பதிகளுக்கோ, அல்லது அதிக பணம் கொடுப்பவர்களுக்கோவிற்கப்படுகின்றன. பெண்களுக்கான வாசனைப் பொருட்கள் தயாரிக்கும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் கருவில் இருக்கும் குழந்தைகளை கச்சாப் பொருளாக உபயோகப்படுத்துவதை நினைவில் வைத்து கொள்ளவேண்டும். இவ்வாறு ஆண்டுக்கு 10,000க்குமேற்பட்ட கைக்குழந்தைகள் தாய்லாந்திலிருந்து கடத்தப்படுகின்றன.

மூன்றாம் உலக நாடுகளில்மட்டும்தான் இக்கொடுமையா? செல்வம் கொழிக்கும் அமெரிக்காவிலும் கொத்தடிமைகள் புதுவகையில் உருவாக்கப்படுவது இப்போதுஅம்பலத்திற்கு வந்துள்ளது. ஒரு தொழிலாளி முதலாளியிடம் கடன் வாங்கியிருக்கும்போது அதை அடைக்காமல் வேறு வேலைக்குச் செல்வது அங்கு தண்டனைக்குரிய குற்றம். இக்கொடிய சட்டத்தால், 10,000 தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அடிமை ஒழிப்புச் சங்கத்தின்அறிக்கையும் புள்ளி விபரமும் இதை உறுதிபடுத்துகிறது.

பிற்போக்கு சதிகார கும்பல்கள் சர்வதேச அளவில் தங்களுக்குள் போட்டி வைத்துக் கொண்டு சொந்த நாட்டு மக்களை பல வழிகளிலும் உயிரோடு படுகொலை செய்கின்றன.

குழந்தைகள்உழைப்பை வரைமுறையற்ற அளவில் சுரண்டி அவர்களை நடைபிணங்களாக அலைய விடுகின்றன. உழைப்பாளிகளை, குறிப்பாக பெண் உழைப்பாளிகளை அடிமைகளாக வைத்துக் கொண்டு அவர்களின் ரத்தத்தை அடியோடு உறிஞ்சி வெறும் சக்கைகளாக வீசுகின்றன.

"உலகம் முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களே! ஒன்று சேருங்கள்! நாம், இழப்பதற்கு அடிமை சங்கிலியைத் தவிர வேறில்லை. வென்று பெறுவதற்கோ ஒரு பொன்னுலகம்இருக்கிறது" சாக பிறந்தவர்களல்லநாம்; வாழ பிறந்தவர்கள். அதற்கான முழுஉரிமை நமக்கு உண்டு! நமக்கு மட்டும்தான் உண்டு.

● பாலன்

www.padippakam.com

### ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் (IRDP):

# பலமுனை, பலகோடி மோசடிகள்

சரியாக 10 ஆண்டுகளுக்கு முன்னால் பாசிச இந்திராவால் கொண்டுவரப்பட்ட திட்டம் ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் **(IRDP)**. 'கரிபி கட்டாவ்' -''வறுமையே வெளியேறு'' என்று ஓங்கார கூச்சலிட்ட இந்திரா, வறுமை ஒழிப்பு திட்டத்தை நிறைவேற்றும் நாட்டின் மிகப்பெரும் திட்டம் இது என்று வர்ணித்தார். இத்திட்டத்தின் துணை கொண்டு 1994 - 95 ஆம் ஆண்டுக்குள் வறுமைக் கோட்டிற்குள் இருக்கும் மக்களை 10 சதவிகிதமாக குறைத்துவிட போவதாக அறிவித்தார். அறிவித்த ஆண்டிலிருந்து இதுவரை இத்திட்டத்திற்கென சுமார் 15,000 கோடி ரூபாய் செலவிடப் பட்டிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாடு முழுவதும் 4 கோடி விவசாய க் குடும்பங்கள் இதுவரை பயனடைந்திருப்பதாக அன்னை இந்திரா வழியில் ராஜீவ் அறிக்கை சமர்ப்பிக்கிறார் பயனடைந்த அந்த நான்கு கோடி விவசாயிகளை எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்கிறது அரசின் இன்னொரு புள்ளி விபரம்! நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பாசிச ராஜீவ் அரசு பழியை மாநில அரசாங்கங்களின்மேல் போட்டுவிட்டு தப்பிக்கப் பார்க்கிறது.

பஞ்சை பராரிகளாக இருண்ட வாழ்வில் உழன்று கொண்டிருக்கும் அடிமட்ட விவசாயக் குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றுவதுதான் இத்திட்டத்தின் பிரதான நோக்கம் என்று சொல்லப்பட்டது. அதாவது, ஆண்டு வருமானம் 1500 ரூபாய்க்கும் கீழேயுள்ள விவசாய பழங்குடியினர் மற்றும் ரூ 1500 லிருந்து 2500 க்கும் குறைவான வருமானமுள்ள கூலி ஏழை விவசாயிகள், கிராமிய கைவினைஞர்கள், ரூ.2500 - 3500 க்கும் இடைப்பட்ட வருமானமுள்ள சிறு விவசாயிகள் ஆகியோரது குடும்பங்களின் ஆண்டு வருமானத்தை ரூ.3500க்கும் மேலாக - வறுமைக் கோட்டிற்கு மேல் -உயர்த்துவது இத்திட்டத்தின் மைய நோக்கம் என்று அறிவிக்கப்பட்டது. ஆண்டு வருமானத்தை பெருக்குவதற்கு உதவக்கூடிய வகையில் அவர்களது நிலையான சொத்தின் மதிப்பை உயர்த்துவதற்கு மான்யங்களுடன் கூடிய கடன்கள் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. இக்கடன்கள் அதிகப்பட்சம் ரூ.5000மாகவும் குறைந்த பட்சம் ரூ.3000மாகவும் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

உடனே, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான மூன்றடுக்கு அதிகார அமைப்பு உருவாக்கப்பட்டது. மாநில அரசாங்கம் மற்றும் தேசீய வங்கிகளின் உயர்மட்ட அதிகாரிகள், மைய அரசின் பிரதிநிதிகள் அடங்கிய மாநில ஒருங்கிணைப்புக் கமிட்டி மாநில அளவில் உயர்மட்ட அதிகார அமைப்பாகவும் அதன் கீழ் மாவட்ட கலெக்டர்களை தலைமை உறுப்பாகக் கொண்டு அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் இயக்கப்படும் கிராமப்புற மேம்பாட்டு மாவட்ட மையங்களும் உருவாக்கப்பட்டன. அதன்கீழ், விவசாயிகளுடன் நேரடித் தொடர்பு கொண்ட கீழ்மட்ட அமைப்புகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளை உள்ளடக்கிய கிராமப்புற அபிவிருத்தி அமைப்புகளும் உருவாக்கப்பட்டன.

திட்டத்தை அமுல் படுத்துவதற்கான முழு அதிகாரமும் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அதிகாரம் ஏதுமற்ற ஒப்புக்கு சப்பாணிகளாக சேர்க்கப்பட்டனர். இவ்வாறு, இந்தியா முழுவதும் 5000 மையங்கள் அமைக்கப்பட்டது.

அறுக்க மாட்டாதவனுக்கு இடுப்பில் ஆயிரத்தெட்டு அரிவாள் என்பது போல் நிறைவேறாத திட்டத்திற்கு இப்படி பூதாகரமான அதிகார அமைப்புமுறை உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றும் அதிகாரத்தை ஏகபோகமாகக் கையில் எடுத்துக் கொண்ட அதிகாரவர்க்க கூட்டம் அதன்பிறகு சல்லடைக் கண்கள் போன்று எண்ணிலடங்காத ஓட்டை போட்டு இத்திட்டத்தை உறிஞ்சிக் கொழுக்கும் வேலையில் இறங்கியது.


மையங்களுக்கு ஒதுக்கிய தொகையை விவசாயிகளுக்கு வழங்காமலேயே மொத்தப் பணத்தையும் விநியோகித்து விட்டதாக கணக்கெழுதி பங்குப் போட்டுக் கொள்வது, இத்திட்டத்திற்கென ஒதுக்கிய தொகையை இத்திட்டத்தின் கீழ்வராத வெவ்வேறு இனங்களுக்கு செலவு செய்துவிட்டதாக கணக்கெழுதி சுருட்டிக் கொள்வது, பணத்தை உரிய காலத்தில் விநியோகிக்காமல் பிற முதலீடுகளாகவும் வங்கி இருப்புகளாகவும் கணக்கு காட்டி கையாடல் செய்வது - இப்படி பல்வேறு முறையிலான முறைகேடுகள், கையாடல், ஏமாற்றுக் கணக்குகள் மூலம் இந்தியா முழுவதும் கொடுக்கப்பட்ட 80 சதவிகிதம் கடன் தொகைகள் அதிகார வர்க்கத்தாலும் ஆளுங்கட்சி கும்பலாலும் சூறையாடப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

காங்கிரசு ஆளும் மத்திய பிரதேச மாநிலத்தில் மட்டும் 22 லட்சம் விவசாயக் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்திருப்பதாக கணக்கு காட்டியது காங்கிரசு கும்பல். அமுல் படுத்தப்பட்ட திட்டத்தை ஆய்வு செய்த தணிக்கை துறை, திட்டத்தின் மொத்த செயல் பாடுகளும் குளறுபடியாக்கப் பட்டிருப்பதையும் கணிசமான தொகை கையாடல் செய்யப்பட்டிருப்பதையும் கண்டுபிடித்தது. நேரடி ஆய்வின் மூலம் தணிக்கை மூலமும் நிரூபிக்கப்பட்ட ஆதாரங்களை ரகசிய அறிக்கைகளாக சம்மந்தப்பட்டவர்களிடமே அனுப்பி விளக்கம் கோரியிருக்கிறது!

கடந்த 10 ஆண்டுகளில் 22 லட்சம் விவசாய குடும்பங்களுக்கு 13 மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டதாக கூறப்படும் 80 சதவிகித பணத்திற்கு முறையான கணக்குகளே இல்லை. அப்பகுதிகளில், இவ்வாண்டுகளில் வங்கிகள் மூலம் விநியோகிக்கப் பட்டதாக கூறப்படும் 20.43 கோடி ரூபாய் கடன்களில் வெறும் 1.4 கோடி ரூபாய்தான் இது வரை வசூலிக்கப் பட்டதாக கணக்கெழுதப் பட்டிருக்கிறது. உண்மையில் மீதி பணம் அனைத்தும் அதிகார வர்க்கத்தாலும் காங்கிரசக் கும்பலாலும் சுருட்டப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

'81 ஆம் ஆண்டிலிருந்து '84 ஆம் ஆண்டுவரை அம்மாநிலத்தில் வங்கிகள் மூலம் விநியோகிக்கப் பட்டதாககூறப்படும் 96.17கோடி ரூபாய்களுக்கு தனிநபர் விநியோகிப்பு கணக்கு இதுவரை சமர்ப்பிக்க படவேயில்லை.

தணிக்கை செய்யப்பட்ட கணக்கின்படி கடந்த 8ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தில் விநியோகிக்கப் படாமல் இருக்கும் பணத்தின் மதிப்பு ரூ.77.29 கோடி. ஆனால் மாநில அரசு கையிருப்பு காட்டும் கணக்கோ வெறும் 14.53 கோடி!



நன்றிஒலி; ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் 5000 ரூபாய் கொடுக்கப் பட்டிருப்பதாக கணக்கெழுதி 3000 ரூபாய்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. வண்டி இல்லாமல் வெறும் மாடுகளை வாங்கி வைத்திருக்கிறார்!



படிப்பகம்

www.padippakam.com

இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக கூறப்படும் 13 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்தை தேர்ந்தெடுத்து ஆய்வு செய்ததில், நம்ப முடியாத அளவு ஊழல், முறைகேடுகள் புற்றீசல் போல் கிளம்பியிருக்கிறது. '83 மற்றும் '84 ஆகிய இரு ஆண்டுகளில் அம்மாவட்ட (பஸ்தார் மாவட்டம்) கிராமப்புற அபிவிருத்தி அலுவலகம் கொடுத்த கணக்கின்படி அங்கு கடன் வழங்கப்பட்ட விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை முறையே 2.74 மற்றும் 2.68 லட்சங்கள்.

ஆனால் தணிக்கை கணக்கின்படி முறையே 80,000 மற்றும் 1.91 லட்சம் குடும்பங்களுக்குத் தான் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என நிரூபிக்கப் பட்டுள்ளது. இது ஏட்டளவில் கண்டுபிடிக்கப்பட்ட வித்தியாசம் மட்டுமே! உண்மையில், நடைமுறையில் எத்தனை பேர்களுக்கு விநியோகிக்கப் பட்டிருக்கிறது என்ற விபரம் இல்லை.



விஸ்வகர்மா; மத்திய பிரதேச மாநிலம் பைபால்கெடா கிராம இளைஞர். பற்ற வைப்பாளர் தொழில் படித்த இவருக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் 5000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருப்பதாக கணக்கெழுதப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு கடனே இவர் இதுவரை வாங்கவில்லை.

மேற்கூறிய மாவட்ட அலுவலகம் கொடுத்த கணக்கின்படி '83 ஆம் ஆண்டு வரை அதற்கு ஒதுக்கிய தொகையில் விநியோகிக்காத பணத்தின் மதிப்பு ரூபாய் 93 லட்சம். ஆனால் தணிக்கை கணக்கின்படி கண்டுபிடிக்கப்பட்ட தொகை ரூபாய் 2.87 கோடி. வங்கி இருப்பு, பிற முதலீடுகளைக் கூட விநியோக கணக்கில் காட்டி ஏய்த்திருக்கிறது அம்மாவட்ட அலுவலகம். இன்னும் 16 மாவட்ட அலுவலங்களில் விநியோகிக்கப்படாத ரூபாய் 22.51 கோடிக்கு கணக்கும் இல்லை, கையிருப்பும் இல்லை!

இன்னும் வேடிக்கை என்னவென்றால், கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, ஒதுக்கப்பட்ட தலைப்புகளுக்கு ஒழுங்காக செலவு செய்ய வக்கற்ற அம்மாவட்ட அலுவலகம், ஏறக்குறைய ஒரு கோடி ரூபாயை வேறு வளர்ச்சி(!) திட்டங்களுக்கு செலவழித்திருப்பதாக கணக்கெழுதியிருக்கிறது. பட்டு வாரியங்களுக்கான மையங்கள் திறப்பதற்கு, ரூ.11 லட்சம், காடுகள் பராமரிப்புக்கு ரூ.11 லட்சம்(!) இப்படி ஏகப்பட்ட 'காந்தி' கணக்குகள் எழுதி வைத்திருக்கிறது.

இந்த லட்சணத்தில் அம்மாநிலத்தின் முதல்வராய் இருக்கும் மோதிலால் வோரா என்ற கிழட்டு காங்கிரசு பெருச்சாளி ''ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் எங்களுக்கு (?) ஒதுக்கிய நிதியில் 94 சதவிகிதத்தை நாங்கள் பயன்படுத்தி இருக்கிறோம். அமுல் படுத்தப்பட்ட அறிக்கையை (மாநில அரசு தயாரித்த அறிக்கை) ஆராய்ந்து பார்த்ததில் அத்திட்டம் நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனக்கு முழு திருப்தியை அளிக்கிறது'' என்று வெட்கமில்லாமல் அரசுக் கோப்பில் குறிப்பெழுதி வைத்திருக்கிறார்.

முக்கால் திருடனுக்கு முழு திருடன் வக்காலத்து என்பது போல் முதல்வர் வோராவின் அண்டப்புளுகை முழு உண்மை என்று ஆமோதித்தார் அம்மாநில கிராமப்புற அபிவிருத்தி துறையின் பிரதம செயலர் ஜெ.என். கௌல். கணக்குகளில் தவறேதும் இல்லை. ''அனுமதித்த கடன் தொகைகள் விநியோகிக்கப் படாமல் இருந்தால் அது செலவு செய்த தொகையாகத்தான் (கொடுக்கப்பட்ட கடனாக) கருதப்படும் (கணக்கெழுதப்படும்)'' என்றார்.

விசயம் இத்துடன் நிற்கவில்லை. டெல்லி அரசர் ராஜீவ் தேர்தல் திருவிழா காலங்களில் மேடைகளில் வாசிக்கும் கம்ப்யூட்டர் புள்ளி விபரங்கள் கூட, மத்திய பிரதேசகாங்கிரசார் கண்டுபிடித்த, நவீன கணித சூத்திரங்களின் அடிப்படையில்தான் தயாரிக்கப் படுகிறது.

மத்திய திட்ட கமிஷனின் துணை அமைப்பான திட்ட மதிப்பீடு அமைப்பு (PEO) இத்திட்டத்தின் பயன் மதிப்புப் பற்றி ஆராய இந்தியா முழுமைக்கும் ஒரு ஆய்வு நடத்தியது. இத்திட்டத்தின் மூலம் கடன் பெற்ற 1170 விவசாயக் குடும்பங்களை ஆராய்ந்து கீழ்கண்ட உண்மைகளை அரசுக்கு இரகசியமாக தெரிவித்திருக்கிறது. (ஓட்டுப் பொறுக்கிகளின் பித்தலாட்டங்களையும் உண்மை விவரங்களையும் ஒன்றாகப் பொருத்திப் பார்த்துவிட்டால் ஆபத்தல்லவா? அதனால்தான் உண்மை விபரங்கள் அனைத்தும் ''ரகசியங்கள்'' என்று மூடி வைக்கப் படுகிறது.) கடன் பெற்ற இந்த 1170 பேர்களில் 26 சதவிகிதம் பேர் கடன் பெறுவதற்கு முன்பே வறுமைக் கோட்டுக்கு வெளியே இருப்பவர்கள். ஆக, இந்த ஒரு புள்ளி விபரத்திலேயே ராஜீவின் 4 கோடி 3 கோடியாக சுருங்கி விடுகிறது. 30 சதவிகிதம் பேர் கடன் பெற்ற பிறகும் வறுமைக் கோட்டுக்கு மேலே வரமுடியாமல் தவிக்கின்றனர். திட்டத்தின் அடிப்படை அம்சமான கடன் பெறும் விவசாயக் குடும்பங்களின் நிலையான சொத்தின் மதிப்பை உயர்த்துவது (சொத்து என்றால், ஆடு, மாடு, கோழி, பன்றி, சலவைப் பெட்டி, இழைப்புளி...) 63 சதவிகிதம் குடும்பங்களில் நடைபெறவேயில்லை. மீதி 37 சதவிகிதம் பேர்களில் 26 சதவிகிதம் பேர் கடன் பெறுவதற்கு முன்பே வறுமைக் கோட்டிற்கு வெளியே இருந்தவர்கள் என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

திட்டத்தின் மைய நோக்கமான பஞ்சைப் பராரிகளை (ஆண்டு வருமானம் 1500 க்கும் குறைவாக உள்ளவர்கள்) மேம்படுத்துவது முற்றிலுமாக நடைபெறவில்லை. மொத்தக் கடனில் 15 சதவிகிதம் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது, என்று திட்ட மதிப்பீட்டு அமைப்பு கூறுகிறது.

இவை யாவும் உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் துணிந்து திரட்டிய ஒரு சில தகவல்கள்தான். உண்மை இன்னும் மலையளவு மறைந்திருக்கிறது!

ஆக, ராஜீவ் கும்பல் பகட்டி திரிவது போல் 4 கோடி விவசாயிகள் குடும்பங்கள் அல்ல; 4000 விவசாயிகள் கூட இத்திட்டத்தினால் பயன்பெறவில்லை என்பதுதான் உண்மை. கிராமப்புறங்களை முற்றாக புறக்கணிப்பது, தரகு அதிகார வர்க்க முதலாளிகளை ஊட்டி வளர்ப்பது என்ற ராஜீவ் கும்பலின் புதிய பொருளாதாரக் கொள்கையால் விவசாய பெருமக்கள் இருக்கும் ஓட்டுக் கோவணத்தையும் ஒருவேளை கஞ்சியையும் இழந்து விடும் நாள் வெகு தொலைவில் இல்லை. இனிமேலும் அவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தால் வாங்காத கடனுக்கு வட்டி கேட்டு வீட்டின் (!) நிலைக் கதவையும் பெயர்த்துக் கொண்டு போகும் அதிகார வர்க்க கூட்டம். 40 கோடி விவசாயிகளுக்கு 15,000 கோடி ரூபாய் கடனாக கொடுத்திருப்பதாக தெரிந்தே புளுகுவது இதற்கான ஒரு முன்னோட்டம்தான்!

● **பச்சையப்பன்**

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. அச்சிடுபவர்:

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



கோவிந் நாராயண் சிங், பீகார் மாநிலத்தின் முந்தைய கவர்னர். சமீபத்தில் பீகார் மாநிலத்தில் பதவியிறக்கப்பட்ட முதல்வர் பகவத் ஜா ஆசாத்துக்கு போட்டியாக மாநில அரசியலில் ஆட்டம் போட்டவர். பகவத் ஜா கும்பல், அதிகார முறைகேடுகளிலும் - லஞ்ச ஊழலிலும் ஈடுபடுவதாக கவர்னர் பதவியிலிருந்து கொண்டு ஆர்பாட்டம் செய்த இந்த காங்கிரசு குள்ளநரி அதே நாட்களில் அரசுப் பணம் 50 லட்ச ரூபாயை களவாடிய செய்தி இப்போது வெளியில் வந்துள்ளது.

தான் பதவியை விட்டு இறங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னாள் ராஜ்பவன் உபயோகத்திற்கு என்று அரசு பணம் 50 லட்ச ரூபாயில் அலங்காரப் பொருட்களை வாங்கியிருக்கிறது இக்குள்ளநரி. வேலைப்பாடு மிக்க தரை விரிப்புகள், திரைச்சீலைகள், அரை டஜனுக்கும் மேலான வண்ண வானொளிகள், காற்று உறிஞ்சி மூலம் வீட்டை சுத்தம் செய்யும் நவீன துடப்பங்கள் **(Vaccum Cleaner)** என்று வாங்கிய அனைத்தையும் சொந்த உபயோகத்திற்கு சுருட்டிக் கொண்டு சென்று விட்டார். அது மட்டுமல்ல, பதவி காலத்தில் இவரது குடும்ப உறுப்பினர்கள் நாளொன்றுக்கு 400 ரூபாய்க்கு பழரசமும் மாதம் ஒன்றுக்கு 40 கிலோ நெய்யும் விழுங்கி ஏப்பமிட்ட தகவலும் வெளியில் வந்துள்ளது. போதாக் குறைக்கு "தர்பார் செலவு" (விருந்தினர்களுக்கு கொடுத்த கௌரவ விருந்துக்கான செலவாம்!) என்று ஆண்டொன்றுக்கு 88 ஆயிரம் ரூபாய் தனி செலவு வேறு!



இதோ, உண்ணும் உணவில் அயோடின் தாதுப் பொருள் குறைவால் விகாரமான நோய்க்கு ஆளான இந்த பச்சிளங் குழந்தையையும் சகோதரனையும் பாருங்கள்! தலைக்கு ஆண்டொன்றுக்கு அரசு 50 காசு ஒதுக்கினாலே முன் கழுத்து கழலை என்றழைக்கப்படும் இந்நோயை நாட்டிலிருந்து விரட்டியடிக்க முடியும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்! நாளொன்றுக்கு ஒரு மனிதனுக்கு ஒரு குண்டூசியின் தலையளவு தேவைப்படும் அயோடின் இன்மையால் இந்தியாவில் 20 கோடி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கருவுற்று இருக்கும் தாய்மார்களை கொடிய விஷம் போல் தாக்கும் இந்நோய் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளை அரைமனிதர்களாக்கி செயலிழக்க வைக்கிறது. மூளை, உடல் வளர்ச்சி குன்றி, பேச்சு குழறுதல், காது மந்தம், பாரிச வாயு போன்ற நிரந்தர ஊனத்தை ஏற்படுத்துகிறது. இந்நோயால் பாதிக்கப்படும் இளைஞர்கள், பெரியவர்கள் இலகுவான வேலையைக் கூட தொடர்ச்சியாக செய்ய முடியாத அளவு உடல், உள சக்தியை இழந்து விடுகின்றனர். இதுவரை இயற்கை தானியங்களிலேயே கிடைத்து வந்த இந்த அயோடின், நிலத்தில் மேற்பரப்பு பாதுகாக்கப் படாததாலும், காடுகள் அழிப்பினால் ஏற்பட்ட இயற்கை சூழல் சீர்குலைவினாலும் குறைந்து விட்டது.



மேலை நாடுகளாலும் பிற மூன்றாம் உலக நாடுகளாலும் இந்நோய்க்கு எதிராக நாடுதழுவிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செயல்படுத்தப் படுகின்றன. ஆனால் இங்கோ அயோடின் கலந்த உப்புக்கூட எளிய மக்களுக்கு எட்டாத விலை விற்கிறது.

அதிகாரமுறை கேடு - மோசடியில் ஈடுபடும் கிரிமினல் கும்பலுக்கு மக்களின் வரிப்பணத்தில் நாளொன்றுக்கு 400 ரூபாய்க்கு பழரசம்! சொந்த நாட்டுக்காக ரத்தத்தையும் வியர்வையும் கொட்டும் உழைக்கும் மக்களுக்கு ஆண்டொன்றுக்கு 50 காசு மருத்துவம் கூட இல்லை என்ற அரசு கைவிரிப்பு! நாம் ஊமை சாட்சிகளாக இன்னும் எத்தனை நாட்கள்தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது?

படிப்பகம்